

# காதல் திருமணம்

நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம்

# காதல் திருமணம்

நாமக்கல் கவிஞர்

**வெ. இராமலிங்கம்**

*வெளியிடுவோர்*

**மல்லிகா**

பழைய எண்-60, புது எண்-6,
பொன்னியம்மன் கோயில் தெரு,
ஆலந்தூர், சென்னை - 600 016

## நூல் விளக்கக் குறிப்பு

| | | |
|---|---|---|
| *நூலின் பெயர்* | : | திருமணக் காதல் |
| *ஆசிரியர்* | : | நாமக்கல் கவிஞர்<br>வெ. இராமலிங்கம் |
| *முகப்பு அட்டை* | : | ஓவியர் ஆர்.டி. வினோத் குமார் |
| *பதிப்பாண்டு* | : | முதல் பதிப்பு, 2006<br>திருவள்ளுவராண்டு 2037 |
| *பக்கம்* | : | 136 |
| *எழுத்து* | : | 11 புள்ளிகள் |
| *நூலின் அளவு* | : | டெம்மி |
| *படிகள்* | : | 1000 |
| *தாள்* | : | வெள்ளைத்தாள் |
| *கணிப்பொறி அச்சு* | : | தேவ் டிசைனிங் அண்டு பிரிண்டிங்<br>வேளச்சேரி, சென்னை - 600 042<br>பேசி : 22591924 |
| *அச்சிட்டோர்* | : | மாசறு<br>திருவல்லிக்கேணி<br>சென்னை - 600 005 |
| *விலை* | : | **ரூ.50.00** |
| *பொருள்* | : | **இலக்கியம்** |


## நன்றியுரை

''கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது'' என்று விடுதலைக்காகப் பரணி பாடிய நாமக்கல் கவிஞர் அவர்கள் என்றும் தமிழரின் நெஞ்சத்தில் நீங்கா இடம் பெற்றவர்.

இலக்கிய ஏடுகள் பல தந்தவர். ''தமிழன் என்றொரு இனமுண்டு; தனியே அவர்க்கொரு குணமுண்டு,'' என்று பாடித் தமிழரின் எழுச்சிக்கு வித்திட்டவர்.

அவர் படைத்த இரு கதைகளை இந்நூலில் காணலாம். சுவையான தமிழில் நயமான கற்பனைகளும் பயன்மிக்க கருத்துரைகளும் நிறைந்து நம்மை வரவேற்கின்றன.

கவிஞரின் படைப்புகளை நாட்டுடைமை ஆக்கிய தமிழக அரசுக்குத் தமிழ் மக்கள் என்றும் நன்றி செலுத்துவர்.

பதிப்பாளர்

# பொருளடக்கம்


1. திருமணக் காதல் 5

2. காதல் திருமணம் 111


# திருமணக் காதல்

பத்மாவதி பரீட்சைக்காகப் படித்துக் கொண்டிருந்தாள். யாரும் வந்து தன்னுடைய படிப்பைக் கெடுத்து விடக் கூடாதென்று மாடியிலிருந்த தன் அறைக் கதவைத் தாழிட்டுக் கொண்டிருந்தாள்.

'தடதட' வென்று யாரோ வெகு அவசரமாகக் கதவைத் தட்டினார்கள். கதவு தட்டப்பட்ட வேகத்தைக் கண்டு பத்மாவதி திடுக்கிட்டுத் திகிலடைந்தாள்.

தாவிச் சென்று தாழ்ப்பாளை நீக்கினாள். கதவைத் திறப்பதற்குள் "சுந்தேரசன் இங்கே இருக்கிறானா?" என்ற தாயின் குரல் கேட்டது. கதவைத் திறந்தாள். அவளுடைய தாயார் காமாட்சியம்மாள் கவலை தோய்ந்த முகத்தோடு நின்று கொண்டிருந்தாள்.

"இல்லையேம்மா. சுந்த்ரேசன் இங்கில்லை. ஏன்?"

"இரண்டு மணி நேரமாக அவனைக் காணோமடி. இன்றைக்கு ஞாயிற்றுக் கிழமைதானே? ஞாயிற்றுக் கிழமைகளில் அவன் எங்கேயாவது போவதாயிருந்தால் சொல்லாமல் போகமாட்டானே! ஒரு வேளை அந்தப் பையன்களோடு கிணற்றுக்குப் போய்விட்டானோ என்று என் குலை நடுங்குகிறது. ஐயோ! அவனுக்கு நீச்சல் தெரியாதே. . ." என்று காமாட்சி கண்கலங்கினாள்.

"இல்லையம்மா. அவன் அந்தப் பையன்களோடு போகவில்லை. நீ அவன் போகக்கூடாது என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டுப் போனபிறகு நான் அந்தப் பையன்களிடம் 'சுந்தரேசன் வரமாட்டான். நீங்கள் அவனைக் கூட்டிக் கொண்டுபோக நான் விடமாட்டேன். போய் விடுங்கள்' என்று வெகு கண்டிப்போடு சொன்னேன். அவர்கள் போய்விட்டார்கள். அவர்கள் எல்லாரும் நம் வீட்டுச் சுற்றுச்

சுவரின் வெளிக்கதவைத் தாண்டி வெகு தூரம் போகிறவரையில் நான் சுந்தரேசனுடன் தான் நின்று கொண்டிருந்தேன். பிறகு சுந்தரேசன் அவனுடைய அறைக்குப் போனான். அதைக் கண்டு நான் சுந்தரேசன் அவர்களுடன் போகமாட்டான் என்று இங்கே படிக்க வந்து விட்டேன்'' என்றாள் பத்மா.

"அவன் அவனுடைய அறைக்குள் போன உடனேயே நீ அவனை விட்டு இங்கே வந்துவிட்டாயா?''

"ஆமாம். அதனாலென்ன?''

"அந்தப் பையன்கள் வந்தபோதும், நான் அவர்களுடன் அவன் போகக் கூடாது என்று சொன்ன போதும் சுந்தரேசன் சட்டை போடாமல் வெறும் உடம்போடுதான் இருந்தானல்லவா?''

"ஆமாம். நான் அவனை விட்டு வருகிறபோது அவன், சட்டை போட்டுக் கொள்ளாமல்தான் இருந்தான்.''

"இப்போது போய்ப் பார். அவனுடைய சட்டையும் செருப்புகளும் அவனுடைய அறையில் இல்லை. அவன் சட்டை மாட்டிக் கொள்ளத்தான் அறைக்குள் போயிருக்கிறான். நீ அவன் போகமாட்டான் என்று எண்ணிக் கொண்டு இங்கே வந்து விட்டாய். நானும் வேலையாக உள்ளே இருந்து விட்டேன். தடுப்பாரில்லாமல் அவன் அந்தப் பையன்களைத் தொடர்ந்துதான் போயிருக்கிறான். ஐயோ! நீச்சல் தெரியாத என் குழந்தை!. . . சிறு பையல்களோடு. . . நினைக்க நினைக்க நெஞ்சம் பதைக்கிறதே! எனக்கென்னமோ பயமாகத் தானிருக்கிறது'' என்று அன்னை அழத் தொடங்கிவிட்டாள்.

சுந்தரேசனுடைய சட்டையும் செருப்புகளும் அவனுடைய அறையில் இல்லை யென்று தாயார் சொன்னதைக் கேட்டபின் பத்மாவதிக்கும் பயமுண்டாகி விட்டது. ஞாயிற்றுக்கிழமைகளில் அவன் எங்கேயாவது போக விரும்பினால் சட்டையைப் போட்டுக் கொண்டவுடனே அம்மாவிடத்திலும் அக்காளிடத்திலும் எங்கே போகிறான், எதற்காகப் போகிறான், எப்போது திரும்பிவருவான் என்ற விவரங்களைச் சொல்லிவிட்டுத்தான் போவான். தூரமாகப் போகவேண்டியிருந்தால் தங்கள் வீட்டு மோட்டார் வண்டியில்தான் போவான். அவன் புறப்படும்போது மோட்டார் வீட்டிலில்லாமலிருந்தால் அது திரும்பி வந்தவுடன் இன்ன இடத்துக்கு அதை அனுப்பும்படிச் சொல்லி விட்டுப் போவான். அம்மாளிடம் சொல்லத் தவறினாலும் அக்காளிடம் சொல்லத் தவறமாட்டான்.



அப்படிப்பட்டவன் இன்று யாரிடத்திலும் சொல்லாமற் போயிருப்பது அஞ்சத் தக்கதுதான். அவன் அந்தப் பையன்களுடன் கிணற்றுக்குத்தான் போயிருக்க வேண்டுமென்று பத்மா தீர்மானித்தாள். உடனே மடமடவென்று மாடியை விட்டுக் கீழே ஓடினாள். காமாட்சியம்மாளும் அவளைப் பின் தொடர்ந்தாள்.

காமாட்சியம்மாளுடைய கணவர் ஜானகிராமன் அரசாங்கத்தில் உயர்ந்த பதவியிலுள்ள உத்தியோகஸ்தர். காமாட்சியம்மாளுக்கு முதல் ஐந்து குழந்தைகளும் பெண்கள். ஆறாவது குழந்தைதான் அருமையாகப் பிறந்த ஆண் குழந்தை சுந்தரேசன். அவன் தான் கடைசிக் குழந்தை. வீட்டுக்கு ஒரே ஒரு ஆண் குழந்தையான சுந்தரேசன் தாய் தந்தைக்கும் தமக்கைகளுக்கும் மிகவும் செல்லக் குழந்தை. ஒரு தாய்க்கு அவளுடைய கடைசிக் குழந்தை மீதுதான் அதிகமான பாசம் இருக்கும் என்பது உலக வழக்கு. சுந்தரேசன் கடைசிக் குழந்தை என்பதோடு தான் பெற்ற ஒரே ஆண் குழந்தை என்பதனால் காமாட்சியம்மாள் தன் உயிரையே சுந்தரேசனிடத்தில் வைத்திருந்தாள்.

பத்மாவதி சுந்தரேசனுக்கு நேர் மூத்தவள். அவளுக்கும் அவனிடத்தில் அளவற்ற பாசம். மற்ற நான்கு தமக்கைகளும் அவனிடத்தில் பாசம் உள்ளவர்கள்தாம். ஆனால் அவர்கள் நால்வரும் கலியாணம் ஆனவர்கள். வெவ்வேறு ஊர்களில் கணவன் வீட்டில் இருப்பவர்கள். எப்போதாவது வந்து போவார்கள். ஆனால் பத்மா அவனுடைய குழந்தைப்

பருவத்திலிருந்து கூடவே இருக்கிறவள். அதனால் சுந்தரேசனுக்குப் பத்மாவிடத்தில் மற்றவர்களிடத்தில் இருந்ததைவிடப் பற்றுதல் அதிகம். அவன் குழந்தையாக இருக்கும் போது பத்மாதான் அவனை எந்நேரமும் தூக்கி வைத்துக்கொண்டு கொஞ்சுவாள். அவனுக்கு வெகு சிறிய நோய் வந்தாலும் பத்மா பதைத்து விடுவாள். தானே ஓடிப்போய் வைத்தியரிடம் சொல்லுவாள். அவர் வந்து பார்த்துக் கொடுக்கிற மருந்தை அவளே தம்பிக்குக் கொடுப்பாள். மருந்தைச் சாப்பிடச் சுந்தரேசன் சிணுங்கினாலும் அவனைப் பலவிதமாகக் கெஞ்சிக் கெஞ்சி எப்படியாவது மருந்தை உட்கொள்ளச் செய்து விடுவாள். அவனும் மற்றவர்கள் யாராவது மருந்தைக் கொடுக்க வந்தால் 'பத்மா அக்காள் வரட்டும்' என்று மறுத்துவிடுவான். தனக்குக் கொடுக்கப் படுகிற தின்பண்டங்களையும் பத்மா தம்பிக்கு ஊட்டி மகிழ்வாள். தம்பி உணவு கொள்ளாமல் தமக்கை சாப்பிட மாட்டாள். பள்ளிக்கூட நேரங்களில் தவிர மற்ற நேரமெல்லாம் பத்மா சுந்தரேசனுடன் தான் இருப்பாள். வேடிக்கை, விநோதம்; நாடகம், நாட்டியம்; சினிமா, சர்க்கஸ்; கலியாணம், காட்சி. தேர்; திருவிழா; கோயில், . குளம்; எதற்கானாலும் தம்பியில்லாமல் போகமாட்டாள், பத்மாவதி.

இப்படியாகப் பத்மாவதிக்குச் சிறு பிராயத்திலிருந்து தம்பியின் மீது வளர்ந்து வந்த பாசம் இப்போது உச்ச நிலையிலிருந்தது.

சுந்தரேசன் மிகவும் அழகான இளைஞன். நல்ல நிறம். நடுத்தரமான உயரம். வாட்டசாட்டமான அங்கங்கள். வசீகரமான முகம். இனிய பார்வை, எப்போதும் உதடுகளில் இளஞ்சிரிப்பு, அன்பான சொற்கள், அமைதியான குணம், சுறுசுறுப்பான செய்கை, சுசிகரமான பழக்க வழக்கங்கள் ஆகிய இவ்வளவும் அவனுக்கு அமைந்திருந்தன. ஒரு முறை அவனோடு பழகினவர்கள் எப்போதும் அவனை விரும்புவார்கள், படிப்பிலும் கெட்டிக்காரன்.



பத்மாவதிக்கு வயது பத்தொன்பது; சுந்தரேசனுக்குப் பதினேழு. பத்மா பி. ஏ. இறுதிப் பரீட்சைக்குப் படித்துக் கொண்டிருந்தாள். சுந்தரேசன் 'இண்டர்' இறுதிப் பரீட்சைக்குப் படித்துக்கொண்டிருந்தான்.

கால்பந்து, கிரிக்கெட், வாலிபால் முதலிய பள்ளிக் கூட விளையாட்டுகளில் சுந்தரேசனுக்கு நல்ல பழக்க முண்டு. நீச்சல் கற்றுக்கொள்ள வேண்டுமென்ற ஆசை அதிகம். குடும்பத்திற்கு அருமையான ஒரே ஆண் குழந்தை. அவனைத் தக்க துணையில்லாமல் நீச்சல் கற்றுக் கொள்ள அனுப்பக் கூடாதென்பது வீட்டிலுள்ளவர்களின் விருப்பம். அதனால் அவன் நீச்சல் கற்றுக் கொள்ள ஆசைப்பட்டது நிறைவேறத் தாமதப்பட்டது. ஒருநாள் பள்ளிக்கூடத்தில் அவனுடைய தோழர்களிற் சிலர் நீச்சல் கற்றுக்கொள்ளக் கூட்டு சேர்ந்தார்கள். அவர்களுடன் சுந்தரேசனும் வருவதாகச் சொல்லியிருந்தான். இடுப்பில் கட்டிக்கொண்டு மிதக்கக், கயிறு கட்டிய சுரைக்குடுக்கை ஒன்று தயார் செய்துகொண்டு அடுத்த ஞாயிற்றுக்கிழமை மாந்தோப்புக் கிணற்றுக்குப் போவது என்று தீர்மானித்திருந்தார்கள். அந்தத் திட்டத்தின்படி தான் அவனோடொத்த ஏழெட்டு இளைஞர்கள் சுந்தரேசனையும் கூட்டிக்கொண்டு போக வந்தார்கள். வழக்கம் போல் சுந்தரேசன் தாயாரிடம் அனுமதி கேட்டான். அவள் வெகு கண்டிப்பாக மறுத்துவிட்டாள். பத்மாவதியும் அந்தப் பையன்களைப் பயமுறுத்திப் போகச் சொல்லிவிட்டாள். அவர்களும் போய்விட்டார்கள். சுந்தரேசன் அவர்களோடு போகவில்லை. ஆனால் இப்போது அவனைக் காணோம். எங்கே போயிருப்பான்?

பத்மாவதி வெகு வேகமாக மாடியிலிருந்து கீழே ஓடி வந்தாள். வரும்போதே அவளுக்கு அந்தப் பையன்கள் 'தோப்புக் கிணறு' என்று பேசிக்கொண்டது நினைவுக்கு வந்தது. அவன் அங்கேதான் போயிருக்கவேண்டும் என்று அனுமானித்தாள்.

அந்த வீட்டிலிருந்து சுமார் மூன்று பர்லாங்கு தூரத்தில் ஒரு மாந்தோப்பு உண்டு. அதில் பலவிதமான மாமரங்கள் நிறைந்திருக்கும். பருவகாலத்தில் அந்தத் தோப்புக்கு அடுத்துள்ள சாலையில் மாம்பழங்கள் விற்கப்படும். பல முறை பத்மா அங்கே பழம் வாங்கியிருக்கிறாள். அந்தத் தோப்பு அவள் பள்ளிக்கூடத்துக்குப் போகும் வழியில்தான் இருந்தது. சில சமயங்களில் தோப்புக்குள்ளே போயும் பழம் வாங்கியிருக்கிறாள். தோப்பின் நடுவில் ஒரு பெரிய கிணறு இருப்பதும், அது நல்ல படிக்கட்டுகள் உள்ளதாக, நீந்தி விளையாடத் தகுந்த அகலமும் ஆழமும் உடையதாக இருப்பதும் அவளுக்குத் தெரியும்.

அந்தத் தோப்பை நோக்கி ஓடினாள் பத்மாவதி. அவள் ஒரு பர்லாங்கு தாண்டுவதற்குள் எதிரில் ஒரு பெரிய கும்பல், ஓட்டமும் நடையுமாக வந்துகொண்டிருந்தது. அக்கும்பல் அவளை அணுகியவுடனே, கும்பலின் முன்னணியில் யாரோ ஒரு கட்டுமஸ்தான வாலிபன், ஒரு இளைஞனைத் தோளில் தூக்கிக்கொண்டு வருவதைக் கண்டாள். அவனைத் தொடர்ந்து வந்தவர்களில், தன்னுடைய தம்பியைக் கிணற்றுக்குக் கூட்டிக்கொண்டு போக வந்திருந்த சில பையன்கள் இருப்பதைப் பார்த்தவுடன் பத்மாவின் உள்ளம் பகீரென்றது. உடனே வாலிபன் தோளில் சுமந்துகொண்டு வந்த உருவத்தை உற்றுப் பார்த்தாள். அடையாளம் தெரிந்துவிட்டது. அது சுந்தரேசன்தான். தொங்கிக் கொண்டிருந்த காலைத் தொட்டுப் பார்த்தாள். அது சில்லிட்டிருந்தது. ''ஐயோ! தம்பீ! தலையில் கல்லைப் போட்டுவிட்டாயே!'' என்று அலறிக்கொண்டே கீழே விழுந்து மூர்ச்சையடைந்து விட்டாள்.

சுந்தரேசனைச் சுமந்துகொண்டு வந்த வாலிபன் பத்மாவதி விழுந்துவிட்டதற்காக நிற்காமல் வேகமாகச் சென்று விட்டான். கும்பலும் அவனோடு போய்விட்டது. அந்தக் கூட்டத்தோடு வந்த நடுத்தர வயதுள்ள கூலி வேலை செய்யும் ஒரு ஏழைப் பெண்மணி பத்மாவதியின் பக்கத்தில் அமர்ந்து அவளை மெதுவாகத் தூக்கி மார்பில் சாய்த்துக்கொண்டு, 'அது உனக்குத் தம்பியாம்மா! பயப்படாதே! தம்பி பொளச்சிக்கும். அந்த ஐயா கிணத்து மேட்டு மேலேயே தம்பியைத் தலைகீழாப் புடிச்சி உலுக்கி உலுக்கிக் குடிச்ச தண்ணியெல்லாம் கக்கப் பண்ணிட்டாரு. தம்பி பொளச்சிக்கும். எளுந்திரம்மா'' என்று இடுப்பைப் பிடித்துத் தூக்கிவிட்டாள். 'தம்பி பொளச்சிக்கும்' என்று சொன்னது பத்மாவதிக்கு மயக்கத்தைக் குறைக்கும் மருந்தாக உதவிற்று. பத்மாவதி தம்பி இறந்துவிட்டதாகத்தான் எண்ணினாள். அந்தப் பெண் பிள்ளை சொன்னதைக் கேட்டபின் பத்மாவதி பாதி மயக்கம் நீங்கிக் கண்ணைத் திறந்து தன்னைத் தாங்கிப் பிடித்துக்கொண்டிருந்த பெண்ணைப் பார்த்தாள். அந்தப் பெண் மறுபடியும் ''பயப்படாதே, அம்மா. தம்பி பொளச்சிக்கும். அந்த ஐயா நல்ல சமயத்திலே கெணத்திலே குதிச்சுத் தம்பியைத் தூக்கிபுட்டாரு. பயப்படாதே; வாம்மா போகலாம். நம்ப ஊடு எங்கே? கூட நான் வர்ரேன். என்னைப் புடிச்சிக்கிட்டே நடக்கலாம் வாம்மா'' என்று பத்மாவதியை அணைத்துப் பிடித்துக்கொண்டு மெதுவாக நடக்கச் செய்தாள். பத்மாவுக்கு மயக்கம் முற்றிலும் தெளியவில்லை. ஆனாலும் தம்பி பிழைத்துக் கொள்வதைப் பார்க்கவேண்டுமென்ற ஆசையினால் மெள்ள மெள்ள நடக்கலானாள்.

இதற்குள்ளாக, கதிரேசனைச் சுமந்து சென்ற வாலிபன் வெகு வேகமாக நடந்து சுந்தரேசனுடைய வீட்டுக்குப் போய்விட்டான். பத்மாவதி தம்பியைத் தேடப் போன நிமிஷம் முதல் அவளுடைய வரவை எதிர்பார்த்து வாசலிலேயே நின்றுகொண்டிருந்த தாயார் காமாட்சியம்மாள், தண்ணீர் சொட்டச் சொட்ட மகனைத் தூக்கி வந்த மாதிரியிலிருந்தே உண்மையை ஊகித்துக்கொண்டாள். பெற்ற வயிறு பற்றிக் கொண்டது. தலையிலும் வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு அவள் அலறித் துடித்ததை என்னென்று சொல்ல

முடியும்? இடியோசை போல் காமாட்சியம்மாள் கதறிய அழுகுரலைக் கேட்டு அக்கம் பக்கத்து ஜனங்களெல்லாம் ஓடிவந்து, பெருங்கூட்டம் சேர்ந்துவிட்டது. தன்னுடைய மூச்சுத் திணறும்படி சுந்தரேசனைச் சுமந்துகொண்டு வந்த வாலிபன், காமாட்சியம்மாளையும் கவனிக்காமல் வீட்டுக்குள் போய் அங்கிருந்த ஒரு கட்டிலின் மீது சுந்தரேசனைக் கிடத்தி விட்டு மூச்சு வாங்கினான். மகன்மேல் விழுந்துவிடுவாள் போல் கட்டிலின் பக்கமாகத் தாவிச்சென்ற காமாட்சியம்மாளைத் தடுத்து அவளுடைய கைகளைப் பற்றி இழுத்துக்கொண்டு அப்பால் வந்து,

"அம்மா! உங்கள் மகன் உயிர் பிழைக்கவேண்டுமானால் நீங்கள் அவனை இப்போது தொடக்கூடாது" என்று கண்டித்துவிட்டு அருகிலிருந்தவர்களிடம் அந்த அம்மாள் சுந்தரேசன் அருகில் போகாதபடி பார்த்துக் கொள்ளச் சொல்லிவிட்டு வெகு வேகமாக வெளியே ஓடினான், அந்த வாலிபன்.

சிறிது நேரத்தில் அந்த வாலிபன் ஒரு டாக்டருடன் திரும்பி வந்தான். டாக்டர் சரியாகப் பரிசோதிக்காமலேயே வெகு அவசரமாக ஒரு ஊசி மருந்தைக் குத்தினார். சுந்தரேசன் மூக்கிலும் வாயிலும் நுரை வழிந்துகொண்டிருந்தது. அதைத் துடைத்து விட்டு, ஒரு தைலத்தைக் கொடுத்து அதை உச்சியிலும் மார்பிலும் உள்ளங்கால்களிலும் தடவி, அழுத்தித் தேய்க்கச் சொன்னார். வாலிபன் நெடுநேரம் தேய்த்தான். அதன் பிறகு டாக்டர் 'ஸ்டெத்தாஸ் கோப்' பைக் கொண்டு நிதானமாகப் பரிசோதித்தார். அவர் என்ன சொல்லப் போகிறாரோ என்று வாலிபன் அவருடைய வாயையே பார்த்துக்கொண்டிருந்தான். அவர் ஒன்றும் சொல்லாமல் மறுபடியும் ஒரு ஊசி மருந்தைக் குத்திவிட்டு, முன்போலவே தைலத்தைத் தேய்க்கச் சொன்னார். வாலிபன் சலிப்பின்றி தேய்த்துக் கொண்டே யிருந்தான். தேய்த்துக் கொண்டிருக்கும் போதே மறுபடியும் டாக்டர் பரிசோதித்தார். இந்தத் தடவை அவருடைய முகத்தில் சிறிது மகிழ்ச்சிக் குறி காணப்பட்டது.



தேய்த்துக் கொண்டிருந்த வாலிபனும் சுந்தரேசனுடைய உடம்பில் கொஞ்சம் சூடு உண்டாகியிருப்பதை உணர்ந்தான். டாக்டர், அந்த அறையின் மூலையிலிருந்த ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுக் கட்டிலுக்கு அருகில் அமர்ந்தார். அதுவரையிலும் சுருங்கியிருந்த அவருடைய முகம் இப்போது மலர்ந்தது. அதுவரையிலும் சுந்தரேசனுடைய உருவத்தை விட்டு வேறு எதிலும் தம்முடைய பார்வையைத் திருப்பாதிருந்த அவர் இப்போதுதான் அந்த அறையின் மற்றப் பகுதிகளில் பார்வையைச் செலுத்தினார். டாக்டர் அங்கு வந்தவுடனே சுந்தரேசன் கிடந்த கட்டிலைச் சுற்றிலும் இருந்த எல்லாரையும் வெளியே போய்விடும்படி வெகு கண்டிப்பாகச் சொல்லிவிட்டார். சுந்தரேசனுடைய தாயாரை மட்டும் அந்த அறைக்குள் கட்டிலைவிட்டு எட்ட இருக்கும்படி கேட்டுக்கொண்டார். அதே சமயத்தில் பத்மாவதியும் உள்ளே வந்தாள். அவளையும் தாயாருடன் இருக்க அனுமதித்துவிட்டுக் கதவை மூடித் தாழிட்டு விட்டார். காமாட்சியம்மாளும் பத்மாவதியும் அந்த அறையின் ஒரு கோடியில் நின்று விம்மி விம்மி அழுது கொண்டிருந்தார்கள். டாக்டர் அதைப் பொருட்படுத்தாமல் காரியத்தில் கருத்தாயிருந்தார். நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு நாலா பக்கத்திலும் நாட்டம் செலுத்திய அப்போதுதான் பையனுடைய தாயாரும் தமக்கையும் அங்கே இருப்பது நினைவுக்கு வந்தது. அவர்களை ஆர்வத்தோடு பார்த்தார்.

சுந்தரேசன் பிழைப்பானோ மாட்டானோ என்று துடித்துத் தவித்துக்கொண்டிருந்த தாயும் தமக்கையும் டாக்டருடைய செய்கைகளைக் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தார்கள். இதுவரையிலும் நின்றபடியே, வேறெங்கும் திரும்பாமல் கவலை தோய்ந்த முகத்தோடு சிகிச்சையைக் கவனித்துக்கொண்டிருந்த டாக்டர் இப்போது நாற்காலியில் அமர்ந்துகொண்டு, மலர்ந்த முகத்தோடு தம்மைப் பார்ப்பதைக் கண்ட பத்மாவதியும் காமாட்சியம்மாளும் அவர் தங்களுடைய பயத்தைப் போக்கும் சேதி சொல்வாரோ என்று பரிவோடு பார்த்தார்கள்.

''அம்மா, அழவேண்டாம். அபாயம் நீங்கிவிடக்கூடிய அறிகுறிகள் தோன்றி விட்டன'' என்றார் டாக்டர்.

காதில் அமிழ்தத்தை ஊற்றியது போன்ற அவ் வார்த்தைகளைக் கேட்ட தாயும் தமக்கையும் டாக்டருக்கு அருகிற் சென்று சுந்தரேசன் உடம்பை உற்றுப் பார்த்தார்கள். உடம்பு அசைவற்றுத்தான் கிடந்தது. ஆனால் இலேசாக மூச்சுவிடுவது தெரிந்தது. அச்சம் குறைந்து அன்னையும் மகளும், டாக்டரையும் தூக்கிக் கொண்டு வந்த வாலிபனையும் கைகூப்பி வணங்கினார்கள்.

டாக்டர், காமாட்சியம்மாளிடம் ஒரு நல்ல கம்பளிப் போர்வை கொண்டுவரும்படி சொன்னார். உடனே பத்மாவதி ஓடிப்போய் அந்த அறையின் மூலையில் சுருட்டி வைக்கப்பட்டிருந்த ஒரு படுக்கையை விரித்து அதிலிருந்த காஷ்மீரக் கம்பளிச் சால்வையை எடுத்து வந்து கொடுத்தாள். டாக்டரும் வாலிபனும் சேர்ந்து, மெதுவாகச் சுந்தரேசனுடைய முகத்தைத் தவிர உடம்பு முழுவதையும் மூடி வைத்தார்கள்.

டாக்டர் மறுபடியும் நாடியைப் பரிசோதித்து மிகவும் திருப்தி அடைந்தவராய்,

''அப்படியே இருக்கட்டும். யாரும் தொடக் கூடாது. சிறிது நேரத்தில் மூச்சுவிடுவது சரியாகிவிடும். நினைவு வர நேரமாகும். அதனால் குற்றமில்லை. நான் வேறொரு நோயாளியைப் போய்ப் பார்த்துவிட்டு மறுபடியும் வருகிறேன். இனிமேல் பயப்பட வேண்டியது ஒன்றுமில்லை'' என்று காமாட்சியம்மாளிடம் சொல்லிவிட்டு, சுந்தரேசனைத் தூக்கி வந்து காப்பாற்றிய வாலிபனைப் பார்த்து,

''ராஜாராம், உங்களுடைய தீரத்தையும் தியாக புத்தியையும் எவ்வளவு பாராட்டினாலும் போதாது. தக்க சமயத்தில் இவனைக் கிணற்றிலிருந்து தூக்கிவிட்டது மட்டுமன்றி உடனே அங்கேயே இவன் குடித்திருந்த தண்ணீரெல்லாம் வெளியில் வந்து விடும்படி 'முதல் உதவி' செய்தது மிகவும் மெச்சத்தக்க காரியம். அப்படிச் செய்திரா



விட்டால் வழியிலேயே உயிர் போயிருக்கும். நான் வந்து பார்த்தவுடனே ஜீவன் இருக்கிற குறிகளைக் கண்டு தான் ஊசி மருந்தைச் செலுத்தினேன். அது பலித்தது. என்னுடைய வைத்தியத்தைக் காட்டிலும் நீங்கள் செய்த சிகிச்சைதான் இவனைக் காப்பாற்றியது. நீங்கள் சாரணர் படையில் பயிற்சிபெற்று அதில் பரிசு பெற்றது எனக்குத் தெரியும். இப்போது நீங்கள் ஜானகிராமன் அவர்களுடைய குடும்பத்துக்குச் செய்துள்ள சாரணச் சேவைக்கு என்ன பரிசு கொடுப்பதென்று எனக்குத் தெரியவில்லை'' என்றார்.

ராஜாராம் பதில் சொல்லாமல் தலைகுனிந்து கேட்டுக் கொண்டிருந்தான்.

தன் தம்பியைக் காப்பாற்றிய அந்த வாலிபனை, டாக்டர் 'ராஜாராம்' என்று அழைத்ததும், அந்த ராஜாராம் சாரணத் தலைவனாகப் பரிசு பெற்றவன் என்று சொன்னதும் காதில் விழுந்தவுடன் பத்மாவதியின் உள்ளத்தில் மின்விளக்கு ஏற்றியதுபோல் பளிச்சென்று ஒரு நினைவு தோன்றி உடல் சிலிர்த்தது.

ராஜாராம் முகத்தைக் கூர்ந்து பார்த்தாள். ராஜாராம் இன்னும் இடுப்பில் இறுகக் கட்டியிருந்த ஈர வேட்டியோடு தான் இருந்தான். இந்நேர வரையிலும் தலையை நட்டுக்கொண்டு, சுந்தரேசன் உடம்பில் தைலத்தைத் தேய்த்துக் கொண்டிருந்ததால் அவனுடைய தலையில் முன் பக்கத்திலிருந்த மயிர்கள் அலங்கோலமாகத் தொங்கி முகத்தைச் சிறிதளவு மூடிக் கொண்டிருந்தன. அத்துடன் முகத்தில் வியர்வை வழிந்துகொண்டிருந்தது, என்றாலும் சற்று நேரம் உற்றுப்பார்த்த பத்மாவதி,

''ஆ! நீங்களா! எங்கள் குடும்பத்துக்கே உயிர் கொடுத்தது நீங்கள்தானா! டாக்டர் சொன்னது போல உங்களுக்கு என்ன பரிசு கொடுப்பதென்றே தெரியவில்லை. எதைக் கொடுத்தாலும் தகும். எவ்வளவு நன்றி காட்டினாலும் போதாது.'' என்றாள்.

தேனினும் தித்திப்புத்தந்த அந்தப் புகழுரையைக் கேட்டு ராஜாராம் தலையை நிமிர்த்திப் புன்சிரிப்போடு பத்மாவதியைப் பார்த்துக்கொண்டே தன் முகத்தில் தொங்கிக் கொண்டிருந்த தலைமயிரைப் பின்புறமாகத் தள்ளிவிட்டு, முகத்தில் வடிந்து கொண்டிருந்த வியர்வையை வெறுங்கையால் துடைக்கலுற்றான். உடனே பத்மா ஓடிச்சென்று ஒரு வெளுத்த சலவைத் துண்டைக் கொண்டு வந்து கொடுத்தாள். அதைக்கொண்டு முகத்தை நன்றாகத் துடைத்துக் கொண்டான். துடைத்த பிறகு ராஜாராமின் அடையாளம் பத்மாவதிக்கு நன்றாகத் தெரிந்தது.

ராஜாராமன், பத்மாவதி படிக்கும் கல்லூரியிலேயே பி.எஸ்ஸி வகுப்பில் படிக்கும் மாணவன். அவன் சாரணப் படையின் தலைவனாகக் கல்லூரியில் பரிசு பெற்றபோது பத்மா அவனைப் பார்த்திருக்கிறாள். ஒரு சமயம் அவனே தன்னிடம் வந்து ஏதோ ஒரு புத்தகத்தைப் பற்றிப் பேசியதும் அதற்கு அவள் சரியாக முகங்கொடுத்துப் பேசாமல் கூசிக்கூசி ஏதோ பதில் சொன்னதும் இப்போது நினைவுக்கு வந்தது. இன்னொரு சமயம் ராஜாராமன் பத்மாவதியின் வீட்டுக்கே வந்து அவளுடைய தந்தை ஜானகிராமன் அவர்களுடன் பேசிக் கொண்டிருந்ததையும் பத்மா பார்த்திருக்கிறாள். அப்போதும் அவள் அவனிடத்தில் கவனம் செலுத்தவில்லை.

அப்போதெல்லாம் ராஜாராமனிடத்தில் காணக் கிடைக்காத சிறப்புகளைத் தன்னுடைய அருமைத் தம்பியின் உயிரைக் காப்பாற்றி விட்ட இப்போது கண்டு விட்ட பத்மாவதி கண்கொட்டாமல் அவனையே பார்த்துக்கொண்டு நின்றாள். அலங்காரமான உடைகளை அணிந்த மாணவனாக அவன் காட்சியளித்த அப்போதெல்லாம் அவனிடத்தில் காணாத கவர்ச்சியை, இடுப்பிலிருந்த ஈரத்துணியைத் தவிர வேறு உடையில்லாமல் வெற்றுடம்போடு ஒரு வேலைக்காரனைப் போல் காணப்பட்ட இப்போது அவனிடத்தில் கண்டாள்.

இந்தச் சமயத்தில் தாழிடப்பட்டிருந்த கதவு தட்டப்பட்டது. வெளியே போகத் தயாராயிருந்த டாக்டரே



கதவைத் திறந்தார். ''எங்கே சுந்தரேசன்? எப்படியிருக்கிறது, இப்போது?. . . '' என்று படபடப்போடு கேட்டுக் கொண்டே தந்தை ஜானகிராமன் உள்ளே வந்தார்.

''பயப்பட வேண்டாம். சுந்தரேசனுக்கு நேர்ந்த அபாயம் நீங்கிவிட்டது'' என்று டாக்டர் சொன்னதைக் கேட்டுப் படபடப்பு குறைந்து மகனைப் பார்த்தார். அப்போது சுந்தரேசன் உடம்பில் உணர்ச்சி ஊறிவருவதற்கு அறிகுறியாக அசைவு காணப்பட்டது. சிறிது நேரத்தில் தலையும் அசைந்தது. டாக்டர் மறுபடியும் நாடியைப் பரிசோதித்துவிட்டு ''மிகவும் திருப்திகரமாக இருக்கிறது. நினைவு வர நேரமாகலாம். அதைப்பற்றி அஞ்சவேண்டியதில்லை'' என்றார்.

ஜானகிராமன் டாக்டருக்கு நன்றி தெரிவித்து வந்தனம் செய்தார். உடனே டாக்டர்,

''உங்களுடைய நன்றியும் வந்தனமும் எனக்கு உரியவையல்ல. இதோ, இருக்கிறாரே, ராஜாராம். அவருக்குத்தான் நாமெல்லோரும் நன்றியும் வந்தனமும் செலுத்த வேண்டும். அவர்தாம் சுந்தரேசனைக் காப்பாற்றியவர்'' என்று ராஜாராமனைச் சுட்டிக் காட்டினார்.

மகனைப் பற்றிய கவலையினால் இதுவரையிலும் ராஜாராமனைக் கவனிக்காத ஜானகிராமன், ராஜாராமனைக் கூர்ந்து பார்த்தார். அவன் புன்சிரிப்போடு நிமிர்ந்து பார்த்தான். ''ஆ! ராஜாராமனா! அட ராஜா! நீதானா அவனைக் காப்பாற்றியது!'' என்று ஜானகிராமன் ராஜாராமனைக் கட்டித் தழுவிக் கொண்டார்.

அதைக் கண்ட பத்மாவதிக்கு அவள் ராஜாராமனிடத்தில் வைத்த மதிப்பு பலமடங்கு அதிகப்பட்டது. அவனைப் புகழ்ந்து பாராட்டிப் பேச வேண்டுமென்று அவளுடைய உள்ளம் ஆசைப்பட்டது; உதடுகள் துடித்தன.

''அப்பா, இவர் மட்டும் இல்லாதிருந்தால் சுந்தரேசன் நம் தலையில் கல்லைப் போட்டுவிட்டுப் போயிருப்பான்.

இவருக்கு எவ்வளவு நன்றி சொன்னாலும் போதாது. எதைக் கொடுத்தாலும் ஈடாகாது. இவரைத் தெய்வமாக நாம் வணங்க வேண்டும். தம்பியைக் கிணற்றிலிருந்து எடுத்தவுடனே இவர் செய்த 'முதலுதவி' சிகிச்சைதான் அவனைக் காப்பாற்றியது. அது மட்டுமா? இவர் ஒருவரே அவனைத் தூக்கிக்கொண்டு வெகு வேகமாக இங்கே கொண்டுவந்து கட்டிலிற்போட்டு விட்டு ஓடிப்போய் டாக்டரைக் கூட்டிக்கொண்டு வந்தார். டாக்டர் சொன்னபடியெல்லாம் தைலத்தைத் தேய்த்துக் கொண்டேயிருந்து தம்பிக்கு மூச்சுவரச்செய்தார். ஐயோ! இவர் வந்து உதவியிராவிட்டால் இந்நேரம் தம்பி....... தம்பி...... தம்பி......'' என்று தேம்பித் தேம்பி அழத் தொடங்கிவிட்டாள். தம்பியின்மேல் அவ்வளவு பாசம். அவனைக் காப்பாற்றியவன் மீது அவ்வளவு விசுவாசம். பத்மாவதி தேம்புவதைக் கண்டு அதுவரையிலும் கவலை நீங்கியிருந்த காமாட்சியம்மாளும் கண்ணைக் கசக்கத் தொடங்கினாள். அது பெண்மையின் பிறவிக் குணம்.

ஜானகிராமன் ராஜாராமைப் பார்த்து, ''இவன் எப்படிக்கிணற்றில் விழ நேரிட்டது! இவன் விழுந்து விட்டது உனக்கெப்படித் தெரிய வந்தது?'' என்று கேட்டார். அதற்கு ராஜாராமன்,

''இவன் எப்படி விழுந்துவிட்டான் என்பது எனக்குத் தெரியாது. நான் வழக்கமாக அந்த மாந்தோப்புக் கிணற்றில்தான் நீந்தி விளையாடிக் குளிப்பது. அந்த மாந்தோப்பு எங்கள் வீட்டுக்கு அருகிலுள்ளது என்பது தங்களுக்கும் தெரியும். வழக்கம்போல் இன்று அந்தக் கிணற்றுக்குப் போனேன். கிணற்றுக்குச் சிறிது தூரத்துக்கு முன்னால் ஏழெட்டு இளைஞர்கள் எதிரே வந்து கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருவன் நீச்சல் கற்றுக் கொள்ள உதவுகின்ற கயிறு கட்டிய சுரைக் குடுக்கையை வைத்திருந்ததைக் கண்டேன். அவர்கள் அந்தக் கிணற்றில் நீச்சல் கற்றுக் கொள்ளத்தான் வந்துவிட்டுப் போகிறார்கள் என்பது தெரிந்தது. நான் அவர்களைக் கடந்து கிணற்றுக்குப் போய்ப் படிகளில் இறங்கி என் சட்டையைக் கழற்றினேன். அப்போது அங்கே யாருமில்லை. சட்டையைச் சுருட்டி வைத்துவிட்டுத் தண்ணீரில் குதிக்கப் போனேன். அப்போது ஒரு மனிதனுடைய தலை தண்ணீருக்குள் இருந்து மேலே வருவதுபோல் தெரிந்தது. உடனே எம்பிக் குதித்தேன். தலைமயிரைப் பிடித்து இழுத்து வந்து படிகளின் மீது கிடத்தினேன். அப்போது தெய்வச் செயலாக ஒரு ஏழைப் பெண்மணி தாகத்துக்குத் தண்ணீர் குடிக்கப் படிக்கட்டுகளில் இறங்கி வந்தாள். நான் சொல்லுவதற்கு முன் அவளே விஷயத்தை அறிந்து கொண்டு அலறிவிட்டாள். ஆனாலும் மிக்க அனுதாபத்தோடு அருகில் வந்த தொட்டுப் பார்த்தாள். அவளுடைய ஒத்தாசையுடன் கிணற்று மேட்டுக்குத் தூக்கிச் சென்றேன்.



''இப்படிப்பட்ட விபத்துகளில் உடனே செய்ய வேண்டிய 'முதலுதவி'ச் சிகிச்சைகளை முறைப்படி செய்தேன். நல்ல வேளையாக இவன் குடித்திருந்த தண்ணீர் வெகு சீக்கிரத்தில் வெளியே வந்துவிட்டது. அது மிக நல்ல அறிகுறி. உடனே அந்தப் பெண்ணிடம் சொல்லி இவனை நேராக நிறுத்திப் பிடித்துக்கொள்ளச் செய்தேன். நடுத்தர வயதுள்ளவளும் நல்ல பலசாலியாகவும் இருந்த அந்தப் பெண்பிள்ளை நான் விரும்பியபடியே இவனைத் தூக்கி நேராக நிற்பதுபோல் பிடித்துக் கொண்டாள். என்னுடைய தலையை இவனுடைய இரண்டு கால்களுக்கிடையில் நுழைத்துக்கொண்டு இரண்டு கால்களையும் என் இரண்டு கைகளாலும் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு தூக்கினேன். இவனுடைய உடம்பும் தலையும் என்னுடைய முதுகில் கவிழ்ந்து தொங்கும்படியாகக் கால்களை மட்டும் உறுதியாகப் பிடித்துக்கொண்டு வேகமாக நடந்தேன். அந்தப் பெண்பிள்ளையும் எனக்கு ஒத்தாசை செய்யவே பின்தொடர்ந்தாள். முன்னால் போய்க்கொண்டிருந்த இளைஞர்கள் எங்களைக் கண்டு நான் சுமந்து கொண்டு வந்தது யார் என்பதை அறிந்த பிறகுதான் சுந்தரேசன் தங்களுடன் இல்லாதிருப்பதை உணர்ந்தார்கள் என்பதை அவர்கள்

பேச்சுகளிலிருந்து அறியலானேன். சுந்தரேசன் அவர்களோடு சேர்ந்துதான் நீச்சல் பழகியிருக்கிறான். எல்லாரும் சேர்ந்தாற்போல்தான் வீட்டுக்குப் போகக் கிணற்றிலிருந்து மேலே வந்திருக்கிறார்கள். கிணற்றை விட்டுச் சிறிது தூரம் வந்த பிறகு எல்லாருக்கும் பின்னால் வந்துகொண்டிருந்த சுந்தரேசன் எதற்காகவோ தெரியவில்லை; மறுபடியும் கிணற்றுக்குள் தனியே போயிருக்கிறான். அப்போது எப்படியோ தவறி விழுந்து விட்டான். அந்தப் பையன்கள் பேசிக்கொண்டதிலிருந்து நான் அறிந்தது இதுதான். இது உண்மையாகத்தான் இருக்கவேண்டும். ஏனென்றால் நான் சுந்தரேசனைத் தண்ணீரிலிருந்துத் தூக்கினபோது இவனுடைய இடுப்பில் வேட்டி இருந்தது. அதன்மீது 'பெல்ட்' டைப் போட்டு இறுக்கியிருந்தான். அவன் குடித்திருந்த தண்ணீரை வெளியேற்ற அவனை உயரப் பிடித்து உலுக்குவதற்கு அந்த 'பெல்ட்' மிகவும் உதவியாக இருந்தது. அத்துடன் உடம்பில் சட்டையும் இடக்கை மணிக்கட்டில் கடிகாரமும் இருந்தன. இவன் எதற்காகத் தனியே போய் மறுபடியும் கிணற்றில் இறங்கினான் என்பதும் எப்படி விழுந்தான் என்பதும் நாளைக்கு அவனே சொல்லும்போதுதான் தெரியும்'' என்றான்.

டாக்டர், வேறொரு நோயாளியைப் பார்க்கப் போக வேண்டுமென்று முன்னாலேயே புறப்பட்டவர், ஜானகிராமன் வந்ததாலும் ராஜாராமன் சொன்னதைச் சுவைத்துக் கேட்டுக்கொண்டிருந்தாலும் அதை மறந்திருந்தார். ராஜாராமன் சொல்லி முடித்ததும் டாக்டர் மறுபடியும் வருவதாக விடை பெற்றுக்கொண்டு அந்த அறையை விட்டு வெளியே போனார். அவரோடு பேசிக்கொண்டே ஜானகிராமனும் போனார். சுந்தரேசனுக்குச் சுயநினைவு வந்து அவன் பசிக்கிறது என்றால் பத்தியமாக என்ன ஆகாரம் கொடுப்பது என்று டாக்டரைக் கேட்டுக் கொண்டே காமாட்சியம்மாளும் பின் தொடர்ந்தாள்.

பத்மாவதி, தன்னுடைய தம்பி தாராளமாக மூச்சு விடுவதையும் தலையையும் உடம்பையும் அசைப்பதையும்



பார்த்துக்கொண்டிருந்தாள். ராஜாராமன் பத்மாவதியையே பார்த்துக்கொண்டிருந்தான்.

அருமைத் தம்பி பிழைத்துக்கொண்டான் என்ற பூரிப்பினால் பொங்கும் மகிழ்ச்சியுடன் பத்மாவதி ராஜாராமனைப் பரிவோடு பார்த்தாள். அந்த மகிழ்ச்சியை வரவேற்பது போல் ராஜாராமன் புன்முறுவல் செய்தான். பத்மாவதியோ அவளுடைய முத்துப்பற்கள் துலங்கும்படி முழுமுறுவல் செய்தாள்.

"உங்கள் சாமர்த்தியமே சாமர்த்தியம்! உங்கள் தைரியமும் வல்லமையும் யாருக்கு வரும்! நீங்களில்லா விட்டால் இந்நேரம் என் தம்பி......" என்று பத்மாவதி சொல்லி முடிக்குமுன் ராஜாராமன்,

"போதும், என்னை இப்படிப் புகழவேண்டாம். நான் என்ன பிரமாதமான காரியம் செய்துவிட்டேன்? ஒவ்வொரு மனிதனும் செய்யவேண்டிய கடமையைத்தான் செய்தேன். சாதாரண மனிதர்களே இதைச் செய்ய வேண்டியது கடமை யென்றால் சாரணப் பயிற்சியில் தேர்ந்த நான் இதைச் செய்ய வேண்டியது கட்டாயக் கடமையல்லவா? என்னை இப்படி நீங்கள் புகழ்வது. . . ." என்று முடிக்குமுன் பத்மாவதி குறுக்கிட்டு,

"நீங்களா! அதென்ன என்னை 'நீங்கள்' என்று வயசுக்குத் தகாத மரியாதை போட்டுப் பேசுகிறீர்கள்? உங்களுக்கு நான் வயசில் சின்னவள். நான் உங்களை 'நீங்கள்' என்பது நியாயம். என்னை அப்படி நீங்கள் அழைப்பது சரியல்ல" என்றாள்.

"பின் எப்படி அழைக்கட்டும்?"

"ஏன்? 'நீ' என்று சொல்லுங்கள். 'பத்மா' என்று அழையுங்கள்" எனறாள்.

"சந்தோஷம். எனக்கும் உன்னை அப்படி அழைக்கத் தான் ஆசை. ஆனால் முன் ஒருநாள் நான் கல்லூரியில்

உன்னோடு பேச வந்தபோது நீ பதில் சொன்ன மாதிரியிலிருந்து எனக்கு உன்னை 'நீ' என்றோ 'பத்மா' என்றோ சொல்லத் துணிவு வராமல்தான் 'நீங்கள்' என்று சொல்லி விட்டேன்'' என்றான்.

"ஓ! அதுவா! ஆம். நீங்கள் கல்லூரியில் பேச வந்த போது உங்களை எனக்குத் தெரியாது. இப்போது உங்களை நன்றாகத் தெரிந்துகொண்டேன். அப்போது உங்களை ஒரு மாணவனாகத்தான் மதிக்க முடிந்தது. இப்போது உங்களைத் தெய்வமாக மதிக்கின்றேன். அப்போது உங்களோடு முகங்கொடுத்துப் பேசாததற்கு இப்போது வருந்துகிறேன். மன்னித்திடுங்கள்'' என்றாள்.

இந்த சமயத்தில் காமாட்சியம்மாள் மகனைப் பார்க்க அறைக்குள் வந்தாள். மகனுடைய நிலைமை மிகவும் திருப்திகரமாக இருப்பதைக் கண்டு மகிழ்ச்சியடைந்து, அவனைக் காப்பாற்றிய ராஜாராமனை மீண்டும் கையெடுத்துக் கும்பிட்டு வாழ்த்தினாள்.

"அப்பா, ராஜாராம்! மணி இரண்டாகிவிட்டதே, சாப்பிடவேண்டாமா? பத்மாவதி சுந்தரேசனைப் பார்த்துக் கொள்வாள். முதலில் நீ வந்து சாப்பிட்டுவிடு. வா நான் போய் இலை போடுகிறேன்'' என்று சொல்லிக் கொண்டே காமாட்சியம்மாள் இலை போடப் போய்விட்டாள். அன்னை சொன்னதை ஆமோதிப்பதுபோல் பத்மாவதி ராஜாராமனைப் பரிவோடு பார்த்தாள்.

"பத்மா, நீ கொஞ்சநேரம் சுந்தரேசனை கவனித்துக் கொள். நான் வீட்டுக்குப் போய் உடை மாற்றிக்கொண்டு வந்துவிடுகிறேன்'' என்றான் ராஜாராம்.

"ஐயோ! அது முடியாது. நான் உங்களை வீட்டுக்குப் போக விடமாட்டேன். நீங்கள் இல்லாவிட்டால் எனக்கு நிம்மதியிருக்காது. தம்பியைக் கவனிப்பதிலும் தவறு நேர்ந்துவிடலாம். தம்பிக்கு நினைவு வந்து அவன் உங்களுக்கு



நன்றி தெரிவித்து விடை கொடுக்கிற வரைக்குமாவது நீங்கள் விட்டுப் பிரியக்கூடாது. உங்களுக்கு வேண்டிய உடைகள் நான் தருகிறேன். இல்லாவிட்டால் உங்கள் வீட்டுக்கு மோட்டாரை அனுப்பி, உங்களுடைய உடைகளைக் கொண்டுவரச் செய்கிறேன். நீங்கள் இங்கே தங்கிவிட நேர்ந்த விவரத்தையும் உங்கள் வீட்டாருக்குச் சொல்லி வரச் செய்கிறேன். தயவு செய்யுங்கள். என் வேண்டுகோளை மறுக்கக்கூடாது'' என்ற கொஞ்சும் மொழிகளில் கெஞ்சினாள்.

அதைக் கேட்ட அந்த வாலிபனுடைய உள்ளம் குளிர்ந்து உடலம் சிலிர்த்தது. அவனுக்கும் அவளை விட்டுப் போக மனமில்லைதான். ஆனால் அந்த அழகிக்கு முன்னால் உடை தரிக்காமல் அப்படி அலங்கோலமாக நின்று கொண்டிருப்பது அவனுக்கு அருவருப்பாகவே இருந்தது. வீட்டுக்குப் போய் அலங்காரம் செய்துகொண்டு வரவேண்டும் என்ற ஆசைதான்.

"சரி, உன் விருப்பத்தை மறுப்பேனா?'' என்றான். உடனே பத்மாவதி விரைந்து சென்று, அங்கிருந்த அலமாரியிலிருந்து வெளுத்த ஜரிகை வேட்டியும் அங்கவஸ்திரமும் கொண்டுவந்து அவன் கையிற் கொடுத்துவிட்டு, மீண்டும் போய்த் தலைவாரிக்கொள்ள வாசனைத் தைலம், சீப்பு, கண்ணாடி முதலியவற்றைக் கொண்டுவந்து மேஜை மீது வைத்துவிட்டு அந்த அறையை விட்டுப் போய் விட்டாள்.

பத்மாவதியின் பரிவையும் பாசத்தையும் எண்ணி எண்ணி ராஜாராமன் பரவசப்பட்டான். கிடைக்குமா என்று ஆசைப்பட்டு, கிடைக்காது என்று எண்ணிய அரும்பொருள் கிடைத்துவிட்டது என்ற மகிழ்ச்சியோடு மயங்கி நின்றான். கிணற்றில் விழுந்துவிட்ட சுந்தரேசனைக் காப்பாற்றும்படியான வாய்ப்புத் தனக்குக் கிடைத்தது பெரும் பாக்கியமெனக் கருதினான். அரை நொடிக்குள் ஆயிரம் இனிமையான திட்டங்கள் அவனுடைய மனத்தில் உதித்து அலைமோதிப் புரண்டன.

பத்மாவதி கொடுத்த வேட்டியை உடுத்துக் கொண்டான். தைலம் தடவித் தலையை வாரிக்கொண்டான். அங்கவஸ்திரத்தால் உடம்பை மூடிக்கொண்டு சுந்தரேசனுக்கு அருகில், முன் டாக்டர் இழுத்துப் போட்ட நாற்காலியில் அமர்ந்து வெகு ஆவலோடு பத்மாவின் வரவை எதிர்பார்த்துக்கொண்டிருந்தான்.

ராஜாராமன் இயல்பாகவே மிக்க கவர்ச்சியுள்ள கட்டழகன். உடற் பயிற்சிக்கான எல்லா விளையாட்டுகளிலும் தேர்ச்சி பெற்றவன். திரண்டு உருண்ட அவயவங்களும் நல்ல தேக பலமும் உள்ளவன். நல்ல குணமும் ஒழுக்கமும் உள்ளவன். படிப்பிலும் கெட்டிக்காரன். பத்மாவதியின் தந்தை ஜானகிராமனுக்கு நண்பரான சிவசுப்ரமணியம் என்ற பெரிய வழக்கறிஞரின் மகன். இயற்கை அழகோடு செயற்கை அழகுகளும் சேர்ந்தவன். எப்போதும் விலையுயர்ந்த நவீன நாகரிக உடைகளில் தான் தோற்றமளிப்பான். அவனுடைய தோழர்கள் அவனை 'டம்பாச்சாரி' என்று கேலி செய்வார்கள். பல பெரிய இடத்துப் பெற்றோர்கள் அவனைத் தங்கள் மருமகனாக்கிக் கொள்ள ஆசைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். பத்மாவின் தந்தை அவருடைய உத்தியோக அலுவலகத்துக்குப் போகிற வழியில்தான் ராஜாராமனின் வீடு. பத்மாவின் தந்தை அடிக்கடி ராஜாராமன் வீட்டில் தங்கி அவனுடைய தந்தை சிவசுப்ரமணியத்தோடு பேசுவதுண்டு. அதனால் ராஜாராமனை அவருக்கு நன்றாகத் தெரியும். அவனுடைய உடலுறுதியையும், வடிவழகையும், உல்லாச உடையையும், விரும்பத் தகுந்த சுபாவத்தையும் கூர்ந்து கவனித்திருக்கிறார். அதனால் தான் அவர் அவனைப் பார்த்தவுடனே, ''ஆ! ராஜாராமனா! அட ராஜா! நீதானா அவனைக் காப்பாற்றியது?'' என்று மகிழ்ந்தார்.

வெகு நேரம் பத்மாவதி வரவில்லை. இரண்டு தடவை காமாட்சியம்மாள் தான் மகனைப் பார்க்க வந்து போனாள். ராஜாராமன் சுந்தரேசன் தூங்குகின்றவனைப் போல் நன்றாக மூச்சு விடுவதையே பார்த்து மகிழ்ந்துகொண்டிருந்தான்.



பத்மாவதி அறைக்குள் வந்தாள். காலடி ஓசை கேட்டுத் திரும்பிப் பார்த்த ராஜாராமன் திகைத்து விட்டான். அவன் கண்டது அவனுடைய மனக்கண்ணில் நிலவிய பத்மாவதியை அல்ல. சற்று முன் தன்னோடு வெகு இனிமையாகப் பேசிக்கொண்டிருந்து வெளியே சென்ற பத்மாவதியை அல்ல. அவளுடைய தங்கையோ வேறு யாரோ என்று தடுமாறச் செய்துவிட்ட அவளினும் அழகான ஒரு புதிய உருவத்தைக் கண்டான். அறையை விட்டுப்போன பத்மாவதி குளிக்கத்தான் போயிருந்தாள். தம்பியை ராஜாராமன் தூக்கிக்கொண்டு வந்ததைப் பார்த்த பத்மாவதி தம்பி இறந்துபோனான் என்றே நினைத்து அலறிக்கொண்டு கீழே விழுந்து மூர்ச்சையாகி விட்டாளல்லவா? அப்போது மண்ணில் புரண்டு புழுதி படிந்த ஆடையோடுதான் ராஜாராமனோடு முன்னே பேசிக் கொண்டிருந்தாள். ராஜாராமனுக்கு வெளுத்த உடைகளைத் தரும்போதே தானும் குளித்துவிட்டு ஆடையை மாற்றிக்கொள்ளவேண்டும் என்ற எண்ணம் அவளுக்கு உதித்தது. குளித்துவிட்டுத் தலையை வாரிப் பின்னிக் கொண்டு, தங்கத் தகடுபோன்ற நெற்றியில் சிகப்புக்கல் பதித்தது போலச் செஞ்சாந்துப் பொட்டிட்டுக் கொண்டு, ரோஜாப்பூ நிறமான மெல்லிய பட்டுப் புடவை கட்டிக் கொண்டு, விபூதி, சந்தனம், குங்குமம் இவைகளடங்கிய ஒரு வெள்ளித் தட்டத்தை ஏந்திக்கொண்டு இப்போது வந்தாள். முன்னே அவள் உடுத்தியிருந்த ஆடை இருண்ட நீல நிறமாக இருந்தது. முன்னே அவளுடைய கூந்தல் பின்னல் இல்லாமல் முடியப்பட்டுக் கலைந்திருந்தது. முன்னே அவளுடைய கண்கள் கலங்கியிருந்தன. முன்னே அவளுடைய உதடுகள் காய்ந்து சுருங்கிக் கருமை படர்ந்திருந்தன.

இப்போது அந்த அடையாளங்கள் மிகவும் மாறுபட்டிருந்ததால் அவளைப் பார்த்த ராஜாராமன் திகைத்து விட்டதில் ஆச்சரியமில்லை. அவன் திகைப்போடு தன்னைப் பார்த்து விழிப்பதின் காரணத்தைக் கண்டு கொண்ட பத்மாவதி.

''ஏன்? அடையாளம் தெரியவில்லையா? நான் குளித்துவிட்டு உடையை மாற்றிக் கொண்டேன்'' என்றாள்.

''ஆமாம். பத்மா, உண்மையில் எனக்கு அடையாளம் தெரியாமல்தான் விழித்தேன். இந்த மாற்று உடையில் நீ ஒரு தேவதையைப்போல் விளங்குகின்றாய்'' என்றான்.

''ஏன், நீங்களும் உங்கள் உடை மாற்றத்தால் அப்பா உங்களை 'அட ராஜா? நீ தானா இவனைக் காப்பாற்றியது!' என்று சொன்னது போல் நீங்கள் ஒரு ராஜா மாதிரிதான் இருக்கிறீர்கள். இதோ உங்களுக்காகச் சந்தனம், விபூதி, குங்குமம் எல்லாம் கொண்டு வந்திருக்கிறேன். நெற்றிக்கு இட்டுக் கொள்ளுங்கள். சாந்து வேண்டுமானாலும் கொண்டு வருகிறேன். பொட்டு வைத்துக் கொள்ளுங்கள். வெகு நேரமாகிவிட்டது. உங்களைப் பசியோடு காக்க வைத்து விட்டதற்கு மன்னியுங்கள்'' என்றாள்.

அதைக் கேட்டு ஆனந்தப் பரவசமடைந்து விட்ட ராஜாராமன் அதற்குப் பதில் சொல்லுவதற்கு வாயெடுக்கும் போது காமாட்சியம்மாள் அறைக்குள் வந்தாள். அவளுக்குப் பின்னால் அந்த வீட்டுச் சமையற்காரி ராஜாராமனுக்கு உணவுகள் அடங்கிய ஒரு பெரிய அடுக்குப் பாத்திரத்தைச் சுமந்துகொண்டு நுழைந்தாள்.

''பத்மா, நான் ராஜாராமனுக்கு இங்கேயே சாப்பாடு கொண்டுவந்து விட்டேன். நீ உள்ளே போய் சாப்பிடு'' என்றாள் காமாட்சியம்மாள்.

''ஏம்மா, நானும் இங்கேயே சாப்பிட்டு விடுகிறேனே? இவரோடு எனக்கும் ஒரு இலை போடேன்'' என்றாள் பத்மா.

மகளுடைய விருப்பத்தின்படியே இரண்டு இலைகள் போடச் செய்து காமாட்சியம்மாளே பரிமாறினாள்.

தானும் அங்கேயே சாப்பிடவேண்டுமென்று பத்மாவதி தாயாரிடம் சொன்னதும், அவள் தனக்கருகில் உட்கார்ந்து



கொண்டு உணவு கொண்டதும் ராஜாராமனை நிலைகொள்ள விடவில்லை. அந்த நினைப்பே அவனுடைய வயிற்றை நிரப்பி விட்டது. அவனுக்குச் சாப்பாடு செல்லவில்லை. அவன் சரியாகச் சாப்பிடவில்லை. அதைக் கண்ட பத்மாவதி துடிதுடித்துப் போனாள்.

''ஐயோ! இதென்ன? நீங்கள் சாப்பிடவே யில்லையே! இலையில் போட்டதெல்லாம் அப்படியே இருக்கிறதே! ஏன், சங்கோஜமா, அல்லது சமையல் பிடிக்கவில்லையா?'' என்றாள்.

''அதெல்லாம் ஒன்றுமில்லை, பத்மா; உன்னிடத்தில் எனக்குத் துளிகூடச் சங்கோஜமில்லை. சமையலும் நன்றாகத் தான் இருக்கிறது. உன்னுடைய அபரிதமான அன்பே என்னுடைய பசியை ஆற்றிவிட்டது'' என்றான்.

''என்னுடைய அன்பு உங்களுக்குக் கொள்ளை கொள்ளையாக உண்டு. அதனால் நீங்கள் எப்போதும் சரியாகச் சாப்பிடாமல் இருந்து விடலாமா? உடம்பு இளைத்துப் போனால் இன்றைக்கு நீங்கள் தம்பியைக் காப்பாற்றச் சுமந்துகொண்டு வந்ததைப் போன்ற தீரச் செயல்களை எப்படிச் செய்ய முடியும்'' என்றாள்.

கண்ணையும் கருத்தையும் ஒருங்கே கவர்ந்துவிட்ட அந்தப் பூங்கொடி கூறிய புகழுரையைக் கேட்ட ராஜாராமன், பொங்கி வழியும் பூரிப்போடு பத்மாவதியின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வதற்கென்றே மிக்க பசி யுள்ளவன் போல் புசிக்கலானான்.

சாப்பாடு முடிந்தது. காமாட்சியம்மாள், பத்மாவதி, ராஜாராமன் ஆகிய மூவரும் சுந்தரேசன் கட்டிலுக்கருகில் நின்று அவன் நிலைமையைக் கவனித்துக் கொண்டிருந்தார்கள். அப்போது சுந்தரேசன் உருப்படி தெரியாத வார்த்தைகளை 'அம்மா', 'அக்கா' என்று அனற்றினான். உடனே பத்மாவதி,

''தம்பீ! இதோ அம்மா இங்கேதான் நிற்கிறாள், அக்காவும் உன் பக்கத்தில்தான் இருக்கிறேன். உன்னைக்

காப்பாற்றிய நம் குலதெய்வம் போன்ற இவரும் இருக்கிறார். உனக்கு என்னப்பா வேணும்? பசிக்கிறதா? கஞ்சி குடிக்கிறாயா?. .... காப்பி கொண்டு வரட்டுமா?.... என்ன வேணும், சொல்லு'' என்று பரிந்து, பரிந்து பல கேள்விகள் கேட்டாள்.

சுந்தரேசன் பதில் சொல்லவில்லை. திருப்பித் திருப்பி 'அம்மா' 'அக்கா' என்று முனகிக்கொண்டிருந்து விட்டு அனற்றுவதையும் விட்டு விட்டுத் தூங்குவதுபோல் காணப்பட்டான்.

''அவனுக்கு இன்னும் பிரக்ஞை வரவில்லை. இப்போது ஒன்றும் தொந்தரவு செய்யவேண்டாம். தூங்கட்டும்'' என்றான் ராஜாராமன்.

அதுவரையிலும் சாப்பிடாமல் இருந்த காமாட்சியம்மாள் சாப்பிடப் போய்விட்டாள். சமையற்காரியும் இவர்கள் சாப்பிட்ட இலைகளை எடுத்துச் சுத்தம் செய்து விட்டுப் பாத்திரங்களையும் எடுத்துக்கொண்டு போய் விட்டாள். ராஜாராமன் பத்மாவதியின் அழகைப் பார்த்துக் கொண்டே நின்றான்.

அதைப் பார்த்த பத்மாவதி, ''ஐயோ! நின்று கொண்டேயிருக்கிறீர்களே நாற்காலியிலாவது உட்காருங்கள். இதோ வந்துவிட்டேன்'' என்று அறையைவிட்டு வீட்டுக்குள் போனாள். சிறிது நேரத்தில் ஒரு கட்டிலைத் தானே தூக்கிக் கொண்டு வந்தாள். அதை அந்தஅறையின் கோடியில் போட்டு அதன்மீது ஒரு மெத்தையை விரித்து இரண்டு தலையணைகளையும் வைத்துவிட்டு ராஜாராமனைப் பார்த்து, ''இன்றைக்கு உங்களுக்கு எவ்வளவு சிரமம்! அலுப்புத் தீர இதில் கொஞ்ச நேரம் படுத்திருங்கள். தம்பியை நான் கவனித்துக் கொள்ளுகிறேன்'' என்று கட்டிலைக் காட்டினாள்.

''எனக்காகவா நீ இவ்வளவு சிரமப்பட்டுக் கட்டிலைத் தூக்கிக் கொண்டு வந்தாய்? பத்மா, உன் அன்பே அன்பு! ஆனாலும் எனக்கொன்றும் அலுப்பில்லை. கொஞ்சநஞ்சம்



அலுப்பிருந்தாலும் அது உன்னோடு பேசிக்கொண்டிருந்தாலே போய்விடும். எனக்குப் படுக்கை வேண்டாம். நாம் பேசிக் கொண்டிருப்போம். அது போதும்'' என்றான் ராஜாராமன்.

''எனக்கும் உங்களோடு பேசிக்கொண்டிருப்பதில் வெகு பிரியம். கல்லூரியில் ஒரு நாள் நீங்கள் என்னோடு பேச வந்தபோது நான் உங்களுடன் சரியாகப் பேசாத குற்றத்துக்குப் பிராயச்சித்தமாக இப்போது.......''

காமாட்சியம்மாள் அறைக்குள் வந்தாள். அவளுக்குப் பின்னால் அவளுடைய கணவரும் டாக்டரும் வந்தார்கள். சுந்தரேசனுடைய நாடியைப் பார்ப்பதற்காக டாக்டர் அவனுடைய கையைப் பிடித்தார். அவன் தூக்கம் கலைந்தவன் போல் கண்ணைத் திறந்து சிறிது நேரம் மருள மருள விழித்துப் பார்த்துவிட்டு மறுபடியும் கண்ணை மூடிக் கொண்டான். நாடியைப் பரிசோதித்த டாக்டர்,

''உடலைப் பற்றிய உணர்ச்சிகள் ஊறி விட்டன. ஆனால் மனசைப்பற்றிய உணர்ச்சிகள் ஊறவில்லை. விரைவில் எல்லாம் சரியாகிவிடும்'' என்று சொல்லிச் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்து விட்டுப் போய்விட்டார்.

பத்மாவதியும் அவளுடைய பெற்றோரும் கேட்டுக் கொண்டபடி ராஜாராமன் அன்றிரவு அங்கேயே படுத்துக் கொண்டான். காமாட்சியம்மாளும் பத்மாவதியும் சுந்தரேசன் படுத்திருந்த கட்டிலுக்குப் பக்கத்தில் கீழே படுத்துக் கொண்டார்கள்.

ராஜாராமனுக்குத் தூக்கமே வரவில்லை. பத்மாவதியின் அன்பையும், அவள் தன்னை அடிக்கடி புகழ்ந்து பாராட்டுவதையும், தன்னை மகிழ்விக்கவென்றே அவள் மிகச் சிறந்த மாற்றுடையில் அலங்கரித்துக்கொண்டு குங்குமம், சந்தனம், திருநீறு முதலிய மங்கலப் பொருள்களைத் தனக்கென்று கொண்டுவந்ததையும், தன்னருகில் அமர்ந்து

உணவுகொள்ள விரும்பியதையும், தான் சரியாகச் சாப்பிடவில்லை என்பதைக் கண்டு சங்கடப் பட்டதையும், தன்னுடைய அலுப்புத் தீரப் படுத்திருக்கவென்று அவளே கஷ்டப்பட்டு ஒரு கட்டிலைத் தூக்கிக்கொண்டு வந்து அதில் படுக்கை விரித்துப் படுத்துக் கொள்ளச் சொன்ன பரிவையும், முன் கல்லூரியில் தன்னுடன் சரியாகப் பேசாத குற்றத்துக்குப் பிராயச்சித்தமாக இங்கே பேசலாம் என்று சொன்னதையும் இன்பம் பொங்க எண்ணிக் கொண்டே படுத்திருந்தான். இடையிடையே எழுந்து சுந்தரேசனையும் கவனித்துக் கொண்டான்.

பத்மாவதியும் தூங்கவில்லை. அவளும் அடிக்கடி எழுந்து தம்பியின் நிலைமையைக் கவனித்துக் கொண்டிருந்தாள்.

பனிரண்டு மணிக்குமேல் சுந்தரேசன் சுயநினைவு வந்தவனாகி, ''அக்கா! பத்மா அக்கா! அம்மா'' என்று கூப்பிட்டான். பத்மாவதி துடித்தெழுந்து ''தம்பீ! இதோ பத்மா அக்கா உன் பக்கத்திலேயே இருக்கிறேன். உனக்கு என்ன வேணும்'' என்றாள்.

சுந்தரேசன் தன்னுடைய வலது கைப் பெருவிரலைத் தன் வாயண்டை வைத்துத் தாகமாக இருக்கிற தென்று சாடைகாட்டினான். உடனே ராஜாராமன் டாக்டர் சொல்லியிருந்தபடித் தயாராக வைத்திருந்த 'பார்லி' கஞ்சியில் 'குளூகோஸ்' கலந்து பத்மாவிடம் கொடுத்தான். அவள் அதைச் சிறுகச் சிறுக சுந்தரேசன் வாயில் ஊற்றிக் குடிக்கச் செய்தாள். தாகந் தீரக் குடித்துவிட்டுச் சுந்தரேசன் பரக்க விழித்துப் பத்மாவதியையே சிறிது நேரம் உற்றுப் பார்த்துவிட்டு ''அக்கா, நான் கிணற்றில் விழுந்து முழுகிப்போனேனே, இங்கே எப்படி வந்தேன்?'' என்று முனகினான்.

சுந்தரேசன் அதைச் சொல்லி முடிப்பதற்குள் பத்மாவதி, அவளுக்குப் பின்னால் நின்று கொண்டிருந்த



ராஜாராமன் கையைப் பிடித்துச் சுந்தரேசனுக்கு முன்னால் இழுத்து விட்டு, ''இதோ இந்த ராஜாதான் உன்னைக் காப்பாற்றியவர். இவர் அப்போது அந்தக் கிணற்றுக்கு வராதிருந்தால்.... ஐயோ தம்பீ...''

''ஐயோ தம்பீ' என்ற கடைசி வார்த்தைகளைச் சொல்லும்போது விழித்துக்கொண்ட அன்னை காமாட்சியம்மாள் திடுக்கிட்டெழுந்து, ''என்ன? என்ன? என்னடி பத்மா? தம்பிக்கு என்ன?'' என்று அலறிக்கொண்டு அருகில் வந்தாள். பத்மா நடந்ததைச் சொல்லி அன்னையின் அச்சத்தைப் போக்கினாள்.

''இப்போது அவனுடன் பேச்சுக் கொடுத்துச் சிரமப் படுத்த வேண்டாம். எல்லாம் விடிந்தபின் விவரமாய்ப் பேசிக்கொள்ளலாம். அவன் தூங்கட்டும். நீங்களும் போய்ப் படுத்துக்கொள்ளுங்கள்'' என்று பத்மாவிடம் சொல்லிவிட்டு, மகனைத் தொட்டுத் தடவிப் பார்த்துக் கொண்டே, ''சுந்து, தூங்குடா சாமி. உடம்பு அலுப்புத் தீரட்டும். காலையில் பேசிக் கொள்ளலாம்'' என்றாள் காமாட்சியம்மாள்.

தாயார் பேச்சைத் தட்டிவிட்டுக் கிணற்றுக்குப் போன குற்றம் அவன் மனத்தை உறுத்தியதோ என்னவோ, உடனே சுந்தரேசன், ''ஆகட்டும் அம்மா, நான் பேசாமல் தூங்குகிறேன்'' என்று சொல்லிவிட்டுக் கண்ணை மூடிக் கொண்டான்.

வழக்கம்போல் அதிகாலையில் விழித்துக் கொண்ட காமாட்சியம்மாள் மகன் சுகமாகத் தூங்குவதைக் கவனித்து விட்டுக் காரியம் பார்க்க வீட்டுக்குள் போய் விட்டாள். ஆறுமணிக்கு விழித்தெழுந்த பத்மாவதி தம்பியும் ராஜாராமனும் நன்றாகத் தூங்கிக்கொண்டிருப்பதைப் பார்த்தாள். ராஜாராமன் இரவெல்லாம் பத்மாவதியைப் பற்றியே எண்ணிக்கொண்டு தூக்கம் வராமலிருந்தவன், அப்போதுதான் தூங்கத் தொடங்கியிருந்தான். பத்மாவதி வீட்டுக்குள் போய்க் குளித்து உடைமாற்றிக்கொண்டு

ராஜாராமனுக்கும் தம்பிக்கும் வேண்டிய காலை ஆகாரம் கொண்டுவர எண்ணினாள். ஆனால் ராஜாராமன் தூங்குவதால் தம்பியைக் கவனித்துக் கொள்ள யாருமில்லாமல் போய்விடுமே என்று ராஜாராமன் விழிக்கட்டும் என்று காத்திருந்தாள். வெகு நேரம் அவன் விழிக்கவில்லை. அவனை எழுப்பலாமென்று அவன் படுத்திருந்த கட்டிலின் அருகிற் சென்று நின்று கொண்டு தூக்கத்தைக் கெடுக்க மனம் வராதவள் போல் தயங்கினாள். சிறிது நேரத்தில் புரண்டு படுத்துக் கண்ணைத் திறந்த ராஜாராமன் தனக்கு முன்னால் பத்மா நிற்பதைப் பார்த்து விட்டான். கனவில் கண்டு கொண்டிருந்த பத்மா நனவாகத் தன்னெதிரில் நிற்பதைக் கண்ட களிப்பில் தூக்கம் கலைந்து துடித்தெழுந்து உட்கார்ந்து, ''பத்மா! எனக்காகவா நிற்கிறாய்?'' என்றான்.

''ஆம், உங்களுக்காகத்தான். நல்ல தூக்கத்தைக் கெடுத்து விட்டேன். அலுப்புத் தீரத் தூங்கினீர்களா?'' என்றாள் பத்மா.

''பத்மா, உன்னுடைய அபூர்வமான அன்பையும் உன்னையும் எண்ணிக்கொண்டேயிருந்துவிட்டதால் நெடுநேரம் தூக்கம் வராமல் சற்று முன்புதான் கண்ணயர்ந்தேன்'' என்றான்.

''நானும் அப்படித்தான். உங்கள் அபூர்வமான ஆற்றலையும் உங்களையும் எண்ணிக்கொண்டே வெகுநேரம் தூங்கவில்லை. தம்பியைக் கவனித்துக் கொள்ளுங்கள். நான் போய் நீங்கள் குளிப்பதற்கு வெந்நீர் எடுத்து வைக்கச் செய்கிறேன்'' என்றாள்.

ராஜாராமன் இன்ப முறுவல் காட்டித் தன்னுடைய இசைவைத் தெரியப்படுத்தினான். பத்மாவதியும் புன்சிரிப்புடன் போய்விட்டாள். சிறிது நேரத்துக்குள் பத்மாவதி குளித்து விட்டு மிகவும் கவர்ச்சிகரமான மாற்றுடை தரித்துக் கொண்டு மகிழ்ச்சி பொங்கும் முகத்தோடு வந்து ராஜாராமனிடம் ,

''நான் தம்பியை கவனித்துக் கொள்ளுகிறேன். நீங்கள் போய்க் குளியுங்கள். வெந்நீர் எடுத்து வைத்து வேலைக்காரன்



காத்திருக்கிறான். வேட்டி, அங்கவஸ்திரம், துண்டு எல்லாம் எடுத்து அவனிடம் தந்திருக்கிறேன்'' என்றாள்.

துளிர்ப் பச்சை நிறமுள்ள மெல்லிய பட்டாடையும் தும்பைப் பூவைப் போன்ற வெள்ளை ரவிக்கையும் அணிந்திருந்த பத்மாவதியின் புது அழகைக் கண்டுத் தேனுண்ட வண்டுபோல் மயங்கிவிட்ட ராஜாராமன்,

''பத்மா, இந்த உடையில் நீ, முன்னிலும் அழகாக விளங்குகிறாய்'' என்றான்.

அதைக் கேட்ட பத்மாவதி கலகலவென்று சிரித்து விட்டு, ''நீங்களும் போய் குளித்துவிட்டு, நான் அங்கே வைத்திருக்கிற ஜரிகை வேட்டியையும் அங்கவஸ்திரத்தையும் அணிந்துகொண்டு வந்தால் முன்னிலும் அழகாக விளங்குவீர்கள்!'' எனறாள்.

அதைக் கேட்டு ராஜாராமனும் கலகலவென்று சிரித்துக்கொண்டே குளிக்கப் போய்விட்டான்.

விடிந்து வெகுநேரம் வரையில் சுந்தரேசன் நன்றாகத் தூங்கினான். அவன் கண் விழிக்கு முன்னால் எல்லாரும் காலை ஆகாரம் அருந்திவிட்டு அவனைக் கவனிக்கக் கூடிவிட்டார்கள். ராஜாராமனுடைய தந்தை சிவசுப்பிரமணியமும், தாயார் சரஸ்வதியும் சுந்தரேசனைப் பார்க்க வந்தார்கள். சிறிது நேரத்தில் டாக்டரும் வந்தார். எல்லாரும் பேசிக்கொண்டிருந்த ஓசையினால் தூக்கம் கலைந்து விட்டதுபோல் சுந்தரேசன் கண் விழித்தான். அவனுடைய முகம் தெளிவடைந்திருந்தது. தன்னைச் சுற்றிலும் அவ்வளவு பேர் நிற்பதைக் கண்டு வெட்கப் பட்டவன்போல் புன்சிரிப்புடன் தலையைத் திருப்பிக் கொண்டான். டாக்டர் அவனைப் பரிசோதித்துவிட்டு வெறும் காப்பி மட்டும் உடனே கொடுக்கச் செய்தார். காப்பியைக் குடித்த பின் களை தீர்ந்து முகம் மலர்ந்திருப்பது கண்டு, அவன் எப்படிக் கிணற்றில் விழுந்துவிட நேர்ந்தது என்பதைக் கேட்க

எல்லாரும் ஆசைப்பட்டார்கள். முதலில் பத்மாவதிதான் அந்தக் கேள்வியைக் கேட்டாள். சுந்தரேசன் சொன்னது:

அவன் நீச்சல் பழகத் தண்ணீரில் இறங்குவதற்காகத் தன் உடையைக் களைந்து படிக்கட்டில் வைக்கவேண்டியிருந்தது. முதலில் சட்டையைக் கழற்றினான். அவன் அணிந்திருந்த சட்டை ஒரு 'ஷர்ட்டு'. தலையைக் கவிழ்த்துக் கொண்டு அதைக் கழற்றும்போது அதன் மேல் 'ஜேபி' யில் இருந்த மூன்று ரூபாய் நாணயங்களும் சில்லரைகளும் கீழே விழுந்தன. அவற்றைப் பொறுக்கியெடுத்து மறுபடியும் 'ஜேபி'யில் போடக்கூடா தென்று ஒரு கல்லிடுக்கில் வைத்துவிட்டுச் சுரைபுருடையை இடுப்பில் கட்டிக் கொண்டு நீரில் இறங்கினான். அங்கே போன எட்டுப் பேருக்குள் இரண்டு பையன்கள் நன்றாக நீந்தத் தெரிந்தவர்கள்.அவர்கள் இருவரும் நீச்சல் தெரியாதவனுக்கு இருபுறத்திலும் இருந்துகொண்டு நீந்தும் முறையைச் சொல்லிக் கொடுத்தார்கள். நீந்தத் தெரியாத ஆறு பேரும் மாற்றி மாற்றி ஒவ்வொருவனாகச் சுரைபுருடையை இடுப்பில் கட்டிக் கொண்டு நீச்சல் பழகினார்கள். அப்படி ஒவ்வொருவனும் இரண்டு மூன்று தடவை பழகினார்கள். பிறகு எல்லாருமாகச் சேர்ந்து கேலியும் சிரிப்புமாகப் பேசிக்கொண்டே, அவரவர்கள் உடைகளை அணிந்துகொண்டு வீட்டுக்குப் புறப்பட்டார்கள். அப்போதிருந்த மகிழ்ச்சி ஆரவாரத்தில் சுந்தரேசன் பணம் வைத்ததை மறந்துவிட்டுச் சட்டையை மட்டும் மாட்டிக் கொண்டு வந்துவிட்டான். கிணற்றை விட்டுச் சிறிது தூரம் வந்த பிற்பாடு எல்லாருக்கும் பின்னால் வந்து கொண்டிருந்த சுந்தரேசன் பணம் வைத்ததை நினைத்துக் கொண்டு கிணற்றுக்குப் போனான். அவன் தனியே கிணற்றுக்குப் போனதை மற்றவர்கள் கவனிக்கவில்லை. நீர் மட்டத்துக்கு இரண்டு படிகளுக்கு மேல் இடுப்புக்கும் மேலிருந்த ஒரு கல்லிடுக்கில் இருக்கும் பணத்தை எடுப்பதற்குப் பயப்பட வேண்டியது ஒன்றுமில்லை என்ற தைரியத்தில்தான் தனியே போனான். பணத்தைக் கையிலெடுத்த பின் அதிலிருந்து ஒரு



ரூபாய் நாணயம் கைதவறிக் கீழே விழுந்து உருண்டோடித் தண்ணீருக்குள் விழப்போயிற்று. அதை எட்டிப்பிடிக்க இரண்டு படிகள் இறங்கின சுந்தரேசன் கால் தடுக்கித் தண்ணீரில் விழுந்துவிட்டான்.

அன்று மாலை ஆறு மணி வரையிலும்கூட ராஜாராமனை அவனுடைய வீட்டுக்குப் போகப் பத்மாவதி விடவில்லை. அவனும் அவளை விட்டுப் போக மனமில்லாமல்தான் இருந்தான். ஆனாலும் அவன் அங்கே இரண்டு நாளாகத் தங்கிவிட நேரிட்ட காரணமும் காரியமும் முடிந்துபோன பிற்பாடும் அங்கேயே உண்பதும் உறங்குவதுமாக இருப்பது சரியாகுமா? அது தன் மதிப்புக்குத் தகாது என்ற உணர்ச்சி அவனைத் தன் வீட்டுக்குப் போக உந்தியது. அவன் தன்னுடைய வீட்டுக்குப் போய் வருவதாகப் பத்மாவிடம் சொன்னபோது அவள்,

''என்ன? 'வீட்டுக்குப் போகிறேன்', 'வீட்டுக்குப் போகிறேன்' என்று சொல்கிறீர்கள்! இந்த வீடும் உங்கள் சொந்தவீடு போலத்தானே? என்னுடன் பேசிக் கொண்டிருப்பதே உங்களுக்கு மகிழ்ச்சி என்றும், என் பிரியத்தை எண்ணிக் கொண்டு நேற்றிரவு தூக்கம் வரவில்லை யென்றெல்லாம் சொன்னீர்களே! ஒரே ஒரு நாள் இங்கே தங்கிவிட்டதை வெகு காலம் ஆகிவிட்டதுபோல் எண்ணி அவசரப்படுகிறீர்களே! நீங்கள் போனபின் எனக்கு வெறிச்சென்றிருக்கும்; சுந்தரேசனும் ஏங்கிப்போவான்'' என்றாள்.

''என்ன பத்மா? என்னை இப்படிச் சந்தேகிக்கிறாய்? நான் கல்லூரியில் ஒரு நாள் உன்னுடன் பேச வந்தபோது நீ என்னை அறிந்து கொள்ளவில்லை யென்றும் இப்போது நன்றாக அறிந்து கொண்டதாகவும் சொன்னாயே! உன்னோடு பேசிக்கொண்டிருப்பது எனக்கு இன்பம் என்றும், உன்னுடைய அன்பை நினைத்துக்கொண்டு நேற்றிரவு எனக்குத் தூக்கம் வரவில்லை யென்றும் நான் சொன்னதெல்லாம் பொய்யல்ல. இப்போதும் எனக்கு உன்னையும் சுந்தரேசனையும் விட்டுப்

போக மனமில்லை. ஆனால் என் தந்தையும் தாயாரும் இன்றிரவு நான் அங்கே வந்துவிடுவேன் என்று எதிர் பார்த்துக் கொண்டிருப்பார்கள். அதற்காகப் போகிறேன். போனால் என்ன? நாளைக் காலையில் வந்துவிடுகிறேன். இன்றிரவும் எனக்குத் தூக்கம் வராது. சுந்தரேசனைக் காப்பாற்றும் பாக்கியம் கிடைத்ததையும் அதனால் உன் அபரிதமான அன்பிற்குப் பாத்திரன் ஆனதையும் எண்ணிக்கொண்டேதான் படுத்திருப்பேன். எப்போது விடியும், எப்போது இங்கே வரலாம் என்றுதான் காத்திருப்பேன்'' என்றான் ராஜாராமன்.

''நாளைக்கு மட்டும் என்ன? உங்களுக்கு ஒழிவான நேரமெல்லாம் இங்கேதான் இருக்க வேண்டும்'' என்றாள் பத்மா.

''எனக்கும் அதேதான் விருப்பம்'' என்று விடை பெற்றுக்கொண்டான்.

## 2

பத்மாவதியும் ராஜாராமனும் கல்வி பயிலும் கல்லூரியில் நூறு பெண்களுக்கு மேல் வெவ்வேறு வகுப்புகளில் படித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களில் அநேக பெண்கள் நல்ல அழகிகள். ஆனாலும் பத்மாவதியின் அழகு மிகவும் அபூர்வமானதாக அமைந்திருந்தது. அவளைப் பார்த்தவர்கள் யாரும் பரவசமடையாமலிருக்க முடியாது. பெண்களும் அவளுடைய அழகைக் கண்டு ஆசை கொள்வார்களென்றால், ஆண்களைப் பற்றிப் பேச வேண்டுமா? அதுவும், யௌவனப் பருவமமைடந்த கல்லூரி மாணவர்களைப் பற்றி என்ன சொல்லுவது? அவள் மீது ஆசைக்கண் செலுத்தாத மாணவன் அந்தக் கல்லூரியில் இல்லை என்றே சொல்லிவிடலாம். தாழம் பூவில் சிறிது சிவப்பு கலந்தது போன்ற நிறம்; களங்கமில்லாத முழுச்சந்திரனைப்



போன்ற முகம்; அந்த முழுச்சந்திரனை விழுங்க வரும் கருநாகம் போன்ற நீண்ட சடை; தாம் மருளாமல் மற்றவர்களை மருளச் செய்துவிடுகிற மான் விழிகள்; உவமை சொல்ல முடியாத வடிவமைந்த மூக்கு; ரோஜா நிறமுள்ள உதடுகள்; பாலினும் வெண்மை மிக்க பல்வரிசை என்றெல்லாம் வருணிக்கத்தக்கப் பெண்கள் பலர் உண்டு. ஆனால் இத்தனை இலக்கணங்களும் அமைந்து, இவைகளுக்கெல்லாம் மேலாக இன்னதென்று வருணிக்க முடியாத ஒரு வசீகரமும் பத்மாவதியின் அழகில் அமைந்திருந்தது.

அழகு மட்டுமன்றிப் புத்தி கூர்மையும் இனிய குணமும் அவளுக்குப் பொருந்தியிருந்தன. எவரோடும் இனிய முகத்துடன் அன்போடும் மரியாதையோடும் பேசுவாள். அவளோடு பழகுவதும் பேசுவதும் மிக்க மகிழ்ச்சி தரக் கூடியவை. ஆனால் மிகவும் அடக்க ஒடுக்கமும் அமைதியும் உள்ளவள். தன்னுடன் படிக்கும் பெண்களிலும் மிகவும் நெருங்கிப் பழகும் சிலரோடுதான் கலகலத்துப் பேசுவாள். மற்றவர்களோடு அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு மட்டும் அளவோடு பதில் பேசுவாள். குறித்த காலத்தில் வகுப்புக்கு வருவதும் வகுப்பு முடிந்தவுடன் எங்கும் நிற்காமல் நேராக வீட்டுக்குப் போய்விடுவதும் அவள் வழக்கம். வரும்போதும் போகும்போதும் வழியில் யாரோடும் நின்று பேசமாட்டாள். யாராவது அவளைக் கூப்பிட்டாலன்றித் திரும்பிக்கூடப் பார்க்கமாட்டாள். ஆண்பிள்ளைகள் அவளை ஆசையோடு கண்கொட்டாமல் பார்க்கிறார்கள் என்பதை அவள் கவனித்ததில்லை.

கல்லூரியில் படிக்கும் பெண்களில் யாரேனும் வழியில் குறுக்கிட்டு ஏதேனும் பேசவந்தால் சிரித்த முகத்துடன் அவர்களுக்கு வேண்டிய பதிலைச் சொல்லுவாள். ஆனால் ஆண்பிள்ளைகளில் யாராவது எதையேனும் கேட்டால் உடனே சிரிப்பை ஒடுக்கிக்கொண்டு முகத்தைக் கவிழ்த்துக்கொண்டு நாணத்தை வருவித்துக்கொண்டு

அளவோடு சிற்சில வார்த்தைகளில் பதில் சொல்லிக் கொண்டே போய்விடுவாள்.

அப்படிப்பட்ட பத்மாவதியின் மீது ராஜாராமனுக்கு அடக்க முடியாத ஆசை உண்டாகிவிட்டது. பத்மாவதி படிக்கும் வகுப்பு ராஜாராமன் படிக்கும் வகுப்பு நடக்கிற அறைக்கு அடுத்ததாக அமைந்த நாளில் இருந்து தினந்தினம் இரண்டு வேளையும் அவள் வகுப்புக்கு வரும்போதும் அதிலிருந்து போகும்போதும் அவளைப் பார்க்கவென்றே காத்திருப்பான்.

மற்ற மாணவர்களிற் சிலரும்கூட பத்மாவதியைப் பார்ப்பதில் இவனைப் போலவே ஆர்வம் கொண்டிருந்தார்கள் என்றாலும் அவர்களுடைய ஆவல் அவர்கள் அவளைப் பார்ப்பதோடு நின்றுவிடும். ஏனென்றால் குலத்தாலும் பிற நலத்தாலும், ஆண்பிள்ளைகள் எளிதில் நெருங்க இடங்கொடுக்காத குணத்தாலும் அவள் தமக்கு எட்டக் கூடிய பொருள் அல்லவென்பதை அவர்கள் அறிவார்கள்.

ஆனால் ராஜாராமன் அப்படியல்ல. பத்மாவதியுடன் நேரிற் பழகும் வாய்ப்பு அவனுக்கு இருந்ததில்லை யென்றாலும் பத்மாவின் தந்தைக்கும், ராஜாராமனுடைய தந்தைக்கும் நெருங்கிய பழக்கமுண்டு. பத்மாவின் தந்தை அடிக்கடி ராஜாராமன் வீட்டுக்கு வருகிறவர். அதனால் ராஜாராமன் அவரை நன்றாக அறிந்தவன். அவரும் இவனை நன்றாக அறிந்தவர். அவர் இவனுடன் மிகவும் பிரியமாகப் பேசுவதுண்டு. பத்மாவின் குடும்பமும் ராஜாராமன் குடும்பமும் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள். செல்வ நிலைமையிலும் சமானமானவர்கள். அதனால் பத்மாவதி தனக்குக் கிடைக்கக்கூடிய பொருள்தான் என்ற நம்பிக்கையால் அவளைத் திருமணம் செய்து கொள்ள விரும்பியே காதல் கொண்டான்.

ராஜாராமனுடைய அழகையும், படிப்பையும், அறிவையும் நற்குணங்களையும் கருதி அவனுக்குப் பெண் கொடுக்க ஆசைகொண்ட பெற்றோர்கள் பலர். அவனுடைய திருமணத்தைப் பற்றிப் பேச்சுகள் வரும் போதெல்லாம் அவன் தன்னுடைய கண்ணுக்கும் கருத்துக்கும் பிடித்தமானவள் என்று தானே காதலிக்கும் பெண்ணைத் தான் மணந்து கொள்ளவேண்டும் என்று தனக்குள் எண்ணிக் கொள்வான். தம்முடைய பெண்ணின் நல்வாழ்வைக் கருதி ராஜாராமனுக்குப் பெண் கொடுக்க முன் வந்து பேசினவர்களுக்கெல்லாம், அவனுடைய தந்தை, மகனுடைய படிப்பு முடிந்த பிறகுதான், அவனுடைய திருமணத்தைப் பற்றி ஆலோசிக்கவேண்டும் என்று சொல்லி வந்தார். ராஜாராமனுடைய தாயாருக்குத் தன்னுடைய தம்பி மகள் சீதாலக்ஷ்மியைத்தான், மகனுக்கு மணம் செய்து வைக்க வேண்டும் என்று ஆசை. சீதா லக்ஷ்மியும் மிகவும் விரும்பத்தக்க அழகும் குணமும் அமைந்தவள். அவளும் பி.ஏ. வகுப்பில் இருநூற்று ஐம்பது மைல் தூரத்திலிருந்த திருச்சிராப்பள்ளியில் படித்துக் கொண்டிருந்தாள்.

ராஜாராமனுடைய தாயாருக்குச் சீதாலக்ஷ்மியைத் தான் மகனுக்கு மணம் செய்துவைக்க வேண்டுமென்ற ஆசை அதிகமாக இருந்தாலும், அவனுடைய தந்தைக்கு அந்த எண்ணமில்லை. சுமார் பதினோரு வருடங்களுக்கு முன் சீதாவின் பெற்றோரும் ராஜாராமனுடைய பெற்றோரும் மிகவும் நேசமாகத்தான் இருந்தார்கள். அப்போது திருச்சிராப்பள்ளியில் ஒருவர் ராஜாராமனுடைய தந்தைக்குத் தரவேண்டிய ஐயாயிரம் ரூபாயைக் கேட்டு வாங்கி அனுப்பும்படி சீதாவின் தந்தைக்கு, ராஜாராமனின் தந்தை எழுதியிருந்தார். அந்தப் பணம் வசூலாயிற்று. ஆனால் அதை உடனே ராஜாராமனுடைய தந்தைக்கு அனுப்பாமல் மைத்துனன் என்ற உரிமையில் சீதாவின் தந்தை தன் சொந்தக் காரியங்களுக்குச் செலவு செய்து கொண்டார். அப்படிச் செய்து கொண்டதையும் உடனே மைத்துனருக்குத் தெரியப்படுத்தவில்லை. மோசக் கருத்துடன் செய்ததல்ல. வெறும் அசட்டுத்தனத்தால் எழுதாமலிருந்து விட்டார்.

மூன்று மாதம் சென்றபின், பணம் இன்னும் வசூலாக வில்லையாக்கும் என்று எண்ணிக் கொண்டு, ராஜாராமனின் தந்தை தமக்குப் பணம் தரவேண்டியவருக்கு ஒரு கடிதம் எழுதிப் பணத்தை அனுப்பும்படிக் கேட்டுக்கொண்டார். உடனே அந்த நண்பர், மூன்று மாதங்களுக்கு முன்னாலேயே சீதாவின் தந்தையிடம் பணம் செலுத்தி இரசீதும் பெற்றுக் கொண்டதாகப் பதில் எழுதியிருந்தார். மைத்துனர் வாங்கின பணம் வந்துசேரும் என்று ராஜாராமனின் தந்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். அதற்குப் பின் ஒரு மாதம் கழித்து, சீதாவின் தந்தை, தாம் இருபத்தையாயிரம் ரூபாயில் ஒரு பங்களா வாங்கியிருப்பதாகவும் அதற்காக அந்த ஐயாயிரம் ரூபாயை அவசரத்துக்கு உபயோகித்துக் கொண்டதாகவும் தமக்கு வரவேண்டிய பணங்களில் அந்த ஐயாயிரத்தை விரைவில் அனுப்பி விடுவதாகவும் எழுதியிருந்தார். அதை ராஜாராமனின் தந்தை மகிழ்ச்சியுடன் ஒத்துக் கொண்டார். ஆனால் அதன் பிறகு மூன்று வருடங்கள் கழிந்தும் சீதாவின் தந்தையால் அந்தப் பணத்தைத் தர முடியவில்லை. அதற்குக் காரணம் அவர் எதிர்பார்த்தபடி அவருக்கு வரவேண்டிய பணங்கள் வசூலாகவில்லை என்பது தான்.

மூன்று வருடங்களுக்குப் பின் ராஜாராமனுடைய தந்தைக்கு மிகவும் அவசியமான ஒரு அவசரச் செலவு ஏற்பட்டு, அதற்காக அந்த ஐயாயிரத்தை உடனே அனுப்ப வேண்டுமென்று சீதாவின் தந்தைக்குச் சற்றே கண்டிப்பான கடிதம் எழுதினார். சீதாவின் தந்தை கோபம் வந்துவிட்டால் மிகவும் முரட்டுத்தனமாக நடந்து கொள்ளும் சுபாவமுள்ளவர். அதனால் அந்தக் கடிதத்தைக் கண்டவுடனே கோபித்துக்கொண்டு, விலைக்கு வாங்கின பங்களாவை அடகு வைத்துப் பணம்வாங்கி, ஐயாயிரம் ரூபாய்க்கு ஒரு 'டிராப்ட்டும்' அத்துடன் கடுங்கோபமும் மரியாதைக் குறைவும் காட்டிக் கடிதமும் வைத்து, பெற்றுக் கொண்டதற்கு அத்தாட்சி வரக்கூடிய பதிவுத் தபாலில் அனுப்பிவிட்டார்.



அதைப் பார்த்த ராஜாராமனின் தந்தை, மைத்துனருடைய கோபத்தை மாற்ற எவ்வளவோ சமாதானம் எழுதியும் சீதாவின் தந்தை பதிலே எழுதவில்லை. அது முதல் இரண்டு குடும்பங்களுக்கும் உறவு அற்றுப்போனது போலவே இருந்துவிட்டது. அதனால் ராஜாராமனுடைய தந்தைக்குச் சீதாலக்ஷ்மியைத் தம்முடைய மகனுக்கு மணம் செய்து கொள்ளலாம் என்ற எண்ணமே உதித்ததில்லை. அவருடைய மனத்தில் அந்த எண்ணம் பிறந்ததில்லை யென்றாலும் அவருடைய மனைவியின் மனம் அதை மறந்ததில்லை. எப்படியாவது சமாதானம் உண்டாகி, உடன் பிறப்பின் உறவு ஒட்டிக் கொள்ளும்படி மகனுக்குச் சீதாலக்ஷ்மியை மணந்து கொள்ளவேண்டு மென்ற ஆசை இருந்து கொண்டேயிருந்தது.

ராஜாராமன் சிறு வயதில் சீதாலக்ஷ்மியோடு மிகவும் பிரியமாகக் கொஞ்சி விளையாடிக் கொண்டிருந்தவன்தான். அதன்பின் அவளை முற்றிலும் மறந்துவிடக் கூடிய சூழ்நிலைகள் உண்டாகி இப்போது அப்படி ஒரு பெண் இருக்கிறாள் என்ற நினைப்பே அவனுக்கு இல்லை. அதுவும் இப்போது அவனுடைய கண்ணுக்கும் கருத்துக்கும் மிகவும் பிடித்தமான அபூர்வ அழகியான பத்மாவதியின் அளவற்ற அன்பிற்குப் பாத்திரமானபின் வேறு பெண்களைப் பற்றி எப்படி அவன் எண்ணமுடியும்? அவனுடைய தாயார் அவனுக்குச் சீதாலக்ஷ்மியைக் கலியாணம் செய்துவைக்க விரும்புவது எப்படிக் கைகூடும்?

இது இப்படியிருக்க, பத்மாவதியின் தாயார் காமாட்சியம்மாள் தன்னுடைய தமையன் மகன் கோபாலனுக்கே பத்மாவதியை மனைவியாக்க வேண்டுமென்று தீர்மானித்திருந்தாள். கோபாலன் காமாட்சியம்மாள் வீட்டிலேயே வளர்ந்தவன். அவன் இப்போது மருத்துவக் கல்லூரியில் எம்.பி.பி.எஸ். வகுப்பின் இறுதிப் பரீட்சைக்குப் படித்துக் கொண்டிருக்கிறான். இப்போது அவன் காமாட்சியம்மாள் வீட்டில் தங்கிப் படிக்கவில்லை.

அவனுடைய பெற்றோர்கள் அவர்களுடைய மற்றக் குழந்தைகள் ஆறு பேருடைய படிப்பை உத்தேசித்துக் கிராமத்து நிலபுலன்களைக் குத்தகைக்கு விட்டு விட்டுச் சென்னைக்கே குடிவந்து விட்டார்கள். கோபாலன் அவர்களுடன் இருந்துகொண்டு வைத்தியக் கல்லூரியில் படிக்கிறான்.

அவனும் அவனுடைய பெற்றோர்களும் உடன் பிறப்புகளும் அடிக்கடி காமாட்சியம்மாள் வீட்டுக்கு வந்து போவார்கள். கோபாலனும் பத்மாவதியும் குழந்தைப் பருவத்திலிருந்து ஒருவருக்கொருவர் அன்போடு ஓடியாடி விளையாடிக் கொண்டிருந்தவர்கள். இப்போது கூடப் பத்மாவதி கோபாலன் வந்தால் அவனுடன் மாமாவின் பிள்ளை என்ற முறையில் கேலியும் சிரிப்புமாகப் பேசுவாள்.

பத்மாவதியைக் கோபாலனுக்குக் கொடுக்கப் பத்மாவதியின் தந்தை அவ்வளவாகப் பிரியப்படவில்லை. பத்மாவின் திருமணப் பேச்சு வரும்போதெல்லாம் அவர் ராஜாராமனை நினைப்பார். ராஜாராமனுடைய தந்தை சிவசுப்ரமணியம் பத்மாவதியின் தந்தை ஜானகிராமனுக்கு ஒரு நண்பர் மட்டும் அல்ல. மைத்துனன் முறை கொண்டாட வேண்டிய தூர பந்துவும்கூட. அது காமாட்சியம்மாளுக்கும் தெரியும். ஆனால் காமாட்சியம்மாளின் பிறந்த வீட்டிற்கும் சிவசுப்ரமணியத்தின் மனைவி சரஸ்வதியம்மாளின் பிறந்த வீட்டிற்கும் நெடுநாளாக மனஸ்தாபம். காமாட்சியம்மாளும் நல்லவள்தான்; சரஸ்வதியம்மாளும் நல்லவள்தான். ஆனால் இந்தப் பிறந்த வீடுகளுக்கிடையில் இருந்த பிணக்கம் இவர்களையும் பிடித்துக் கொண்டிருந்ததனால் இவர்கள் ஒரே ஊரில் அக்கம்பக்கமாக இருந்தும் உறவு கொண்டாடிப் பழக முடியவில்லை. ஜானகிராமனும் சிவசுப்பிரமணியன் வீட்டுக்கு அடிக்கடி போவதுண்டு என்பதை முன்னே கண்டோம் அல்லவா? அப்படிப் போகும்போதெல்லாம் அவர் ராஜா ராமனுடைய அழகையும் குணத்தையும் பார்த்து அவனைத்தம் மகளுக்குத் தகுந்த மாப்பிள்ளையாக மதிப்பார்.



கோபாலனும் நல்லவன்தான். ஆனால் உடல் வலிமையிலும் வசீகரமான வடிவழகிலும் ராஜாராமனுக்கும் அவனுக்கும் வெகு தூரம். கோபாலன் அழகில்லாதவன் என்று சொல்ல முடியாது. ஆனாலும் பத்மாவதியின் இணையற்ற எழிலுக்குத் தகுந்த ஜோடியல்ல. ராஜாராமனைப் பத்மாவதிக்குச் சரியான ஜோடி என்று யாரும் சொல்லுவார்கள்.

அதனால் ஜானகிராமன் ராஜாராமனை மனத்தில் வைத்துக்கொண்டு காமாட்சியம்மாள் பத்மாவதியைக் கோபாலனுக்குத்தான் கொடுக்க வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருந்ததை உடனே ஒத்துக்கொள்ளவில்லை. ஆனால் ஜானகிராமனும் காமாட்சியம்மாளும் அவர்களுடைய திருமணம் நடந்த நாளிலிருந்து இதுவரையிலும் எந்த விதமான கருத்து வேற்றுமையும் இல்லாமல் மனமொத்து இல்லறம் நடத்தி வந்தவர்கள்.

***தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற***
***சொற்காத்துச் சோர்விலாள் பெண்***

என்ற வள்ளுவர் வாக்குக்கிணங்க மிகச் சிறந்த வாழ்க்கைத் துணையாக நடந்து வந்து,

***மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்***
***நன்கலம் நன்மக்கட் பேறு***

என்ற இல்லற இன்பத்தை ஜானகிராமனுக்கு உண்டாக்கி வைத்து அதைக் காத்து வருகிறவள் காமாட்சியம்மாள். இதை ஜானகிராமன் நன்றாக அறிவார். அதனால் மனையாளின் விருப்பத்தை மறுத்துப் பேச மனம் இடங் கொடுக்கவில்லை.

அத்துடன் காமாட்சியம்மாளுடைய தமையன் கிருஷ்ணசாமி என்பவர் மிகவும் கண்ணியமுள்ள கனவான். ஜானகிராமனுடைய வாழ்க்கையின் ஆரம்ப காலத்தில் பலவிதமான உதவிகள் செய்த உத்தமர். அவர் தன் மகன்

கோபாலனுக்குப் பத்மாவதியைக் கொடுக்க வேண்டுமென்று நெடுநாளாகக் கேட்டுக்கொண்டேயிருக்கிறார்.

பத்மாவதி, அவள் சிறு பிராயத்தில் கோபாலனோடு சிரித்துக் கேலி பேசியது போலவே இப்போதும் அவன் வரும் போதெல்லாம் அவனுடன் கேலிகள் பேசி மகிழ்வதைக் கண்டு அவளும் கோபாலனை விரும்புவதாக ஜானகிராமன் நினைத்தார்.

இத்தனைக் காரணங்களையும் எண்ணிப் பார்த்து, ஜானகிராமன் ராஜாராமனைப் பற்றித் தம்முடைய மனத்தில் உண்டாகியிருந்த எண்ணங்களை ஒதுக்கி விட்டுப் பத்மாவதியைக் கோபாலனுக்குக் கொடுக்க ஒத்துக் கொண்டார். பத்மாவதிக்கும் கோபாலனுக்கும் அவர்களுடைய பரீட்சைகள் முடிந்தவுடன் திருமணம் நடத்தி விடுவது என்று தீர்மானம் செய்திருந்தார்கள்.

இவ்வளவும் ராஜாராமன் பத்மாவதியைக் கல்லூரியில் கண்டு காதல் கொண்டதற்கு முன்னால் நடந்த விஷயம். அதற்குப் பின்னால் நடந்த மாறுதல்களைப் பார்ப்போம்.

பத்மாவதியைத் தினந்தினம் கலாசாலையில் பார்த்துப் பார்த்துக் காதல் மிகுந்துவிட்ட ராஜாராமன் அவளையே திருமணம் செய்துகொள்ள வழி யென்னவென்று சிந்திக்கலானான். அவளுடைய தந்தை தன்னுடைய தந்தைக்கு உறவும் நட்பும் உள்ளவராக இருப்பதாலும் தன் வீட்டுக்கு அவளுடைய தந்தை வரும்போதெல்லாம் தன்னை மிகவும் விருப்பத்துடன் பாராட்டிப் பேசுவதாலும் தன்னுடைய தந்தையிடம் தன் காதலைச் சொல்லி வழக்கப்படி பெண் கேட்கச் செய்து எளிதில் மணந்து கொள்ளலாம் என்று எண்ணினான். ஆனாலும் அதற்கு முன்னால் அவளுடன் பேசிப் பழகி, அவள் தன்னை விரும்பும்படி செய்துகொள்ள வேண்டுமென்ற ஆசை உண்டாகிவிட்டது. முன்பின் பழக்கமில்லாத அவளுடன் எப்படிப் பேசுவது? எதைப்பற்றி பேசுவது? என்று எண்ணியெண்ணிப் பார்த்தான்.



அவன் படித்திருந்த பல காதல் கதைகளில் ஒன்று நினைவுக்கு வந்தது. அந்தக் கதை ஒரு ஆங்கில 'நாவல்'. அதில் ஒரு வாலிபன் மிக்க அழகான ஒரு பெண்ணின் மீது ஆசைப்படுகிறான். அவள் ஒரு காரியாலயத்தில் 'டைப்பிஸ்ட்' வேலையில் இருப்பவள். அவள் காரியாலயத்துக்குப் போகும் போதும் திரும்பி வரும்போதும் இவனுடைய வீட்டைக் கடந்து தான் போகவேண்டும். தினந்தினம் அவளைப் பார்க்கவென்றே காத்திருப்பான். அவளோடு பேசிப் பழக வேண்டுமென்று தீர்மானித்தான். ஒரு நாள் அவள் காரியாலயத்திலிருந்து வீட்டிற்குத் திரும்பிப்போகும்போது இவன் அவளுக்கு எதிரிற் சென்று ஒரு அழகான தோற்றமுள்ள புத்தகத்தை நீட்டி,

"இதைப் படித்திருக்கிறீர்களா" என்று மிக்க விநயத்துடன் கேட்டான். அந்தப் புத்தகம் ஒரு காதல் கதை. 'நாவல்' எழுதுவதில் மிகுந்த புகழ்பெற்ற ஆசிரியர் எழுதியது. வாலிபன் நீட்டிய புத்தகத்தைப் பார்த்த அப்பெண்மணி அப்புத்தகத்தின் பெயரையும் கவனித்தாள். அந்த ஆசிரியர் மிகச் சிறந்த எழுத்தாளர் என்பது அவளுக்குத் தெரியும். அவர் எழுதிய வேறு சில நாவல்களை அவள் படித்து மகிழ்ந்திருக்கிறாள். ஆனால் இந்தப் புத்தகத்தை அவள் படித்ததில்லை.

"இந்தப் புத்தகம் வெளிவந்திருப்பதைக் கேள்விப்பட்டேன். ஆனால் இதைப் படித்ததில்லை" என்றாள் அப்பெண்மணி.

"மிக நல்ல கதை. இந்த ஆசிரியர் எழுதியுள்ள புத்தகங்களுக்கெல்லாம் சிகரம் போன்றது இந்தப் புத்தகம். கொண்டுபோய்ப் படித்துப் பாருங்கள்" என்றான் வாலிபன்.

'நாவல்' என்றால் மிக்க ஆவல் கொள்ளும் இயல்புடைய அந்தப் பெண் மிக்க வந்தனத்துடன் அப்புத்தகத்தை வாங்கிக்கொண்டு போய்விட்டாள். இரண்டு நாள் சென்று அந்தப் புத்தகத்தைத் திருப்பிக் கொடுக்க அந்தப் வாலிபனைத்தேடி வந்தாள். இதற்கு முன்னெல்லாம் அந்தப்

பெண்ணின் வருகைக்காக வாசலில் காத்திருக்கும் வாலிபன், புத்தகத்தைக் கொடுத்தபின் அந்தப் பெண் வருவதையும் போவதையும் வீட்டுக்குள் இருந்தபடியே பலகணி வழியாகப் பார்த்துக் கொண்டிருந்தான். புத்தகத்தைத் திருப்பிக் கொடுக்க வந்த அப்பெண்மணி வாலிபனை வாசலில் காணாமல் வீட்டுக்குள் பார்வையைச் செலுத்தி வீதியிலேயே நின்றாள். அதைப் பலகணி வழியாகப் பார்த்த வாலிபன் உடனே வெளியே வந்து அவளை வரவேற்று வீட்டுக்குள் அழைத்தான். களங்கமற்ற அந்தப் பெண்ணும் உள்ளே வந்து நின்றபடியே.

"நீங்கள் சொன்னபடியே இந்தப் புத்தகம் இதன் ஆசிரியர் இதுவரையிலும் எழுதிய புத்தகங்கள் எல்லாவற்றிற்கும் சிகரமாகத்தான் விளங்குகின்றது. இதை நான் இரண்டு தரம் படித்துவிட்டேன். இதை நீங்கள் எனக்குப் படிக்கக் கொடுத்த அன்பிற்காக மிக்க வந்தனம்" என்று சொல்லிக்கொண்டே புத்தகத்தைத் திருப்பித்தர நீட்டினாள்.

" வேண்டாம். என்னிடத்தில் இன்னொரு பிரதி இருக்கிறது. இதை நீங்களே வைத்துக் கொள்ளுங்கள். நிற்கிறீர்களே உள்ளே வந்து சிறிது உட்காருங்களேன்" என்றான் வாலிபன்.

"இல்லை. எனக்குக் காரியாலயத்துக்குப் போக நேரமாகிவிட்டது. இன்னொரு நாள் சாவகாசமாக வருகிறேன்" என்று கூறி அப்பெண் விடைபெற்றுக் கொண்டாள்.

இப்படி ஏற்பட்ட பரிச்சயம் நாளுக்கு நாள் அதிகப்பட்டு நட்பாக முதிர்ந்து கடைசியில் காதலாகக் கனிந்து விட்டது. இவர்களுடைய காதலுக்கு விரோதமாக, இந்தப் பெண்ணை, ஏற்கனவே காதலித்திருந்த இன்னொருவனுடைய சூழ்ச்சிகளால் நடந்த சில திடுக்கிடும்படியான நிகழ்ச்சிகளை முறியடித்து இவர்கள் திருமணம் செய்து கொண்டு பல தீரச் செயல்களைப் புரிகிறார்கள் - என்பது கதை.



இதையே பின்பற்றியதாக, ராஜாராமன் ஒரு நாள் மாலையில் பத்மாவதி கல்லூரியிலிருந்து வீட்டுக்குப் போகும்போது சந்தடியில்லாத சமயத்தில் அவளைச் சந்தித்து "பத்மாவதியம்மா, உங்களோடு ஒரு வார்த்தை" என்று மிக்க விநயத்தோடு சொன்னான்.

*"என்ன?" என்று நின்றாள், பத்மாவதி.*

*'இந்தப் புத்தகத்தை நீங்கள் படித்திருக்கிறீர்களா?"* என்று ஒரு அழகான மூவர்ணச் சித்திர உறைபோட்ட புத்தகத்தை நீட்டினான்.

பத்மாவதி தலை குனிந்தபடியே அந்தப் புத்தகத்தின் பெயரைப் பார்த்தாள். அதன்பெயர் 'காதலின் வெற்றி' என்று மிகப் பிரகாசமான பெரிய எழுத்துக்களில் காணப்பட்டது. கீழே ஆசிரியரின் பெயரும் இருந்தது.

"இல்லை. இந்தப் புத்தகத்தை நான் படித்ததில்லை" என்று புத்தகத்தைப் பார்த்தபடியே தலையை நிமிர்த்தாமல் மெதுவாகச் சொன்னாள் பத்மாவதி.

"மிக நல்ல கதை. கொண்டுபோய்ப் படித்துப் பாருங்கள்" என்றான் ராஜாராமன்.

"வேண்டாம், வேண்டாம். இது எனக்குத் துளிகூடப் பிடிக்காது. இந்த ஆசிரியர் மிகக் கொச்சையான எழுத்தாளர். அவருக்கு இந்தக் 'காதல்' என்ற ஒரு சொல்லைத் தவிர வேறொன்றும் தெரியாது" என்று ராஜாராமனுடைய முகத்தைக் கூடப் பார்க்காமல் சொல்லிக்கொண்டே போய் விட்டாள். ராஜாராமன் பத்மாவதியின் மீது கொண்ட 'திருமணக் காதலின்' முதல் முயற்சி இப்படி முடிந்தது. அவனுக்கு இடிவிழுந்ததுபோல் ஆகிவிட்டது. அந்தப் புத்தகம் தனக்குப் பிடிக்காது என்று அவள் சொன்னதுகூட ராஜாராமனுக்கு வருத்த முண்டாக்கவில்லை ஆனால், அவள் தன்னுடைய முகத்தைக்கூடப் பார்க்காமல் வெகு அலட்சியமாகப் பதில் சொன்னதும், சொல்லிக் கொண்டே

போய் விட்டதும் அவனுக்கு அளவற்ற வருத்தத்தையும், அவமானத்தையும் உண்டாக்கி விட்டது. ஆனாலும் அவனுக்கு அவள் மீது வளர்ந்துவிட்ட ஆசை தணியவில்லை.

ராஜாராமன் வருத்தம் என்பது இன்னதென்றே தெரியாமல் வளர்ந்தவன். பெற்றோருக்கு மிகவும் பிரியமான செல்லக் குழந்தை. அவன் எதை விரும்பினாலும், உடனே அதை அவன்பெற்றோர்கள் பூர்த்தி செய்வார்கள். ஆனாலும் அவன் குற்றமான எதையும் விரும்பமாட்டான். புத்தி கூர்மையும் நல்லொழுக்கமும் உள்ளவன். உடல் வலிமையும் ஆரோக்கியமும் மிகுந்த வாலிபத்தின் இயல்பினால் பத்மாவதியின் அபூர்வமான அழகு அவனுடைய காதல் உணர்ச்சிகளைத் தூண்டிவிட்டது என்பதைத் தவிர வேறு குற்றம் சொல்ல முடியாது. அதுவும் பத்மாவதி தன்னுடைய தந்தைக்கு மிகவும் நெருங்கிய நண்பராகவும் தூரத்து உறவாகவும் உள்ளவருடைய மகளானதால் அவளைத் திருமணம் செய்துகொள்வது மிகவும் எளிதான காரியம் என்று எண்ணியதால்தான் அவளுடன் காதல் பேச்சுகள் பேச முடியும் என்று எண்ணினான். பத்மாவதியும் இவனை அவமதிக்க வேண்டுமென்று அப்படிப் பேசினவள் அல்ல. பழக்கமில்லாத எந்த மாணவனோடும் அப்படித்தான் பேசுவது அவளுடைய சுபாவம். அதுவும் நடுவழியில் ஆண்பிள்ளைகளோடு நின்று பேசுவதை அருவருப்பவள். ஆனால் அவள் தன்னை அவமதித்துவிட்டதாகவே ராஜாராமன் எண்ணினான்.

ராஜாராமன் மிக்க விசனத்தோடு வீட்டுக்குப் போனான். அன்றிரவு அவன் உணவு கொள்ளவில்லை. பசியில்லையென்று படுத்துக்கொண்டான். உறக்கமும் வரவில்லை. பத்மாவதி தன்னை அவமதித்ததை வெகு விரைவில் மறந்துவிட்டான். ஆனால் அவளை மறக்க முடியவில்லை. தன் தந்தையாரிடம் சொல்லிப் பெண் கேட்கச் செய்து, எப்படியாவது அவளை மணந்துகொள்ளும் மார்க்கத்தை எண்ணிக்கொண்டே இரவைக் கழித்தான்.



பசியோடு உணவு கொண்டு பச்சைக் குழந்தைபோல் உறங்கி அதிகாலையில் எழுந்து படிப்பைக் கவனிப்பது அவன் பழக்கம். அப்படிப்பட்டவன் உணவு கொள்ளாததாலும் உறக்கம் இல்லாததாலும் மிகவும் சோர்வடைந்து விடிந்து வெகு நேரம் வரையிலும் விழித்துக்கொண்டே படுக்கையில் கிடந்தான். வழக்கம்போல் மகன் எழுந்து வராததைக் கண்ட தாயார் வந்து பார்த்தாள். மகனுக்கு ஏதேனும் அசௌக்கியமோ என்று அவனைத் தொட்டுப்பார்த்தாள்.

"உடம்புக்கு ஒன்றுமில்லையம்மா" என்றான்.

"பின் ஏன் இப்படி அசந்து கிடக்கிறாய்? ராத்திரி சாப்பிடக்கூட இல்லையே! எழுந்து வந்து காப்பியாவது சாப்பிடு, அப்புறம் குளித்துக் கொள்ளலாம்" என்றாள் தாய்.

"இன்னும் கொஞ்சம் நேரம் போகட்டும்" என்றான்.

"ஏன்?"

ராஜாராமன் பதில் சொல்லாமல் புன்முறுவல் செய்தான். மறுபடியும் தாயார் கேட்டாள். அவன் இலேசாகச் சிரித்தான். மகன் எதையோ மனத்தில் வைத்துக் கொண்டு ஏக்கத்துடன் இருக்கிறான் என்பதை அனுமானித்த அன்னை அவன் அருகில் அமர்ந்து அவனுடைய ஏக்கம் என்னவென்பதை அறிய விரும்பினாள்.

ராஜாராமன் தன் விருப்பம் எதையும் தாய் தந்தையிடத்தில் ஒளித்ததில்லை. அத்துடன் அவர்கள் மூலமாகவே பத்மாவதியை மணந்துகொள்ள வழிதேடவேண்டுமென்றும் அவர்களிடம் எப்படி எப்போது சொல்லலாம் என்றும் எண்ணிக்கொண்டே படுத்திருந்தவன். அதனால் உடனே எழுந்து உட்கார்ந்து தனக்கு பத்மாவதியின் மேல் வளர்ந்துவிட்ட ஆசையைச் சொல்லி எப்படியாவது அவளைத் தனக்கு மணஞ்செய்து வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டான். மகனுடைய விருப்பம் எதுவானாலும்

அதை முடித்துவைக்க முன் நின்று காரியம் செய்யக்கூடிய வளாகிய சரஸ்வதியம்மாள் இதைக்கேட்டுச் சற்றே திடுக்கிட்டு வருத்தம் அடைந்தாள். ஏனென்றால் அவள் எப்படியாவது தன் சகோதரரின் மகள் சீதாலஷ்மியை மகனுக்கு மணந்துகொள்ள வேண்டுமென்று எண்ணிக்கொண்டே இருப்பவள். இந்த சேதி அந்த ஆசைக்கு இடையூறாக வந்துவிட்டதில் அவளுக்கு வருத்தமுண்டானதில் வியப்பில்லை. இருந்தாலும் மகனுடைய ஆசையை மறுத்துப் பேச மனம் வரவில்லை. மகனுடைய விருப்பத்தை ஆமோதிப்பதுபோலவே அவன் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

அந்தச் சமயத்தில், ராஜாராமன் இன்னும் படுக்கையை விட்டு வரவில்லையே என்று அவனைப் பார்க்க அவனுடைய தந்தை சிவசுப்பிரமணியம் அங்கே வந்தார்.

தன்னிடம் சொன்னதைத் தந்தையிடம் சொல்லும் படி தாயார் சொல்ல, ராஜாராமன் தன் தந்தையிடம் எல்லாவற்றையும் சொன்னான். வெகு அனுதாபத்தோடு அதைக் கேட்ட தந்தை,

"பத்மவாதி மிகவும் விரும்பத் தகுந்த பெண். அவள் மீது நீ ஆசை கொண்டதில் குற்றமில்லை அவளுடைய தந்தை ஜானகிராமனும் உன் மீது மிக்க அன்புடையவர். நான் நாளைக்கே அவருடன் பேசி வேண்டிய ஏற்பாடுகளைச் செய்கிறேன். நீ கவலைப்படாதே" என்றார்.

அவன் எதிர்பார்த்தபடியே தந்தை அவனுடைய ஆசையை ஆமோதித்ததில் ராஜாராமன் அளவற்ற ஆறுதல் அடைந்தான். ஏக்கம் நீங்கி உடனே எழுந்து போய்க் காலைக் கடன்களை முடித்துக்கொண்டுத் தன் காரியங்களை வழக்கம்போல் கவனிக்கலானான்.

அடுத்த ஞாயிற்றுக்கிழமை காலையில் அதே வேலையாக, சிவசுப்பிரமணியம் தன் மகனுக்குப் பத்மாவதியைப் பெண் கேட்க ஜானகிராமன் வீட்டுக்குப் புறப்பட்டார்.



ராஜாராமன் தானும் அவருடன் போக ஆசைப்பட்டான். மகனுடைய விருப்பம் எதையும் மறுத்தறியாத சிவசுப்பிரமணியம் அவனையும் உடன் கொண்டு சென்றார். ஜானகிராமன் அடிக்கடி சிவசுப்பிரமணியம் வீட்டுக்குப் போனாலும் சிவசுப்பிரமணியம் அபூர்வமாகத்தான் ஜானகிராமன் வீட்டுக்குப் போவார். அதனால் அபூர்வமாக வந்த சிவசுப்பிரமணியத்தை ஜானகிராமன் வெகு ஆர்வத்தோடு வரவேற்று உபசரித்தார். அவருக்கு ராஜாராமனிடத்தில் எப்போதும் ஒரு அலாதியான கவர்ச்சி. அதனால் அவனும் வந்திருப்பதில் பெருமகிழ்ச்சியடைந்து அவர்கள் இருவருக்கும் சிற்றுண்டியும் காப்பியும் கொண்டுவரக் கட்டளையிட்டார். சிறிது நேரத்தில் காமாட்சியம்மாள் சிற்றுண்டியும் காப்பியும் கொண்டு வந்தாள். ராஜாராமன் பத்மாவதி கொண்டு வருவாளோ என்று எதிர்பார்த்து ஏமாந்தான்.

காப்பி சாப்பிட்டான பின் ஜானகிராமனும் சிவசுப்பிரமணியமும் வெவ்வேறு விஷயங்களைப் பற்றி வெகு நேரம் பேசிக்கொண்டிருந்தார்கள். கடைசியாக சிவசுப்பிரமணியம், "உங்களுடன் தனியே கொஞ்சம் பேச வேண்டும்" என்றார். உடனே ஜானகிராமன் அவரை ஒரு ஏகாந்தமான அறைக்குள் அழைத்துக்கொண்டு போய்க் கதவை மூடிக்கொண்டார்.

தன்னுடைய விவாகத்தைப் பற்றிய பேச்சு நடக்கப்போகிறது என்ற மகிழ்ச்சியுடன் ராஜாராமன், பத்மாவதி கண்ணுக்குப் படமாட்டாளா என்று அந்த வீட்டின் எல்லாப் பக்கங்களையும் பார்ப்பவன்போல அங்கு மிங்கும் உலாவிக்கொண்டிருந்தான். சிறிது நேரத்தில் வீட்டின் பின் கட்டிலிருந்து மாடிக்குப்போக வந்த பத்மாவதி அவனைப் பார்த்தாள். பார்த்தவுடன் நாணம் வந்துவிட்டவள் போல் தலை குனிந்தபடியே அவனைக் கடந்து மாடிக்குப் போய் விட்டாள்.

ஏகாந்த அறைக்குள் சிவசுப்பிரமணியம் ஜானகிராமனிடத்தில் தான் வந்த காரியத்தைச் சுருக்கமாகச்

சொல்லி, பத்மாவதியைத் தன் மகன் ராஜாராமனுக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். ஜானகிராமன் உடனே பதில் சொல்லாமல் சிறிது நேரம் தலையைக் கவிழ்த்தபடியே மௌனமாக இருந்துவிட்டுத் தலை நிமிர்ந்தபோது அவருடைய முகத்தில் வேதனைக் குறிகள் காணப்பட்டன. கண்கள் கலங்கி அவற்றில் கண்ணீர் நிறைந்திருந்தது. பேச்சு வராமல் உதடுகள் நடுங்கிக் கொண்டிருந்தன. தயங்கித் தயங்கித் தழுதழுத்த குரலில் பதில் சொல்லலானார்.

"சிவசுப்பிரமணியம்! ராஜாராமன் மீது எனக்கு அளவு கடந்த பிரியம் உண்டு என்பது நீங்கள் அறியாததல்ல. அவனைப் பார்க்கும்போதெல்லாம் பத்மாவதிக்கு அவன்தான் தகுந்த மாப்பிள்ளை என்று எனக்குள் தீர்மானித்துக் கொள்வதுண்டு. அவனை மருமகனாக அடையக் கொடுத்துவைத்திருக்க வேண்டும் என்று அடிக்கடி நினைத்திருக்கிறேன். நீங்கள் பெண் கேட்காவிட்டாலும் நானே உங்களை வற்புறுத்திப் பத்மாவை அவனுக்கு மனைவியாக ஏற்றுக்கொள்ளச் செய்ய வேண்டும் என்று பல முறை எண்ணியிருக்கிறேன். இப்போதும் ராஜாராமன் என் மகளை மணந்துகொள்ள நேருமானால் நான் எல்லையற்ற மகிழ்ச்சியடைவேன். ஆனால் சூழ்நிலைகள் அதற்கு முற்றிலும் விரோதமாக அமைந்துவிட்டன. பத்மாவதியை என்மனைவி தன்னுடைய தமையன் மகன் கோபாலனுக்குத் தான் கொடுக்க வேண்டுமென்று மாற்றமுடியாத தீர்மானம் செய்துகொண்டிருந்தாள். அவளுடைய தமையனாகிய என் மைத்துனர் எனக்குப் பலவிதமான உதவிகள் செய்தவர். அவரும் தன் மகன் கோபாலனுக்கே பத்மாவைக் கொடுக்க வேண்டுமென்று, பத்மாவதி பச்சிளங் குழந்தையாக இருக்கும்போது முதற்கொண்டு கேட்டுவருகிறார். அதுமட்டுமல்லாமல் பத்மாவதியும் கோபாலனையே விரும்புவதாகத் தோன்றியது. அவன் இங்கே அடிக்கடி வருகிறான். அவன் வரும்போதெல்லாம் பத்மாவதி அவனுடன் கொஞ்சி மகிழ்ந்து குலவுகிறாள். இப்படிப்பட்ட காரணங்களால் பத்மாவதியைக் கோபாலனுக்கே கொடுப்பதாக ஒத்துக்கொண்டு வாக்களித்துவிட்டேன். என் விருப்பத்துக்கு முற்றிலும் விரோதமாகத்தான் அப்படி வாக்களிக்க நேர்ந்துவிட்டது. பத்மாவதிக்கும் கோபாலனுக்கும் அவர்களுடைய பரீட்சைகள் முடிந்தவுடன் திருமணம் செய்வதாகத் தீர்மானிக்கப் பட்டிருக்கிறது. வழக்கப்படி சடங்குகளுடன் நடக்க வேண்டிய நிச்சயார்த்தம் ஆகவில்லையென்றாலும் பேச்சளவில் நிச்சயமாகியிருக்கிறது. அதனால் நானே வந்து உங்களிடம் சொல்லிப் பத்மாவதியை ராஜாராமனுக்கு மணந்துகொள்ள வேண்டுமென்று கேட்க எண்ணியிருந்த ஆசையை விட்டுவிட்டேன். நீங்கள் பெண் கேட்க வருவீர்களென்று நான் நினைக்கவேயில்லை. நீங்களாக வந்து கேட்டும் நான் இப்படிப்பட்ட பதில் சொல்ல வேண்டிய துர்ப்பாக்கியமான நிலைமை ஏற்பட்டுவிட்டதே என்று என் மனம் தவிக்கிறது. என்ன செய்வேன்? தெய்வாதீனமாக இந்த நிலைமை மாறிவிடக் கூடுமானால் நான் தான் எல்லாரிலும் அதிகமான ஆனந்தத்தை அடைவேன்'' என்று சொல்லி முடிக்கும்போது அவர் கண்ணீர் சிந்தி அழுதே அழுதுவிட்டார்.



ஜானகிராமன் மிகவும் நம்பத்தகுந்த கனவான்; அவர் சொன்னதில் துளிகூடப் பிசகிருக்காது என்பதை அறிந்து சிவசுப்பிரமணியம், ''கவலைப்பட வேண்டாம். இங்குள்ள நிலைமையை அறியாமல் உங்களுக்கு வருத்த முண்டாக்கிவிட்டேன். நீங்கள் என் மகன் மீது கொண்டுள்ள அபரிதமான ஆர்வத்தை அறிவேன். இருந்தும் தெய்வசித்தம் வேறாக இருந்துவிட்டது, அதற்கு நீங்கள் என்ன செய்வீர்கள்? எது எப்படி நடக்கும் என்று யார் சொல்ல முடியும்? நம் இஷ்டப்படி எல்லாம் முடிந்து விடுகிறதா? நீங்கள் சொன்னபடி தெய்வாதீனமாக இப்போதுள்ள நிலைமையும் கூட மாறிவிடலாம். யார் கண்டது? தெய்வசித்தம் எதுவோ அது நடக்கட்டும். நீங்கள் வருத்தப்பட வேண்டாம்'' என்று விடை பெற்றுக் கொண்டார்.

பார்க்கும் போதெல்லாம் தன்னை வெகு பரிவுடன் கொண்டாடிப் பாராட்டி மகிழும் ஜானகிராமன் பத்மாவதியைத் தனக்கு மணஞ்செய்து கொடுக்கத் தயங்க மாட்டார் என்று எண்ணிக்கொண்டே ராஜாராமன் வெகு ஆவலோடு தந்தையின் வருகைக்காகக் காத்திருந்தான். ஏகாந்த அறையை விட்டு வெளியே வந்த 'சிவசுப்பிரமணியம் ராஜாராமனைப் பார்த்துப் 'போகலாமா' என்று மட்டும் சொல்லிவிட்டு முன்னால் நடந்தார். மகனும் பின்னால் சென்றான்.

வீடுபோய்ச் சேருகிற வரையிலும் ஒன்றும் சொல்லவில்லை. வீட்டுக்குள் புகுந்ததும் ஒரு ஏகாந்தமான அறையில் மகனையும் மனைவியையும் அருகில் அமரச் செய்து, பத்மாவதியின் தந்தை ஜானகிராமன் மிகுந்த வருத்தத்தோடு கண்ணீர் வடித்துச் சொன்னதை யெல்லாம் அப்படியே சொன்னார் சிவசுப்பிரமணியம். ராஜாராமன் மிகவும் ஏமாற்றமடைந்தான். அவனுடைய தாயார் மனதுக்குள் மகிழ்ச்சியடைந்தாலும் வெளிக்கு மிக்க விசனப்பட்டாள். கடைசியாகத் தந்தை மகனைப் பார்த்து ''இனிமேல் நாம் பத்மாவதியைப் பற்றி நினைக்க நியாயமில்லை'' என்றார்.

''பத்மாவதியைவிட ஆயிரம் பங்கு அழகான பெண்ணை உனக்கு நான் கலியாணம் செய்து வைக்கிறேன். கவலைப் படாதே'' என்றாள் தாயார்.

புத்திகூர்மையும் நல்லொழுக்கமும் பெற்றோரிடத்தில் பிரியமும் உடைய ராஜாராமன் நிலையை நன்கு உணர்ந்து கொண்டு தன் ஆத்திரத்தை அடக்கிக் கொண்டான், என்றாலும் இந்த ஏமாற்றத்தின் அதிர்ச்சி அவனைச் சில நாட்கள் மிகுந்த துயரத்தில் ஆழ்த்திவிட்டது. அதன் பிறகு சிறுகச் சிறுக மனந்தேறிப் பத்மாவதியை மணந்து கொள்ள முடியும் என்ற ஆசையை விட்டுவிட்டான். கலாசாலையிலும் பத்மாவதி வரும்போதும் போகும்போதும் காத்திருந்து அவளைப் பார்த்துக்கொண்டிருந்த பழக்கத்தை



விட்டொழித்தான். ஆனாலும் அவளைப் பற்றிய சபலம் அவனுடைய உள்ளத்தின் ஒரு மூலையில் இருந்து கொண்டேயிருந்தது.

அப்படிப்பட்ட ராஜாராமன் மீது இப்போது பத்மாவதி கொள்ளை கொள்ளையாக அன்பைக் கொட்டுகின்றாள். முன்னே கல்லூரியிலிருந்து அவள் வீட்டுக்குப் போகும்போது ராஜாராமன் அவளிடத்தில் காட்டிய 'காதலின் வெற்றி' என்ற புத்தகத்தைக் கையிற்கூட, வாங்காமல் அதைப் பார்த்து விட்டு 'இதெல்லாம் எனக்குப் பிடிக்காது' என்று முகமெடுத்து அவனைப் பார்க்காமல் கூட சொல்லிக்கொண்டே போய்விட்டவள் இப்போது குழைந்து குழைந்து கொஞ்சுகிறாள்! அப்போது அவன் பெருமையை அறியாமற் போனதாகவும் இப்போது அறிந்து கொண்டதாகவும் சொல்லுகின்றாள்! அப்போது அவனுடன் முகங்கொடுத்துப் பேசாத குற்றத்திற்கு இப்போது மன்னிப்பு கேட்கிறாள்! அப்போது பேசாத பேச்சையெல்லாம் இனிமேல் பேசலாம் என்றாள்! அவளைத் தனக்குப் பெண்கேட்கத் தந்தையுடன் அவளுடைய வீட்டுக்குப் போயிருந்தபோது அவனைப் பார்த்தும் வெகு அலட்சியமாக மாடிக்குப் போய்விட்ட அதே பத்மாவதி இப்போது அவன் தன்னுடைய வீட்டுக்குப் போய்வரவும் விடமாட்டேன் என்கிறாள் எப்போதும் ராஜாராமன் தன்னுடன் இருக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறாள்! அவனுடைய ஆற்றலைப் பலபடியாகப் புகழ்ந்து பேசுகிறாள்! அவனுக்கு மிக விலையுயர்ந்த ஜரிகை வேட்டிகளை மாற்றுடையாகத் தந்து அவனுடைய அழகை வியந்து பேசுகிறாள்! கூச்சமில்லாமல் அவனுடன் அவனுக்குப் பக்கத்தில் உட்கார்ந்து உணவு கொள்ள விரும்புகிறாள்! அவன் சரியாகச் சாப்பிடவில்லையே என்று சங்கடப்படுகிறாள்! அவனுக்கென்று கட்டிலைத் தூக்கிக்கொண்டு வருகிறாள்! படுக்கை விரித்துக் கொடுத்து அலுப்புத் தீர்த்துக் கொள்ளும்படி உபசரிக்கிறாள்!

அப்பப்பா என்ன மாறுதல்! இந்த மாறுதலை உண்டாக்க வாய்ப்பளித்த தெய்வச்செயலை ராஜாராமன் மனமார வாழ்த்திவணங்கினான். கிட்டாது என்று கைவிட்ட பொருள் கிட்டிவிட்டதென்ற இன்பக் கடலில் முழுகிமுழுகித் திளைத்துக் கொண்டிருந்தான் ராஜாராமன்.

அவசரப்பட்டு விடாமல் தக்கதருணம் பார்த்துத் தன் காதலை வெளியிடவேண்டுமென்று தன் மனத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டான்.

## 3

பத்மாவதியின் அருமைத் தம்பி சுந்தரேசன் கிணற்றில் முழுகிப்போவதினின்று காப்பாற்றப்பட்ட நாள் முழுதும், அன்று இரவும், அடுத்த நாள் பகல் முழுதும் ராஜாராமன் பத்மாவதி வீட்டில் இருந்துவிட்டு மாலையில் தன் வீட்டுக்குப் போய்வரப் பத்மாவதியிடம் பிரியாவிடை பெற்றுச் சென்றானல்லவா? அவன் தன் வீட்டுக்குள் நுழைந்தபோது அங்கே முதலில் எதிர்பட்டது அவனுடைய தந்தை சிவசுப்பிரமணியம். மகிழ்ச்சி நிறைந்த மலர்ந்த முகத்தோடு மகனை வரவேற்று அவன் சுந்தரேசன் உயிரைக் காப்பாற்றி உதவி புரிந்த தீரச் செயலைப் பாராட்டிப் பெருமையடைந்தார், சிவசுப்பிரமணியம்.

அப்போது ராஜாராமன், பத்மாவதி அன்று காலையில் அவனுக்கு மாற்றுடையாகத் தந்திருந்த விலைமிகுந்த வெண்பட்டு ஜரிகை வேட்டியையும் அங்கவஸ்திரத்தையும் அணிந்திருந்தான். ராஜாராமன் எப்போதும் மிக்க விலையுர்ந்த உடைகளைத்தான் அணிவது வழக்கம். இப்போது அவன் அணிந்திருந்த உடை அவன் வழக்கமாக விரும்பும் உடைகளினும் விலையுயர்ந்ததாக இருந்தது சிவசுப்பிரமணியத்தின் கவனத்தைக் கவர்ந்து. மிகவும் மெல்லியதாக அழகான சித்திர வேலைகள் அடங்கியவெகு



அகலமான ஜரிகைக் கரைகள் அமைந்த புத்தம் புதுப் பட்டாடைகளைச் சிறிது நேரம் உற்றுப் பார்த்த சிவசுப்பிரமணியம், “ஜானகிராமன் இவ்வளவு ஆடம்பரமான வஸ்திரங்கள் அணிவதை நான் பார்த்ததேயில்லையே! இது ஏது? யார் கொடுத்தது?” என்றார்.

“இது ஏதோ, யாருடையதோ எனக்குத் தெரியாது! இதைப் பத்மாவதி தான் இன்று காலையில் நான் குளித்தபின் உடுத்திக்கொள்ள மாற்றுடையாக எடுத்துவைத்து, இதை நான் அணிந்து கொண்டால் வெகு அழகாக இருக்குமென்று வர்ணித்தாள்’ என்று சொல்லிவிட்டு, உடனே தொடர்ந்து பத்மாவதி தன்மீது அள்ளிச் சொரிந்த அபரிதமான அன்பையும் அபிமானத்தையும் விரித்துரைக்கத் தொடங்கிவிட்டான் ராஜாராமன். பத்மாவதி அவனிடம் பேசிய ஒவ்வொரு சொல்லையும், அவள் அவனுக்காகச் சொல்லி, அவள் தன்னை விட்டுப் பிரிய மனமில்லாமல் இருப்பதையும், அந்த வீட்டைச் சொந்தவீடாக மதித்து அங்கேயே தன்னைத் தங்கும்படிக் கேட்டுக் கொண்டதையும் வெகு பூரிப்போடு சொல்லிக் கொண்டான்.

இல்லாத எதையும் மகன் சொல்லமாட்டான் என்பதை நன்றாகத் தெரிந்திருந்த சிவசுப்பிரமணியம், ராஜாராமன் சொன்னதையெல்லாம் கேட்டுப் பத்மாவதிக்கு ராஜாராமனிடத்தில் ஏற்பட்டிருக்கிற மகத்தான மனமாறுதலைப்பற்றி வியப்படைந்தார். அப்போது அவருக்கு ஒரு விஷயம் ஞாபகத்துக்கு வந்தது. அது என்னவென்றால், அவர் முன்னே ஜானகிராமன் வீட்டுக்குப் போய் பத்மாவதியை ராஜாராமனுக்குப் பெண் கேட்டபோது ஜானகிராமன் மிக்க துக்கத்தோடு கோபாலனுக்குப் பத்மாவதியைக் கொடுக்கத் தீர்மானம் செய்யவேண்டி நேரிட்ட நிலைமையைச் சொல்லிவிட்டுக் கடைசியாக ‘தெய்வாதீனமாக இந்த நிலைமை மாறிவிடக் கூடுமானால் நான்தான் எல்லோரிலும் அதிகமாக ஆனந்தம் அடைவேன்’ என்று சொன்னதுதான். அந்த

தெய்வாதீனமான மாறுதல்தான் இதுவென்று தனக்குள்ளேயே மகிழ்ந்து கொண்டார். சிவசுப்பிரமணியம்.

இரவு சாப்பாட்டுக்குப் பின் தன் தாயாரிடத்திலும் பத்மாவதியைப் பற்றி வெகு நேரம் பேசிக்கொண்டிருந்தான் ராஜாராமன். அந்த அம்மாளுக்குச் சந்தோஷம் ஒரு பக்கம்; சலிப்பு ஒரு பக்கம். அருமை மகனுடைய ஆசை பூர்த்தியாகட்டும் என்ற சந்தோஷம். அவனுக்குத் தன் அண்ணன் மகள் சீதாலஷ்மியை மணந்துகொள்ள வேண்டுமென்ற தன் நெடுநாளைய ஆசை பூர்த்தியாகாதே என்ற சலிப்பு. தன் சலிப்பைக் காட்டிக்கொள்ளாமல் மகன் சொன்னதையெல்லாம் அனுதாபத்தோடு கேட்டுக் கொண்டு சும்மா இருந்துவிட்டாள்.

மிகப் பெரிய வெற்றியடைந்துவிட்ட நிம்மதியோடு படுத்துக்கொண்டான் ராஜாராமன். விடிந்து விட்டதா என்ற பார்க்க இடையிடையே விழித்துக்கொண்டு இரவைக் கழித்தான். அதிகாலையில் எழுந்து நீராடி வழக்கத்துக்கு அதிகமாகவே அலங்காரம் செய்துகொண்டு, பத்மாவதி கொடுத்த ஆடைகளை மடித்துக் காகிதத்தில் பொட்டலங்கட்டி எடுத்துக்கொண்டு, காப்பிகூடச் சாப்பிடாமல் வெளியே போவதை அறிந்த சரஸ்வதியம்மாள் தன் கணவனிடம் சொல்லிக் காப்பி சாப்பிட ராஜாராமனைக் கூப்பிடச் சொன்னாள். அதற்கு அவர், ''இப்போது பத்மாவதி கொடுக்கிற காப்பிதான் அவனுக்கு இனிக்கும். அவள் காப்பி சாப்பிட அங்கே வரச் சொல்லி யிருப்பாள். போகட்டுமே, அவன் ஆசையைத்தான் நாம் கெடுப்பானேன்?'' என்றார்.

இதை அவர் சொல்லுவதற்கு முன்னாலேயே ராஜாராமன் போய் விட்டான். ராஜாராமன் எண்ணியபடியே பத்மாவதி அவன் வரவை வெகு ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். குளித்து விட்டு அழகு சொட்ட அலங்கரித்துக்கொண்டு, தம்பி சுந்தரேசனுக்குக் காலை ஆகாரம் கொடுக்க அவனருகில் அமர்ந்திருந்தாள்.



ராஜாராமனைக் கண்டவுடன் துள்ளி யெழுந்து அவன் முன் ஓடி, ''எப்போது விடியும் என்று காத்துக் கொண்டிருந்து விடிந்தவுடன் வருவதாகச் சொன்னீர்களே! எவ்வளவு நேரமாகக் காத்துக்கொண்டிருக்கிறேன்! நேற்று நீங்கள் போன பிற்பாடு தம்பி சுந்தரேசன் 'அவர் எங்கே!', 'அவர் எங்கே?' என்று ஆயிரம் தடவை கேட்டு விட்டான், உங்களைப் பற்றி. எனக்கும் நீங்கள் இல்லாதது, எப்படியோ இருந்தது. விடிந்ததும் நீங்கள் வந்து விடுவீர்கள் என்றுதான் நான் வெகுநேர மிருக்கும்போதே எழுந்து குளித்துவிட்டுத் தம்பிக்கும் உங்களுக்கும் ஆகாரம் செய்து வைத்தேன். டாக்டர் சொல்லியிருந்தபடி தம்பிக்கு இலேசான ஆகாரம் கொடுத்துவிட்டேன். உட்காருங்கள் உங்களுக்கும் எனக்கும் காப்பியும் பலகாரமும் கொண்டு வருகிறேன்'' என்று வீட்டுக்குள் ஓடி விட்டாள்.

ராஜாராமன் சுந்தரேசனுக்கு அருகில் நாற்காலியில் உட்கார்ந்து அவனுடைய உடல் நிலையைப் பற்றி விசாரித்தான். சுந்தரேசன் நன்றி மிகுந்த வணக்கத்தோடு தான் முற்றிலும் நலமடைந்திருப்பதாகச் சொல்லிவிட்டு,

''உங்களால்தான் நான் உயிரோடிருக்கிறேன். பத்மாவதி அக்காள் நீங்கள் எனக்காகப் பட்ட பாடுகளை யெல்லாம் சொன்னாள். அவள் பேச்செல்லாம் உங்களைப் பற்றியே தான். உங்களுக்குச் சரியானபடி வந்தனம் சொல்லவோ நன்றி செலுத்தவோ எனக்குத் தெரியாது. மன்னியுங்கள்'' என்று கரங்குவித்தான்.

ராஜாராமன் அவன் கரங்களைப் பிடித்துக்கொண்டு, நன்றி என்றும், வந்தனம் என்றும் அப்படி யெல்லாம் சொல்லவேண்டாம் என்று கேட்டுக்கொண்டான்.

ஜானகிராமனும் காமாட்சியம்மாளும் வந்து ராஜாராமனை வரவேற்றுவிட்டுப் போனார்கள். பத்மாவதியும் சமையற்காரியும் பலகாரங்களும் பழங்களும் காப்பியும்

கொண்டு வந்தார்கள். சமையற்காரி பரிமாற ராஜாராமனும் பத்மாவதியும் அருந்தினார்கள். அதன் பிறகு அன்றைக்குக் கல்லூரிக்குப் போகாமல் இருவரும் 'லீவ்' பெற்றுக் கொள்வதென்று தீர்மானித்து, 'லீவ்' கடிதங்களை எழுத மேல்மாடியில் பத்மாவதி படிக்கும் அறைக்குப் போனார்கள். 'லீவ்' கடிதங்களைத் தனித்தனியே எழுதி முடித்த பின் ராஜாராமன் தன் கையிலேயே வைத்துக் கொண்டிருந்த காகிதத்தில் கட்டியிருந்த பெரிய பொட்டலத்தைப் பத்மாவதியிடம் கொடுத்தான். அதை அவள் அவிழ்த்துப் பார்த்தாள். அதில் அவள் அவனுக்கு மாற்றுடையாகத் தந்திருந்த புது வெண்பட்டுச் சரிகை வேட்டியும் அங்கவஸ்திரமும் இருந்தன.

''ஏன்? இவற்றை எதற்காக என்னிடம் தருகிறீர்கள்?'' என்றாள் பத்மாவதி.

''ஏன்? இரவலாகக் கொடுத்ததைத் திருப்பிக்கொடுத்து விடவேண்டாமா?'' என்றான்.

''இல்லையில்லை; இவை உங்களுக்கு இரவலாகக் கொடுக்கப்படவில்லை. நீங்களே வைத்துக் கொள்ள வேண்டு மென்று எண்ணியே கொடுக்கப்பட்டவை'' என்றாள்.

''சுந்தரேசனைக் காப்பாற்றினேன் என்பதற்குப் பரிசா?''

''சுந்தரேசனைக் காப்பாற்றியதற்கு இந்தச் சிறு பொருள் ஈடாகிவிடுமா? அதற்குப் பரிசு கொடுக்கப் பொருளும் உண்டா? என் உயிரையே கொடுத்தாலும் ஈடாகாது என்றல்லவா நான் எண்ணிக்கொண்டிருக்கிறேன். உங்களுக்கு மாற்றுடையாகப் பிறர் கட்டிய பழைய ஆடையைக் கொடுக்க மனம் வராமல் புதிதாக இருந்த இதை நீங்கள் அணிந்துகொள்ள வேண்டுமென்று ஆசைப்பட்டேன்; அவ்வளவுதான்'' என்றாள் பத்மாவதி.

''அது சரி; இவ்வளவு விலையுயர்ந்த வேட்டிகள் யாருடையவை? உன் தந்தை இப்படிப்பட்ட ஆடம்பர



ஆடைகளை அணியமாட்டார் என்று என் தந்தை சொன்னாரே! சுந்தரேசனுக்கும் இவ்வளவு பெரிய வேட்டிகள் பயன்பட முடியாதே! பின் ஏது?'' என்றான்.

அதைக் கேட்ட பத்மாவதி கலகலவென்று சிரித்து விட்டு, ''இதுவா? இது அப்பாவுக்காகவோ, சுந்தரேசனுக்காகவோ வாங்கப்பட்டதல்ல..... (மறுபடியும் சிரித்து விட்டு)..... எங்கள் மாமா பிள்ளை கோபாலனுக்கு அம்மா எதற்காகவோ வாங்கினாள்'' என்று மறுபடியும் சிரித்தாள்.

''உன் தாயார் கோபாலனுக்கென்று வைத்திருந்ததையா எனக்குக் கொடுத்துவிட்டாய்? உன் தாயார் வருத்தப்படுவார்களே!''

''கொடுத்தாலென்ன? நான் என் தகப்பனாருடைய அனுமதியின் மேல்தான் இவற்றை உங்களுக்கென்று வாங்கி வந்தேன். என் தகப்பனாரும் இவற்றை உங்களுக்குக் கொடுத்ததில் மகிழ்ச்சி கொண்டார். தாயார் வருத்தப்பட்டாலும் நான் சமாதானப்படுத்திவிடுவேன். நான் இவற்றை அப்பாவைக் கேட்டு எடுத்து வந்தது அம்மாவுக்குத் தெரியாதுதான். ஆனால் அப்பாவின் அனுமதியுடன்தான் உங்களுக்குத் தந்தேன் என்றால் அம்மாவும் ஒத்துக் கொள்ளுவாள். நீங்கள் அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம்'' என்றாள்.

அன்று முழுவதும் சுந்தரேசன் படுத்திருந்த அறையில் அவனுக்குத் துணையாக உட்கார்ந்துகொண்டு பத்மாவதியும் ராஜாராமனும் வேடிக்கையாகப் பேசிக்கொண்டே பொழுது போக்கினார்கள். மாலை எட்டு மணி வரையிலும் ராஜாராமன் அங்கேயே இருந்து இரவுச் சாப்பாடும் பத்மாவதியுடன் சாப்பிட்டுவிட்டுத் தன்னுடைய வீட்டுக்குப்போனான். அவனுடைய தாயார் மகன் வரவில்லையே என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். அவனுடைய தந்தை, மகன் விருப்பத்தின்படி வரட்டும் என்று கவலையற்றிருந்தார்.

மகன் வந்தான்; தாயும் தந்தையும் மகிழ்ந்தார்கள்.

ராஜாராமன் முதற்காரியமாக தன் கையிலிருந்த வெண்பட்டு வேட்டிப் பொட்டலத்தைத் தந்தையிடம் நீட்டி "அப்பா, நேற்று நீங்கள் இந்த வேட்டிகள் யாருடையன என்று கேட்டீர்களல்லவா?" என்றான்.

"ஆமாம், அவை யாருடையன? ஏன் திருப்பிக்கொண்டு வந்துவிட்டாய்" என்று ஆவலோடு கேட்டார் சிவசுப்பிரமணியம்.

"இவை பத்மாவதியின் மாமா மகன் கோபாலனுக்காகப் பத்மாவின் தாயார் வாங்கி வைத்ததாம். அவைகளைப் பத்மா அவளுடைய அப்பாவின் சம்மதத்தின் மேல் எனக்கு மாற்றுடைக்காகக் கொடுத்தாளாம். இரவலாகக் கொடுக்கவில்லையாம். எனக்கே தந்துவிட்டாளாம். திருப்பி வாங்கிக்கொள்ள முடியாதாம்" என்று மகிழ்ச்சி பொங்கச் சொன்னான்.

"ஓஹோ ஹோ! அப்படியா!..............சரி சரி........... அவளுடைய அம்மா கோபாலனுக்கு நிச்சயதார்த்தம் செய்ய வைத்திருந்ததை எடுத்து இவள் உனக்கு நிச்சயார்த்தம் செய்து விட்டிருக்கிறாள் போலிருக்கிறது. பலே! பலே! பழம் நழுவிப் பாலில் விழுந்துவிட்ட மாதிரிதான்!" என்று கைகொட்டி மகிழ்ந்தார் சிவசுப்பிரமணியம்.

பக்கத்தில் நின்ற சரஸ்வதியம்மாள் மகனைக் கருதி கணவனோடு தானும் கொஞ்சம் சிரித்தாள். ஆனால் மனமார மகிழ முடியவில்லை. சிரித்துக்கொண்டே, "ஆனாலும் ஒரு வயசு வந்த பெண்ணுக்கு இவ்வளவு துடுக்குக் கூடாது" என்றாள்.

உடனே அவளுடைய கணவன். " அவளென்ன துடுக்குச் செய்து விட்டாள். அப்பாவின் அனுமதியின்மேல் தான் அவள் தந்திருக்கிறாள். அவருக்கே அது பிரியமாக



இருக்கும்போது இதில் துடுக்கு என்ன இருக்கிறது?" என்று மனைவியைக் கண்டிப்பது போல் பேசினார்.

அதன் பிறகு சரஸ்வதியம்மாள் ஒன்றும் சொல்லவில்லை.

மறுநாள் காலையிலும் ராஜாராமன் வெகு சீக்கிரம் எழுந்து குளித்துவிட்டு வழக்கம்போல் அலங்கரித்துக் கொண்டு கல்லூரிக்குப் போகிற பயணமாகவே, காப்பி சாப்பிடாமலே பத்மாவதியின் வீட்டுக்குப் போய்விட்டான். அவளுடன் சாப்பிட்டுவிட்டு இருவரும் கல்லூரிக்குப் போனார்கள். கல்லூரியிலிருந்து இருவரும் சேர்ந்தே வந்தார்கள். மாலை ஆறு மணி வரையிலும் பத்மாவதி வீட்டில் அவளோடும் சுந்தரேசனோடும் பேசிக்கொண்டிருந்துவிட்டு ராஜாராமன் தன் வீட்டுக்குப் போனான். தினமும் இதே பழக்கமாகி விட்டது. கல்லூரிக்குப் போகும் போதும் அதைவிட்டு வரும்போதும் வழி நெடுகக் கொஞ்சிக் கொஞ்சிப் பேசிக்கொண்டும் சிரித்துக்கொண்டுமே தான் நடப்பார்கள். பார்ப்பவர்களுக்கெல்லாம் அது ஒரு புதுமையாக இருந்தது. கல்லூரிக்குள் நுழைந்த பிறகும்கூட வகுப்புகளுக்குள் போய் மறைகிற வரைக்கும் எதையாவது பேசிக்கொண்டேதான் போவார்கள். வகுப்புகளை விட்டபின்னும் ஒருவருக்காக மற்றவர் காத்திருந்து சேர்ந்துதான் வீட்டுக்கு வருவார்கள். மாணவர்களோடு பேச மிகவும் கூசுகின்ற சுபாவமுள்ள பத்மாவதி இவனோடு மட்டும் கொஞ்சிக் குலவுவதைப் பார்க்கும் போதெல்லாம் மற்ற மாணவர்களுக்குப் பொறாமை உண்டாகும். அவர்களில் வாய்த் துடுக்குள்ளவர்கள் புரளி பேசவும் தொடங்கிவிட்டார்கள்.

பத்மாவதியின் தாய் காமாட்சியம்மாளும் தன் மகள் எப்போது பார்த்தாலும் ராஜாராமனுடன் கொஞ்சிக் கொண்டிருப்பதை நாளுக்குநாள் அருவருக்கலானாள். 'ஒரு குற்றமும் இல்லாவிட்டாலும் பார்த்தவர்கள் பழிப்பார்களே' என்றுதான் பயப்பட்டாள். 'ராஜாராமன் மிகவும் நல்லவன். தன்னுடைய அருமை மகனைக் காப்பாற்றியவன். மட்டு

மரியாதை தவறாதவன். அவன் அடிக்கடி அங்கே வருவதை எப்படி வேண்டாம் என்பது? பத்மாவதியும் மிக்க அறிவுள்ள பெண். மிகவும் செல்வமாக வளர்ந்தவள். தாயோ தந்தையோ அல்லது மற்றவர்களோ குற்றமென்று கண்டிக்கத் தகுந்த எதையும் அவள் செய்ததில்லை. ஆனால் மிகவும் சுதந்தரமான சுபாவமுள்ளவள். அவளை எப்படி ராஜாராமனுடன் பழக வேண்டாம் என்று சொல்லுவது? சொன்னால் வருத்தப்படுவாள். மறுத்துப் பேசினாலும் பேசிவிடுவாள்.

'தினந்தினம் இவளோடு சேர்ந்து கல்லூரிக்குப் போக வேண்டுமென்று அவன் வருகிறான். இவளும் அவன் வருகிறவரைக்கும் காத்துக் கொண்டிருக்கிறாள். கொஞ்சம்கூடக் கூச்சமில்லாமல் அவனுடன் கொஞ்சிக் கொஞ்சிப் பேசிக்கொண்டே போகிறாள். வீட்டுக்குள் எப்படியெல்லாம் சிரிப்பும் களிப்புமாகப் பேசிக்கொண்டாலும் குற்றமில்லை. ஆனால் இவர்கள் ஜோடியாக இரண்டு வேளையும் இப்படிப் பேசிக்கொண்டு போவதையும் வருவதையும் வழியில் பார்க்கிறவர்கள் என்ன நினைப்பார்கள்? இவளைக் கலியாணம் செய்து கொள்ளக் காத்திருக்கிற கோபாலன் இதை அறிந்தால் வருத்தப்படுவானே! இது வரையிலும் பத்மாவதி கோபாலனைத் தவிர வேறு வாலிபனோடு கொஞ்சிக் குலவிப் பேசினதே இல்லை. இப்போது கோபாலனிடத்தில் கொஞ்சுவதை விடப் பல மடங்கு அதிகமாக அல்லவா ராஜாராமனிடத்தில் கொஞ்சுகிறாள்!' என்றெல்லாம் காமாட்சியம்மாள் எண்ணிக் கலங்கினாள்.

கோபாலன் பத்மாவதியோடு சரசப் பேச்சுகள் பேசுவதற்கென்றே அத்தை வீட்டுக்கு அடிக்கடி வருவான். குறைந்தபட்சம் வாரத்திற்கு இரண்டு முறையாவது தவறாமல் வந்துபோகும் வழக்கமுள்ள அவன் கடந்த நாலைந்து வாரங்களாக வரமுடியாமற்போய் விட்டது. ஏனென்றால், அவனுடைய தந்தை கிருஷ்ணசாமி அவருடைய



நிலபுலன்களின் குத்தகைப் பணங்களை வசூலிக்கக் காவிரி யாற்றங்கரையிலுள்ள அவருடைய சொந்த ஊராகிய குளித்தலைக்குப் போனவர் திடீரென்று அங்கே கடுமையான காய்ச்சலில் படுத்துவிட்டார். தந்தி வந்து கோபாலனும் அவனுடைய தாயார் முதலானவர்களும் குளித்தலைக்குப் போனார்கள். தந்தைக்கு 'டைபாய்ட்' ஜுரம் என்று தெரிய வந்ததால் அவரைக் கவனித்துக்கொள்ள, கோபாலன் அவருக்கு அருகிலேயே இருக்க வேண்டியதாகிவிட்டது.

சுந்தரேசன் கிணற்றில் விழுந்துவிட்ட சமயத்தில் கோபாலன் குளித்தலையில் இருந்தான். அவன் தந்தைக்கு அசௌக்கியமென்று தந்தி வந்ததற்கு முந்தின நாள் கோபாலன், வழக்கம்போல் அத்தை வீட்டுக்கு வந்து பத்மாவதியுடன் வெகு நேரம் பரிகாசம் பேசிக்கொண்டிருந்துவிட்டுப் போனான். அவசரத் தந்தி வந்து குளித்தலைக்குப் புறப்படும்போது அத்தையிடம் சொல்லிவிட்டுப் போக நேரமில்லாமல் ரயிலுக்குப் போய்விட்டார்கள்.

குளித்தலைக்குப் போனபின் தந்தைக்குத் தகுந்த வைத்தியம் கவனித்துக்கொண்டிருந்த அலைச்சல்களால் அத்தை வீட்டுக்கு உடனே கடிதம் எழுத அவகாசமில்லாமல் தந்தைக்கு ஜுரம் தணியத் தொடங்கியபின் பத்து நாள் சென்று தான் தெரியப்படுத்தினான்.

இப்படியாகக் கோபாலன், ஒரு மாதத்துக்கு மேல் பத்மாவதி வீட்டுக்கு வரமுடியாமலிருக்க நேர்ந்துவிட்டது. இந்த நாட்களிலெல்லாம் ராஜாராமன் தினமும் அதிகாலையில் பத்மாவதியின் வீட்டுக்கு வந்து விடுவதும், பத்மாவதி அவனுக்குப் பரிந்து பலகாரமும் காப்பியும் கொடுத்து உபசரிப்பதும், இருவரும் சேர்ந்து கலாசாலைக்குப் போவதும், சேர்ந்தே திரும்பி வருவதும், மாலையில் வெகு நேரம் வரைக்கும் ராஜாராமன் பத்மாவதியுடனும் சுந்தரேசனுடனும் பொழுது போக்கிவிட்டுத் தன் வீட்டுக்குப்

போவதுமாக இருந்தது, காமாட்சியம்மாளுக்கு மிகவும் கவலையுண்டாக்கிவிட்டது. பத்மாவதியோடு அவளுடைய அருமைத் தம்பி சுந்தேரசனும் ராஜாராமனைப் புகழ்ந்து பாராட்டித் தன் உயிரைக் காப்பாற்றியதற்கு நன்றி செலுத்துவது போல எந்நேரமும் அவனை ஒட்டிக்கொண்டேயிருந்தான். ராஜாராமனே வீட்டுக்குப் போகப் புறப்பட்டாலும் சுந்தரேசன் எளிதில் விடுவதில்லை. அது காமாட்சியம்மாளின் தர்ம சங்கடத்தை அதிகப்படுத்துவதாக இருந்தது. காமாட்சியம்மாளுக்கு சுந்தரேசன் உயிர் போன்ற ஒரே மகன். ராஜாராமன் விஷயமாகத்தான் ஏதேனும் அருவருப்பு காட்டிவிட்டால் சுந்தரேசனும் வருத்தப்படுவானே என்று காமாட்சி அம்மாள் தயங்கினாள்.

தாய் இப்படிக் கவலைப்பட்டுக்கொண்டிருக்க, பத்மாவதியின் தந்தை ஜானகிராமன் இதற்கு முற்றிலும் மாறாக எண்ணினார். பத்மாவதி கோபாலனோடு கொஞ்சிக் கொஞ்சிப் பேசுவதையும், பேச்சுக்குப் பேச்சு சிரிப்பதையும் கூச்சமில்லாமல் பழகுவதையும் அறிந்த ஜானகிராமன், அவள் கோபாலனைத்தான் மணந்துகொள்ள விரும்புகிறாள் என்று எண்ணித்தான் அவளைக் கோபாலனுக்குக் கொடுக்கச் சம்மதித்தார். அவர் தம்முடைய மனைவியின் விருப்பத்தையும் மைத்துனருடைய வேண்டுகோளையும் மிகவும் மதிக்கிறவர் என்றாலும் எப்படியாவது அவர்களுக்குச் சமாதானம் சொல்லிவிட்டுப் பத்மாவதியை ராஜாராமனுக்குச் கொடுக்கத்தான் நெடுநாளாக நினைத்திருந்தார். ஆனால் பத்மாவதி கோபாலனைக் காதலிக்கிறாள் என்று எண்ணக்கூடிய அறிகுறிகளைக் கண்ட பிறகுதான் மகளுடைய காதலை மதிக்காவிட்டால் அவளுடைய வாழ்க்கைப் பாழாகிவிடுமே என்று பயந்துவிட்டார். அதன் பிறகுதான் அவளை அவனுக்குக் கொடுக்க உடன்பட்டிருந்தார்.

இப்போது பத்மாவதி கோபாலனிடம் பழகியதைவிட அதிக நெருக்கமாக ராஜாராமனுடன் பழகுவதைப் பார்த்து ஜானகிராமன் வியப்படைந்தார். ராஜாராமனைப் பற்றிய அவருடைய பழைய எண்ணங்கள் மறுபடியும் மனத்தைக் குழப்பத் தொடங்கின. பத்மாவதி கோபாலனிடத்தில் காட்டும் பிரியம் 'காதல்' என்ற வார்த்தைக்குச் சம்பந்தமில்லாத வெறும் அன்பாக இருக்குமோ என்று எண்ணினார். தாய் மாமனுடைய மகன் கோபாலன்; அவனுடைய அப்பாவுடன் பிறந்த அத்தை மகள் பார்வதி; அந்த உறவின் முறையால் ஆட்சேபிக்க முடியாத உரிமையுடன் அவர்கள் இருவரும் வேடிக்கையும் விளையாட்டுமாகச் சிரித்துப் பேசிக்கொள்வதைத் தவறாகக் 'காதல்' என்று தான் எண்ணிவிட்டதாக இருக்குமோ என்று சந்தேகித்தார். தாம் சந்தேகிக்கிறபடி தம்முடைய மகள் கோபாலனிடத்தில் பழகியது வெறும் உறவு முறையின் அன்பாகவும், இப்போது ராஜாராமனுடன் பழகுவது 'காதல்' என்பதைப் பற்றியதாகவும் இருந்துவிடுமானால் அது மிகவும் விரும்பத்தக்கதுதான் என்று மகிழ்ந்தார். ஆனால் 'தாமும் தம்முடைய மனைவியும் சேர்ந்து பத்மாவதியைக் கோபாலனுக்கே கொடுப்பதாக வாக்களித்திருப்பது தவறிவிடுமே என்றால் அது தம்முடைய குற்றமல்லவே! பெண்ணுக்குப் பிரியமில்லாவிட்டால் அதற்கு யார் என்ன தடை சொல்ல முடியும்' என்று தமக்குள்ளேயே சமாதானம் சொல்லிக்கொண்டார்.

அவருடைய சந்தேகத்தை அதிகப்படுத்தி, அவர் ஆதியில் விரும்பியிருந்தபடி பத்மாவதியை ராஜாராமனுக்கே மணஞ்செய்து வைக்கவேண்டுமென்ற எண்ணத்தை உறுதிப்படுத்தக்கூடிய ஒரு நிகழ்ச்சியும் நேர்ந்துவிட்டது.

அது என்னவென்றால்:

ஒருநாள் பத்மாவதியும் அவளுடைய அருமைத் தம்பி சுந்தரேசனும் ராஜாராமனுடன் 'காதலின் வெற்றி' என்ற பெயருள்ள ஒரு 'சினிமா' படக்காட்சியைப் பார்க்கப் புறப்பட்டார்கள். காமாட்சியம்மாளுக்குச் சிற்றின்ப உணர்ச்சிகளைத் தூண்டக்கூடிய காதல் காட்சிகள் நிறைந்த

படங்களையோ நாடகங்களையோ பார்ப்பது தீமை பயக்கும் என்ற நம்பிக்கை எப்போதும் உண்டு. அவள் புண்ணியம், பாவம், தெய்வபக்தி, நல்லொழுக்கம், தானம், தருமம் முதலியவைகளை விளக்கக்கூடிய படம் அல்லது நாடகம் என்று நிச்சயமாகத் தெரிந்தால்தான் பார்க்கப்போவாள். ஆனால் ஜானகிராமன், எந்தச் சினிமாப்படம் எந்த நாடகமானாலும் 'ஏதோ, கொஞ்ச நேரம் நிம்மதியாகப் பொழுது போக்கத்தானே போகிறோம். பாடம் படிக்கவா அங்கே போகிறோம்' என்று அவருக்கு அவகாசம் கிடைத்த சமயத்தில் எந்தக் காட்சி நடக்கிறதோ அதற்குப் போவார். நல்லபடம் என்று தனக்குப் பட்டால்தான் காமாட்சியம்மாளும் அவருடன் போவாள். இல்லாவிட்டால் போகமாட்டாள்.

பத்மாவதியும் சுந்தரேசனும் எங்கே போவதானாலும் அவர்களுடைய பெற்றோரின் அனுமதியில்லாமல் போக மாட்டார்கள். 'காதலின் வெற்றி' என்ற படத்தைப் பார்க்கப் போக விரும்புவதைத் தந்தையிடம் தெரிவித்தார்கள். உடனே அவர் மகிழ்ச்சியுடன் அனுமதியளித்தார். ஆனால் வழக்கம்போல் அவரே அவர்களை, அழைத்துக்கொண்டு போக அன்றையதினம் அவருக்கு ஒழியவில்லை. அவர் வெகு முக்கியமான ஒரு அலுவலைக் கவனிக்கவேண்டியிருந்தது. காமாட்சியம்மாளுக்குக் 'காதலின் வெற்றி' என்ற பெயரே பிடிக்காது. அந்தப்படம் பார்க்க அவள் அவர்களுடன் போகமாட்டாள் என்பது ஜானகிராமனுக்குத் தெரியும். 'எனக்கும் உங்களோடு வந்து அந்தப் படத்தைப் பார்க்கவேண்டுமென்று ஆசையாகத்தான் இருக்கிறது. ஆனால் இன்றைக்கு வரமுடியவில்லை. காமாட்சிக்கு இந்தப் படம் பிடிக்காது. நான் ஆபீசில் போய் இறங்கிக்கொண்டு 'காரை' அனுப்புகிறேன். நீங்கள் மூன்றுபேரும் போய்வாருங்கள்' என்றார் ஜானகிராமன்.

அதைக் கேட்ட காமாட்சியம்மாள்,



"ஏன்? இன்றைக்கு அவர்களுடன் போய் வர உங்களுக்கு நேரம் இல்லாவிட்டால் நாளைக்குப் போனாற்போகிறது," என்றாள்.

"இந்தப் படத்துக்கு இன்றுதான் கடைசி நாள் அம்மா" என்றான் சுந்தரேசன்.

"இந்தப் படம் போனால் போகட்டுமே. இதைப் பார்க்காவிட்டால்தான் என்ன?" என்றாள் காமாட்சியம்மாள்.

"குழந்தைகள் இதைத்தான் பார்த்து வரட்டுமே. அவர்கள் ஆசையைக் கெடுப்பானேன்? உனக்குப் புராணப் படங்கள் தான் பிடிக்கும். சமூகப் படங்களே பிடிக்காது. உன்னைப் போலவே எல்லாரும் இருக்கமுடியுமா" என்றார் ஜானகிராமன்.

அதன் பிறகு காமாட்சியம்மாள் ஒன்றும் சொல்ல வில்லை. காமாட்சியம்மாள் கணவனுடைய குறிப்பறிந்து நடந்துகொள்ளும் குணவதி, எந்தச் சமயத்தில் அவரோடு வாதிக்கலாம், எப்போது வாதிக்கக்கூடாது என்பதை அனுபவத்தால் அறிந்தவள். அவளுக்கும் இந்தப் படத்துக்கு அவர்கள் போகக்கூடாது என்பது நோக்கமல்ல. அந்த அம்மாளுடைய கவலையெல்லாம், பத்மாவதி ராஜாராமனுடன் அவ்வளவு நெருக்கமாகக் கொஞ்சிக்கொண்டு பழகுவது சினிமா கொட்டகையில் பார்க்கிறவர்களுடைய பழிப்புக்கு இடமுண்டாக்குமே என்பதுதான். அத்துடன் பருவம் அடைந்து கலியாணத்திற்குக் காத்திருக்கும் பத்மாவதியைப் போன்ற இளம் பெண்கள் முதியோர் துணைகூட இல்லாமல் வயது வந்த வாலிபர்களோடு எங்கும் போவது சரியல்ல என்னும் கோட்பாடுள்ளவள் காமாட்சியம்மாள. அதிலும் காதல் களிப்பூட்டக் கூடிய காட்சிகள் அடங்கிய சினிமா படம் பார்க்கப் பத்மாவதி ராஜாராமனுடன் போவது காமாட்சியம்மாளுக்குக் கட்டோடு பிடிக்கவில்லை.

ஆனால் என்ன செய்வது? கணவன் அவர்களுக்காகச் சலுகை பேசி அனுமதி தந்துவிட்டார். ராஜாராமனையும்

வைத்துக்கொண்டு கணவனுடன் எப்படி வாதாடுவது? என்ன காரணம் காட்டி அவர்கள் சினிமா பார்க்கப் போவதைத் தடுப்பது? காதல் கதை என்ற காரணம் காட்டித் தடுக்க முடியாது. எனென்றால் காதல் கதைகளுக்கு காமாட்சியம்மாள் ஒருத்திதான் போவதில்லை. அவளுடைய மற்ற சகோதரிகள் முதலான அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த எல்லாரும் காதல் கதைகளுக்குத் தான் அடிக்கடி போவது வழக்கம். அந்தக் காதல் கதைகளுக்கு இல்லாத தடை இதற்கு மட்டும் எப்படிச் சொல்வது?

பருவமடைந்த பெண் பெரியவர்கள் யாரும் உடன் போகாமல் வயது வந்த வாலிபனோடு சிற்றின்பங்களைத் தூண்டக்கூடிய காட்சிகளுக்குப் போவது சரியல்ல என்னும் தன்னுடைய எண்ணத்தை வெளியிடவும் முடியாத தர்மசங்கடத்தில் காமாட்சி அம்மாள் தவிக்கலானாள். வெகு நேரம் எண்ணியெண்ணிப் பார்த்துக் கடைசியில், காதல் கதைகளுக்குப் போவதில்லை என்ற தன்னுடைய விரதத்தையும் விட்டுவிட்டுத் தானே அவர்களுடன் போய்வருவது என்று தீர்மானித்து விட்டாள். உடனே அதற்கு வேண்டியபடி உடையை மாற்றிக்கொண்டுத் தயாராகி விட்டாள்.

மோட்டார் வந்தது. எல்லாருக்கும் முன்னால் காமாட்சி அம்மாள் அதில் ஏறிக்கொண்டாள். மோட்டாரை எதிர்பார்த்துக் கொண்டு மேல் மாடியில் பேசிக் கொண்டிருந்த பத்மாவதியும் சுந்தரேசனும் ராஜாராமனும் மோட்டார் வந்துவிட்ட ஓசையைக் கேட்டுக் கீழே இறங்கி வந்தார்கள். தாயார் வண்டியில் உட்கார்ந்திருப்பதைக் கண்டு வியப்படைந்த பத்மாவதியும் சுந்தரசேனும், "ஏம்மா, நீ கூட இந்தப் படம் பார்க்க வருகிறாயா?" என்றார்கள்.

"ஆமாம், புராணக்கதை புண்ணியக்கதை என்றால் உங்களுக்குப் பிடிக்கிறதேயில்லையே. சமூகக் காதல் கதை என்றால் மட்டும் இப்படி அலைகிறீர்களே; அந்தக் கதைகளில் என்னதான் அப்படிப்பட்ட கவர்ச்சியிருக்கிறது என்பதைப் பார்த்துவிட வேண்டும் என்றுதான் நானும் வருகிறேன்." என்றாள் காமாட்சியம்மாள்.



"ஏம்மா? நாங்கள் புராணப் படங்களுக்குந்தான் போகிறோம். சமூகப் படத்துக்குந்தான் போகிறோம். நீதான் 'புராணப் படங்களுக்கு மட்டுந்தான் போவேன்; மற்றப் படங்களுக்குப் போகமாட்டேன்' என்கிறாய். புராணப் படங்களில் ஒருவித நன்மை இருக்கிறது. இன்றைக்கு நீ இந்தக் கதையைப் பார்த்தால் இனிமேல் நீயும் சமூகப் படங்களைப் பார்க்க ஆசைப்படுவாய்" என்றாள் பத்மாவதி.

"என்ன இருந்தாலும் புராணக் கதைகளைப் பார்ப்பதால் வரக்கூடிய நன்மை இந்தப் படங்களால் வராது." என்றாள் காமாட்சியம்மாள்.

முன் சீட்டில் உட்கார்ந்து கொண்டிருந்த ராஜாராமன் "பெரியவர்களுக்குப் புராணப் படங்கள்தான் பிடிக்கும். இளைஞர்களுக்கு எந்தப் படமாயிருந்தாலும் வேடிக்கை பார்த்தால் போதும்" என்றான்.

"ஆமாம், ஆமாம், அதுதான் சரியான பேச்சு" என்றான் சுந்தரேசன்.

இப்படிப் பேசிக்கொண்டே 'சினிமா' கொட்டகைக்குப் போய்ச் சேர்ந்தார்கள். முதல் வகுப்பு நாற்காலிக்கு டிக்கெட்டுகள் வாங்கப்பட்டன. காமாட்சியம்மாள் முதலிலும் பத்மாவதி இரண்டாவதாகவும், சுந்தரேசன் மூன்றாவதாகவும், ராஜாராமன் நான்காவதாகவும் உட்கார நேர்ந்தது.

படம் ஓட ஆரம்பித்துச் சிறிது நேரத்தில் பத்மாவதி சுந்தரேசனைத் தன்னுடைய நாற்காலிக்கு வரச்செய்து விட்டுத் தான் ராஜாராமனுக்கு அருகில் போய் அமர்ந்து கொண்டாள். அவளும் ராஜாராமனும் படத்தில் வரும் நடிகர்களைப் பற்றியும் காட்சிகளைப் பற்றியும் விமர்சனம் பேசிக்கொண்டும் சிரித்துக்கொண்டும் இருந்தார்கள். காமாட்சியம்மாளுக்குப்

பத்மாவதி இடம்மாறி ராஜாராமன் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டதே பிடிக்கவில்லை. அத்துடன் அவர்கள் இருவரும் குசுகுசு வென்று பேசிக்கொண்டும் சிரித்துக்கொண்டும் இருந்தது மிக்க வேதனை உண்டாக்கிவிட்டது. இடையிடையே சுந்தரேசனும் அவர்களுடன் சேர்ந்து சிரித்துக் கொண்டிருந்தான். காமாட்சியம்மாள் படத்தையே பார்க்கவில்லை. பத்மாவதி இருந்த பக்கத்தையே இருட்டில் பார்த்துக் கொண்டிருந்தாள். பத்மாவதியைக் கண்டிப்பதற்குப் பதிலாகக் காமாட்சியம்மாள் சுந்தரேசனைத் தொட்டு இழுத்து,

"ஏண்டாப்பா, என்ன இது? படம் பார்க்க வந்தீர்களா, அரட்டை அடித்துச், சிரித்துக்கொண்டிருக்க வந்தீர்களா? நீங்கள் சிரிக்கிற சிரிப்பு முன்னாலும் பின்னாலும் உட்கார்ந்திருக்கிறவர்களுக்கு எரிச்சலைத்தான் உண்டாக்கும்." என்றாள். அதற்குச் சுந்தரேசன் "ஏம்மா, சிரிப்பூட்டுகிற காட்சிகள் வருகிறபோது சிரிக்காமல் எப்படியம்மா படம் பார்க்கிறது? நாமென்ன உயிரும் உணர்ச்சியும் இல்லாத மரப்பாச்சி பொம்மைகளா? உனக்கு இந்தப் படம் பிடிக்கவில்லை போலிருக்கிறது." என்றான்.

இதற்குப் பதில் சொல்லக் காமாட்சியம்மாளால் முடியவில்லை. மென்று முழுங்கிக்கொண்டு பேசாமலிருந்து விட்டாள். படம் முடிகிறவரைக்கும் பல்லைக் கடித்துக் கொண்டு சும்மாயிருக்க வேண்டியதாகிவிட்டது. ஆனால் அவளுடைய மனம் சும்மா இருக்க முடியவில்லை. என்னென்னவோ எண்ணங்கள் புகுந்து குழம்பிக் கடைசியில் பத்மாவின் மனம் கெட்டுப்போய் விட்டதோ என்ற அச்சமும் ராஜாராமனின் மீது அருவருப்பும் அதிகமாகிவிட்டது.

படம் முடிந்து வீட்டுக்குப் புறப்பட்டார்கள். காமாட்சியம்மாள் டிரைவரிடம் சொல்லி மோட்டாரை ராஜாராமன் வீட்டுக்கு விடச் சொன்னாள். காமாட்சியம்மாள் வீட்டைக் கடந்துதான் ராஜாராமன் வீட்டுக்குப் போக வேண்டும், அப்படியிருந்தும் அவள் நேரே ராஜாராமன் வீட்டுக்கு முதலில் போகச் சொன்னாள்; ஏனென்றால், முதலில் தங்கள் வீட்டில் மோட்டாரை நிறுத்தினால், மணி பத்துக்கு மேல் ஆகிவிட்டதால் ராஜாராமனை அங்கேயே சாப்பிட்டுப் படுத்துக்கொள்ளும்படி பத்மாவதியும் சுந்தரேசனும் சொல்லுவார்களோ என்ற அருவருப்புதான். காமாட்சியம்மாளுடைய கருத்து அப்படியிருந்தாலும், பத்மாவதியும் சுந்தரேசனும் தம்முடைய தாயாருக்கு ராஜாராமன் மீதுள்ள பிரியத்தினால்தான் முதலில் அவனைக் கொண்டுபோய் அவனுடைய வீட்டில் விட விரும்புவதாக எண்ணிக்கொண்டார்கள். ராஜாராமனை இறக்கிவிட்டு மற்ற மூவரும் தங்கள் வீட்டுக்குப் போனார்கள்.



மறுநாள் காலையில் வழக்கம்போல் ராஜாராமன் பத்மாவதி வீட்டுக்கு வந்தான். அவனைக் கண்ட காமாட்சியம்மாள் முன்போல் அவனை வரவேற்கமால் முகத்தைத் திருப்பிக்கொண்டு போய்விட்டாள். ஆனால் பத்மாவதியும் சுந்தரேசனும் ராஜாராமனை வெகு குதூகலத்தோடு வரவேற்றார்கள். உடனே பத்மாவதி வீட்டுக்குள் போய்ப் பலகாரம், காப்பி முதலியவற்றைக் கொண்டு வந்தாள். மூன்று பேரும் அருந்தினார்கள். அதன் பிறகு அவர்கள் மூவரும் முந்தின நாள் பார்த்த 'காதலின் வெற்றி' என்ற படத்தைப்பற்றி விமர்சனம் பேசத் தொடங்கினார்கள். அப்போது பத்மாவதிக்கும் சுந்தரேசனுக்கும் தந்தையாகிய ஜானகிராம் அங்கே வந்தார். ராஜாராமனை வெகு அன்போடு வரவேற்றுவிட்டு, அந்த அறையின் கோடியிலிருந்த ஒரு மேஜையின் அருகில் அமர்ந்து அவர் கையிலே கொண்டு வந்த சில தஸ்தாவேஜுகளைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

இளைஞர்கள் 'காதலின் வெற்றி' என்ற படத்தைப் பற்றி விமர்சனம் பேசிக் கொண்டிருந்தார்கள். அந்தப் படத்தின் கதை பின்வருமாறு; படித்துப் பட்டம் பெற்ற ஒரு பெண்ணை அவளுடைய பெற்றோர்கள் உறவினரைச் சேர்ந்த ஒரு

இளைஞனுக்கு மணமுடிக்க நிச்சயம் பேசிவிட்டார்கள். அந்தப் பெண் வேறொரு இளைஞனைக் காதலிக்கிறாள். நிச்சயம் செய்யப்பட்டிருந்த இளைஞனை மணந்துகொள்ள விருப்பம் இல்லையென்பதைப் பெற்றோருக்குத் தெரிவிக்கிறாள். அவர்கள் அவளுக்குப் பலவிதமான சமாதானங்களைக் கூறி நிச்சயம் செய்த மாப்பிள்ளையைத்தான் மணந்து கொள்ள வேண்டுமென்று வற்புறுத்துகிறார்கள். பெண் மீண்டும் மீண்டும் மறுக்கிறாள். பெற்றோர்கள் பெண்ணினுடைய விருப்பத்தைப் பொருட்படுத்தவில்லை. தாங்கள் நிச்சயம் செய்தபடியே திருமணத்தை நடத்திவிடத் தீர்மானித்துத் திருமண அழைப்புகளையும் அச்சிட்டு அனுப்பிவிட்டு மற்றும் கலியாணத்துக்கு ஆகவேண்டிய காரியங்கள் அனைத்தையும் செய்து விட்டார்கள். முகூர்த்த நாளைக்கு முதல் நாள் மணமகனும் அவனைச் சார்ந்தவர்களும் வந்துவிட்டார்கள்.

ஆனால் அன்று இரவே திடீரென்று மணப்பெண் காணாது போய்விடுகிறாள். எங்கெங்கோ தேடுகிறார்கள். பெண் போன இடம் தெரியவில்லை. திருமணம் நின்று போய்விட்டது. மாப்பிள்ளை வீட்டார் தம்மைப் பெண் வீட்டார் அவமானப் படுத்திவிட்டதாகச் சண்டையிட்டுக் கொண்டு போய்விடுகிறார்கள்.

தன்னுடன் படித்த வேறொரு பெண்ணின் வீட்டில் இந்தப் பெண் பதுங்கியிருந்தாள். அதை அவளுடைய பெற்றோர்கள் அறிந்து கொண்டார்கள். உடனே அந்த வீட்டைவிட்டு வேறு பல இடங்களுக்கு ஓடிப் பல துன்பங்களுக்கு ஆளாகிறாள். கடைசியில் பெற்றோர்களுடைய சம்மதத்துடன் தான் காதலித்த இளைஞனையே கலியாணம் செய்து கொள்ளுகிறாள். இதுதான் 'காதலின் வெற்றி' என்ற படம்.

இதைப்பற்றிச் சுந்தரேசன், ராஜாராமன், பத்மாவதி ஆகிய மூவரும் விமர்சனம் பேசிக்கொண்டிருக்கும்போது



ராஜாராமன், ''என்ன இருந்தாலும் அந்தப் பெண் பெற்று வளர்த்த தாய் தந்தையரின் விருப்பத்தை மதிக்காமல் அவ்வளவு முரட்டுப் பிடிவாதம் செய்தது எனக்கு என்னவோ - அவ்வளவு சரியென்று தோன்றவில்லை'' என்றான்.

உடனே பத்மாவதி,

'அடடா! இது என்ன நியாயம்? பெற்றோர்கள் மட்டும் அந்தப் பெண்ணினுடைய விருப்பத்தைத் துளி கூட மதிக்காமல் அவர்களுடைய விருப்பத்தின்படி அவளுக்குப் பிடிக்காத யாருக்கோ நிச்சயம் பேசிவிட்டது மட்டும் சரியாக்கும்? பெண் என்றால் அவ்வளவு கேவலமா? நம்முடைய சமூகத்தில் பெரும்பாலும் பெற்றோர்கள் பெண்ணினுடைய விருப்பத்தை அறிந்து கொள்ளாமல் அவர்களுடைய இஷ்டப்படி நிச்சயம் பேசிவிடுகிறார்கள். அதனால் அநேகம் பெண்களுடைய வாழ்க்கையே இன்ப மற்றதாகி விடுகிறது'' என்றாள்.

''அக்கா! நீயாயிருந்தால் அந்தப் பெண் மாதிரி அப்பா அம்மா பேச்சை மறுத்துப் பேசுவாயா?'' என்றான் சுந்தரேசன்.

''ஏன் நான் மட்டும் என்ன? எனக்கு விருப்பமில்லாத ஒருவருக்கு என்னைக் கொடுக்க நிச்சயம் பேசினால் நானும் அப்படித்தான் மறுப்பேன்'' என்றாள் பத்மாவதி.

அந்த அறையின் மற்றொரு கோடியில் உட்கார்ந்திருந்த ஜானகிராமன் இதையெல்லாம் கேட்டுக் கொண்டுதான் இருந்தார். பத்மாவதி கடைசியாகச் சொன்ன வார்த்தைகள் அவளுடைய தந்தையின் கவனத்தை மிகவும் கவர்ந்தது. அந்த வார்த்தைகள் அவருக்கிருந்த அனுமானங்களை உறுதிப்படுத்துவதாக அமைந்தன. பத்மாவதி, அவளுக்கு மணமகனாக நிச்சயிக்கப்பட்டிருக்கிற கோபாலனுடன் கொஞ்சியதைவிட அதிகமாக ராஜாராமனுடன் கொஞ்சுவதையும், கோபாலனுக்கு நிச்சயதார்த்தம் செய்ய வைத்திருந்த பட்டு வேட்டிகளை ராஜாராமனுக்கு மாற்றுடைக்காகக் கொடுக்க அனுமதி கோரியதையும்,

இப்போது 'எனக்கு விருப்பமில்லாத ஒருவருக்கு என்னைக் கொடுக்க நிச்சயம் பேசினால் நானும் அப்படித்தான் மறுப்பேன்' என்று சொன்னதையும் சேர்த்துப் பார்த்து, பத்மாவதி அவளுக்காக நிச்சயம் பேசியிருக்கிற கோபாலனைக் காதலிக்கவில்லை யென்றும் ராஜாராமனைத்தான் காதலிக்கிறாள் என்றும் அவளுடைய தந்தை தீர்மானித்தார். அதனால் அவர் ஆதியில் விரும்பியபடி ராஜாராமனே தம்முடைய மருமகனாகிவிட, தெய்வசித்தம் இருப்பதாகக் கண்டு திருப்தியடைந்தார்.

பத்மாவதி ராஜாராமனுடன் நெருங்கிப் பழகுவதில் காமாட்சியம்மாளுக்கு எவ்வளவு வெறுப்பு வளர்ந்ததோ அவ்வளவு விருப்பு வளர்ந்தது ஜானகிராமனுக்கு. கணவனுக்கு வருத்த முண்டாகுமே என்று காமாட்சியம்மாள் தன்னுடைய வெறுப்பை வெளிப்படுத்துவதில்லை. மனைவிக்கு வருத்தமுண்டாகுமே என்று ஜானகிராமன் தன்னுடைய விருப்பத்தை வெளிப்படுத்துவதில்லை அதனால் ராஜாராமனைப் பற்றிக் காமாட்சியம்மாள் மனத்திலிருந்தது ஜானகிராமனுக்குத் தெரியாது.

ராஜாராமனுக்குப் பத்மாவதியின் மீதுள்ள காதல் நாளுக்குநாள் வளர்ந்து வந்தது. தன்னுடைய காதலைப் பத்மாவதியிடம் வெளியிட்டு அவளுடைய சம்மதத்தைப் பெற்றுவிட வேண்டுமென்று துடித்துக் கொண்டிருந்தான். ஆனால் அதற்குச் சரியான வாய்ப்புக் கிடைக்கவில்லை. எப்போதும் சுந்தரேசன் கூடவே இருந்து கொண்டிருந்தான். அத்துடன் 'இப்போதெல்லாம் பத்மாவதி ராஜாராமனுடன் பேசிக்கொண்டிருக்கும் போது காமாட்சியம்மாள் அடிக்கடி வந்து கண்காணிப்பது வழக்கமாகி விட்டது. மேலும் ராஜாராமன் மிக்க நல்லொழுக்கம் உள்ளவனானதால் தானாகத் தன் காதலைச் சொல்லுவதை விடப் பத்மாவதியே சொல்லும் வரையிலும் பொறுத்திருப்பது நல்லது என்றும் நம்பினான். பத்மாவதி, 'காதலின் வெற்றி' என்ற படத்தைப்



பற்றிப் பேசிக் கொண்டிருந்தபோது, கடைசியாகச் சொன்னது அந்த நம்பிக்கையை உறுதிப்படுத்தியது.

## 4

இப்படி யிருக்கும்போது, தன்னுடைய தந்தையின் அசௌக்கியத்தைக் கருதி ஒரு மாதத்துக்கும் அதிகமாக வெளியூரில் இருந்து விட்ட கோபாலன் இரண்டு மூன்று தினங்களில் திரும்பி வருவதாகக் காமாட்சியம்மாளுக்குக் கடிதம் வந்தது.

அந்தக் கடிதத்தைப் பார்த்தபின் காமாட்சியம்மாளின் கவலை பல மடங்கு அதிகமாகிவிட்டது.

கோபாலன் காமாட்சியம்மாளின் அண்ணன் மகன். பத்மாவதியை அவனுக்குத்தான் கொடுக்கவேண்டுமென்று பத்மாவதி பிறந்த நாளிலிருந்து சொல்லிக் கொண்டிருந்தவள் காமாட்சியம்மாள், பத்மாவதியை ராஜாராமனுக்குக் கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்தை மனத்தில் வைத்துக் கொண்டு, கோபாலனுக்குக் கொடுக்கத் தயங்கிக் கொண்டிருந்த தன் கணவர் ஜானகிராமனுடைய தயக்கத்தை மாற்றி அவனுக்கே கொடுப்பதாக நிச்சயம் சொல்லும்படி வெகுபாடு பட்டவள் காமாட்சியம்மாள். தன் கணவர் கோபாலனுக்கே பத்மாவதியைக் கொடுப்பதாக வாக்குறுதி செய்தபின் கலியாணம் முடிந்துவிட்டது போலவே களிப்பில் முழுகியிருந்தவள் காமாட்சியம்மாள்.

அப்படியிருக்க இன்னும் இரண்டு மூன்று தினங்களில் கோபாலன் வரும்போதும் பத்மாவதி இப்படி அந்த ராஜாராமனுடைன் கொஞ்சிக் கொண்டிருந்தால் காமாட்சியம்மாளுடைய மனம் என்ன பாடுபடும்? பத்மாவதியும் கோபாலனும் வாழ்க்கை நடத்துவதைக் கண் குளிரப் பார்த்து ஆனந்தப்பட வேண்டுமென்று காமாட்சியம்மாள் கட்டியிருந்த மனக் கோட்டை இடிந்து

விட்டது போல் இருந்தது அதை நினைக்க நினைக்க அவளுடைய கும்பி குழம்பியது; கோபம் குமுறிக்கொண்டு வந்தது. உடனே அந்த ராஜாராமனைக் கண்டு 'இனிமேல் இந்த வீட்டுக்குள் நுழையாதே' என்று கண்டிப்பாகச் சொல்லி விடத்தான் வேண்டும் என்று தீர்மானித்தாள். ஐயோ! அப்படிச் செய்தால் பத்மாவதியின் மனம் கொதிப்படைந்து 'நான் ராஜாராமனைத்தான் மணந்து கொள்வேன்' என்று சொல்லி விட்டால் என்ன செய்வது என்ற பயமும் காமாட்சியம்மாளுக்கு உடனே உண்டாயிற்று. அதனால் ராஜாராமன் மீது தன் எரிச்சலை வெளிப்படுத்துவது சரியல்லவென்று கோபத்தை அடக்கிக் கொண்டாள். பின் இதற்கு என்ன செய்வது? வெகுநேரம் எண்ணிப் பார்த்து, இதமான வார்த்தைகளில் சிறுகச் சிறுக மகளுடைய மனத்தைக் கவர்ந்து, கோபாலன் எழுதியிருக்கிற கடிதத்தையும் காட்டி அவன் இங்கே வருகிற சமயங்களிலாவது ராஜாராமனுடன் இப்படிக் கொஞ்சவேண்டா மென்று மறைமுகமாகத் தெரியப்படுத்த வேண்டுமென்று தீர்மானித்தாள்.

பத்மாவதியும் ராஜாராமனும் சுந்தரேசனுடைய அறையில் ஏதோ அவர்களுடைய பள்ளிக்கூடத்தைப் பற்றிப் பேசிச் சிரித்துக் கொண்டிருந்தார்கள். காமாட்சியம்மாள் கையில் கோபாலன் எழுதிய கடிதத்துடன் அறைக்குள் வந்தாள். அங்கே சுந்தரேசன் இல்லை. பத்மாவதியும் ராஜாராமனும் ஒரு சோபாவில் ஒட்டினாற்போல் உட்கார்ந்துகொண்டிருந்தார்கள். அந்தக் காட்சி மறுபடியும் காமாட்சியம்மாளின் கோபத்தைக் கிளறி விட்டது. உள்ளம் கொதித்தது; உடல் வியர்த்தது; உதடுகள் துடித்தன. இருந்தாலும் கணநேரத்தில் சமாளித்துக்கொண்டு வெகு கஷ்டப்பட்டு ஒரு புன்சிரிப்பைக் கூட்டிக்கொண்டு,

''எங்கே சுந்தரேசன்?'' என்றாள்.

''ஒரு தமிழ்ப் பாட்டைப் பற்றி எங்களுக்குள் தர்க்கம் வந்தது. அதில் யார் சொன்னது சரியென்று பார்க்க அந்தப் பாட்டு இருக்கிற புத்தகத்தை எடுத்துவர இப்போதுதான் மாடிக்குப் போனான்'' என்றாள் பத்மாவதி.



அப்போது சுந்தரேசனும் வந்து விட்டான்.

காமாட்சியம்மாள் சுந்தரேசனைப் பார்த்து ''சுந்தரேசா' நீ ராஜாராமனுடன் பேசிக்கொண்டிரு. பத்மாவதிக்குக் கொஞ்சம் காரியமிருக்கிறது'' என்று சொல்லிவிட்டுப் பத்மாவதியிடம், ''பத்மா! கொஞ்சம் வாம்மா. சீக்கிரம் திரும்பிவிடலாம்'' என்றாள்.

உடனே பத்மாவதி தாயாரைப் பின்தொடர்ந்தாள். ஏகாந்தமான ஒரு இடத்துக்குப் போய்க் காமாட்சியம்மாள் தன்னுடைய வருத்தத்தைக் காட்டிவிடக்கூடாது என்ற எச்சரிக்கையுடன் மிகவும் இனிய முகத்துடன் புன்சிரிப்புக் காட்டி ''உன் அத்தான் எழுதியிருக்கிறதைப் பார்' என்று தன் கையிலிருந்த கோபாலன் கடிதத்தை நீட்டினாள். பத்மாவதியும் மகிழ்ச்சியுடன் வாங்கி அதைப் படித்தாள். அந்தக் கடிதம்:

அத்தையவர்களுக்கு வணக்கம். அப்பா அவர்கள் பூரண சௌக்கிய மடைந்துவிட்டார்கள். நேற்று தலைக்கு ஜலம் விடப்பட்டது. பலவீனம் தவிர வேறு ஒரு குறையும் இல்லை. இன்னும் இரண்டு மூன்று நாட்களுக்குப் பின் அவரையும் அழைத்துக்கொண்டு நாங்கள் அங்கு வந்துவிடுவோம். பத்மாவதிக்கு அவளுடைய கல்லூரி விலாசத்துக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளேன். அதற்குப் பதிலே வரவில்லை. எனக்கு அது வியப்பாயிருக்கிறது. உங்களுக்கும் மாமாவுக்கும் நான் எழுதிய எல்லாக் கடிதங்களுக்கும் உடனுக்குடன் பதில் வந்திருக்க, பத்மாவதிக்கு எழுதின கடிதத்துக்கு மட்டும் பதில் வராதது மிகவும் வருத்தமாகத்தான் இருக்கிறது. ஏன்? கடிதம் அவளுக்குக் கிடைக்கவில்லையா? மாமாவுக்கு என் வணக்கமும் பத்மாவுக்கும் சுந்தரேசனுக்கும் என் வாழ்த்துக்களும் சொல்லுங்கள்.

**அன்புள்ள,**

**கோபாலன்.**

படித்த கடிதத்தை இரண்டாக மடித்துக்கொண்டே.

''அம்மா! மாமா முற்றிலும் சௌக்கியமடைந்து விட்டாரென்பது மிகவும் சந்தோஷமான சமாசாரம்'' என்றாள் பத்மாவதி.

''அந்த சமாசாரம் ஒன்றுதானா அதிலுள்ளது?'' என்றாள் அன்னை.

''அதுதானே முக்கியம்?''

''ஏன்? உன் அத்தான் கோபாலன் இன்னும் நாலைந்து நாட்களில் திரும்பி வந்துவிடுவான் என்பது உனக்கு முக்கியமான சேதியல்லவா?''

''வெளியூருக்குப் போயிருந்தவர் திரும்பி வருகிறார். அதிலென்ன முக்கியத்துவம்?'' என்றாள் பத்மாவதி.

''அது கிடக்கட்டும். அவன் உனக்குக் கடிதம் எழுதியிருந்தானாமே; உனக்குக் கிடைக்கவில்லையா?''

''கிடைத்தது.''

''ஏன் பதில் எழுதவில்லை?''

''அது என்ன கடிதம், அம்மா? என்னென்னமோ கொச்சை கொச்சையாக ஆசைப் பேச்சுகளைக் கொட்டியிருந்தார். எனக்குத் துளிகூடப் பிடிக்கவில்லை. அதை நான் படித்து முடித்த சமயத்தில் ராஜாராமன் வந்தார். அந்தக் கடிதத்தை அவர் பார்க்கக்கூடாதென்று உடனே அதைக் கொண்டுபோய் என் பெட்டிக்குள் வைத்துவிட்டு வந்து ராஜாராமனுடன் பேசிக்கொண்டிருந்தேன். பிறகு அதை மறந்தே போனேன்'' என்றாள் பத்மாவதி.

''அதென்ன அப்படி மறதி? வந்த கடிதத்துக்கு இரண்டு வரி பதில் எழுதினால் என்ன?''



"பதில் எழுதவேண்டிய விஷயமே அதில் இல்லையம்மா. நானும் அவரைப்போல் எழுதிக்கொண்டிருக்க எனக்கு ஒன்றும் வெறி பிடித்துவிடவில்லை" என்றாள் பத்மாவதி.

"சரி, போனால் போகட்டும். இன்னும் சில தினங்களில் கோபாலன் வந்துவிடுவான். அவன் இங்கே வழக்கம் போல் வரும் போதாவது இப்படி எந்நேரம் பார்த்தாலும் ராஜாராமனுடன் சிரித்துச் சிரித்துப் பேசுவதை நிறுத்திக் கொள். பருவமடைந்த பெண் வயதுவந்த வாலிபனோடு இப்படிப் பழகுவது சரியல்ல''. என்று காமாட்சியம்மாள் மகளை அணைத்து அவளுடைய முதுகைத் தடவிக் கொண்டே சொன்னாள்.

அதைக் கேட்ட பத்மாவதி கலகலவென்று சிரித்து விட்டு ''என்னம்மா? பருவமடைந்த பெண் வயது வந்த வாலிபனோடு சிரித்துப் பேசக்கூடாதா? உங்கள் அண்ணா குமாரர் வயது வந்த வாலிபர் அல்லவா? அவர் என்னோடு எப்படிப் பேசினாலும் நீ ஆனந்தப்படுகிறாயே! அவர் என் சடையைப் பிடித்து இழுத்துப் பச்சை பச்சையாகக் கேலி செய்தாலும் நீ பார்த்துக்கொண்டே அவரோடு சேர்ந்து சிரிக்கிறாயே! நான் பிணங்கினாலும் நீ அவருக்காகப் பரிந்து பரிந்து பேசுகிறாயே! அவர் உன்னுடைய அண்ணா பெற்ற பிள்ளை! அவரோடு எப்படி வேண்டுமானாலும் சிரிக்கலாம். ராஜாராமன் யாரோ பெற்ற பிள்ளை. அதனால் அவருடன் சிரித்துப் பேசுவது சரியல்ல. அப்படித்தானே?'' என்று பத்மாவதி ஏளனம் செய்வது போல் சொல்லிவிட்டு முகஞ்சுழித்தாள். "கோபாலன் உனக்கு நிச்சயம் செய்யப்பட்டிருக்கிற மணமகன். அவனோடு நீ. . ." என்று காமாட்சியம்மாள் சொல்லிக் கொண்டிருக்கும் போதே பத்மாவதி ராஜாராமனும் சுந்தரேசனும் பேசிக்கொண்டிருந்த அறைக்கு ஓடிவிட்டாள். காமாட்சி அம்மாள் கற்சிலைபோல் நின்றுவிட்டாள்.

ஒரு வாரம் சென்றபின் ஊருக்குத் திரும்பிவந்துவிட்ட கோபாலன், ஒரு மாதத்துக்கும் அதிகமாகப் பத்மாவதியைப்

பார்த்து மகிழ முடியாமற் போன ஏக்கத்துடன் வெகு வேகமாக அத்தை வீட்டை நோக்கி வந்துகொண்டிருந்தான். தூரத்தில் அவன் வருவதைப் பார்த்துவிட்ட காமாட்சியம்மாள் பத்மாவதிக்குக் கோபாலன் வருவதைத் தெரியப்படுத்த ஓடினாள். அந்த சமயத்தில் பத்மாவதியும் சுந்தரேசனும் ஒரு பெரிய சோபாவில் ராஜாராமனுக்கு இருபுறத்திலும் உட்கார்ந்து வழக்கம்போல் கலகலத்துச் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

காமாட்சியம்மாள் வேகமாக வந்து பத்மாவதியை அவசரமாக வெளியே அழைத்து,

"பத்மா, கோபாலன் வருகிறான்!" என்றாள்.

"வரட்டுமே, வந்தாலென்ன? பயமா?" என்றாள் பத்மாவதி. காமாட்சியம்மாளுக்கு அடக்கமுடியாத எரிச்சல் வந்துவிட்டது. வாயார மகளைத் திட்டி அந்த ராஜாராமனையும் வீட்டைவிட்டு வெளியேபோகச் சொல்லிவிட வேண்டும் என்று எண்ணினாள். ஆனால் அப்படிச் செய்தால் கோபாலனைத் தூக்கியெறிந்து பேசினாலும் பேசிவிடுவாளோ என்று அஞ்சினாள். பெண்மைக்குரிய எல்லா நல்ல குணங்களும் அமைந்து அடக்க ஒடுக்கமே வடி வெடுத்து வந்தது போன்ற பத்மாவதி, அவளை மணந்து கொள்ள நிச்சயம் பேசப்பட்டிருக்கிற தன்னுடைய தமையனாரின் மகன் கோபாலன் அவளைத் தேடி வரும்போது, அவள் வேறொரு வாலிபனோடு ஒட்ட உட்கார்ந்து கொஞ்சிக் கொண்டிருப்பது சரியல்ல, என்று சொல்ல வந்தால் 'வரட்டுமே, வந்தாலென்ன 'பயமா?'' என்று கேட்டு விட்டாளே! பயமில்லையா? அவ்வளவு பயமற்றுப் போய் விட்டதா பெண்பிள்ளைகளுக்கு அதிகப் படிப்பு கூடாதென்றும் அதிலும் ஆண்பிள்ளைகள் படிக்கிற கலாசாலைகளுக்குப் பெண்பிள்ளைகளை அனுப்பக் கூடாது என்றும் சொல்லுவது சரியாகிவிட்டதே! - என்றெல்லாம் எண்ணிக் காமாட்சியம்மாளின் தாய் மனம் தவித்தது.



பத்மாவதியுடன் மேலும் பேசிக் கொண்டிருந்தால் அவள் ஏதேனும் துடுக்கான பதில் சொல்லிவிடுவாளோ என்று பயந்து சமய சந்தர்ப்பத்தைக் கருதித் தன் ஆத்திரத்தையெல்லாம் அடக்கிக் கொண்டு காமாட்சியம்மாள் கோபாலனை வரவேற்கப் போனாள். பத்மாவதி ராஜாராமனுடன் பேசிக்கொண்டிருந்த சுந்தரேசனுடைய அறை அந்த வீட்டின் தலை வாசலிலிருந்து பார்க்க முடியாத ஒதுக்குப் புறத்தில் உள்ளது. அதனால் காமாட்சியம்மாள் பத்மாவதியுடன் நின்றுகொண்டிருந்தது கோபாலனுடைய கண்ணுக்குப்பட முடியாது. கோபாலன் வீட்டுக்குள் புகுந்ததும் அத்தை இருக்குமிடத்தை நாடிச் சென்றான். வழக்கமாக அத்தை இருக்கும் இடங்களில் அவள் இல்லை. அத்தையின் கணவர் ஜானகிராமனுடைய அறைக்குச் சென்றான்.

அவர் அங்கே ஏதோ எழுதிக் கொண்டிருந்தார். கோபாலனை வழக்கம் போல் வரவேற்று மைத்துனருடைய உடல் நலத்தையும் மற்றவர்களுடைய உடல் நலத்தையும் தனித்தனியே விசாரித்துக் கொண்டிருந்தார். காமாட்சியம்மாளும் அங்கே வந்து தன்னுடைய தமையனார் முதலானவர்களைப் பற்றி விரிவாக விசாரித்து மகிழ்ச்சி காட்டினாள். உடனே உள்ளே போய்ச் சிறிது நேரத்தில் கோபாலனுக்குக் காப்பியும் சிற்றுண்டியும் காமாட்சியம்மாள் கொண்டு வந்தாள்.

முன்பெல்லாம் கோபாலன் வந்தால் பத்மாவதிதான் அவனுக்குக் காப்பியும் சிற்றுண்டியும் கொடுக்கக் குதித்துக்கொண்டு வருவாள். இப்போதும் அவளைத்தான் எதிர்பார்த்தான். அத்தை உள்ளே போனபோது அவள் பத்மாவதியிடம் தன் வருகையைச் சொல்லத்தான் போயிருப்பதாகக் கோபாலன் எண்ணினான். பத்மாவதியைப் பார்க்கத் துடித்துக் கொண்டிருந்த கோபாலன் காப்பியையும் சிற்றுண்டியையும் காமாட்சியம்மாள் கொண்டு வந்ததைக் கண்டு ஏமாற்றமடைந்தான். 'பத்மாவதி எங்கே? அன்று ஞாயிற்றுக்கிழமையானதால் கல்லூரிக்குப் போயிருக்க மாட்டாள். பின் எங்கே போயிருப்பாள்' என்றெல்லாம்

எண்ணிக்கொண்டே அத்தை கொண்டு வந்த பலகாரங்களை அருந்தாமல் உட்கார்ந்து கொண்டிருந்தான். சிற்றுண்டியைக் கொடுத்தவுடன் உற்சாகத்துடன் உட்கொள்ளும் அவனுடைய வழக்கத்துக்கு மாறாகக் கோபாலன் அதை வாங்கி மேஜையின் மீது வைத்துவிட்டு விழித்துக் கொண்டிருப்பதன் காரணத்தைக் காமாட்சியம்மாள் கண்டுகொண்டு மனத்துக்குள்ளேயே மகளை நொந்துகொண்டாள்.

''ஏன், கோபாலா, பலகாரத்தைச் சாப்பிடாமல் இருக்கிறாய்?'' என்றாள் அத்தையம்மாள்.

''எங்கே பத்மாவதியைக் காணோம்?'' என்றான் கோபாலன்.

''அவள் சுந்தரேசன் அறையில் என்னமோ கதை பேசிக்கொண்டிருந்தாள்'' என்றாள் அத்தை.

தான் வந்திருப்பது பத்மாவதிக்குத் தெரியாது போல இருக்கிறது. அதனால் தான் அவள் வரவில்லை என்று எண்ணிக்கொண்டு உடனே சிற்றுண்டிகளைத் தின்று காப்பியையும் குடித்தான். பிறகு சிறிது நேரம் தன் தந்தைக்கு நடந்த வைத்தியத்தையும் அதற்கான செலவுகளையும் பற்றிப் பேசிக் கொண்டிருந்து விட்டுப் பத்மாவதியைச் சந்திக்கச் சுந்தரேசன் அறைக்குப் போனான். காமாட்சியம்மாள் கவலையோடு பின் தங்கி விட்டாள்.

கோபாலன் வந்ததை முதலில் பார்த்த சுந்தரேசன்,

''அக்கா, இதோ, அத்தான் வந்து விட்டார்'' என்று கத்தினான். உடனே பத்மாவதி எழுந்து புன்சிரிப்போடு அவனை வரவேற்று விட்டு, ராஜாராமனைக் காட்டி, ''இவர் தான் சுந்தரேசனுக்கு உயிர் கொடுத்த தெய்வம்'' என்றாள்.

''ரொம்ப சந்தோஷம்'' என்று கோபாலன் ராஜாராமனைக் கும்பிட்டான். ராஜாராமனும் திருப்பிக் கும்பிட்டான்.



''அடடா! இவர் சுந்தரேசனைக் காப்பாற்றிய தீரத்தையும் திறமையையும் என்னென்று சொல்லுவது!'' என்றாள் பத்மாவதி.

''உண்மைதான். அப்படிப்பட்ட அபாயத்தில் உதவி செய்த தீரத்தையும் திறமையையும் மெச்சவேண்டியதுதான்'' என்றான் கோபாலன்.

''மெச்சவேண்டியதா! நம்முடைய உடல், பொருள், ஆவி, எல்லாவற்றையும் கொடுத்தாலும் அதற்கு ஈடாகாது'' என்றாள் பத்மாவதி. சுந்தரேசன் குறுக்கிட்டு,

''அத்தான் நீங்களானால் அப்படிப்பட்ட சமயத்தில் அவ்வளவு தைரியத்தோடு கிணற்றில் குதித்து ஒரு உயிரைக் காப்பாற்றி யிருக்க முடியுமா?'' என்றான்.

''ஏன் முடியாது? நானும் செய்திருப்பேன்!'' என்றான் கோபாலன்.

''முடியவே முடியாது. உங்களுக்கு இவரைப்போன்ற தைரியமும் வராது; இவர் சுந்தரேசனைத் தூக்கிக்கொண்டு வந்ததுபோல் தூக்கிக் கொண்டுவர உடல் வலிமையும் உங்களுக்கு இல்லை.'' என்றாள் பத்மாவதி.

''அக்கா! அக்கா! அத்தானுடைய தைரியத்தைத்தான் நாம் பார்த்திருக்கிறோமே! அன்றைக்கு ஒரு நாள் மாடியில் வந்த ஒரு மந்திக் குரங்கு அவரைப் பார்த்து 'உர்' என்று உறுமியவுடனே பயந்து நடுங்கிப் பின்னால் காலெடுத்து வைத்துக் கட்டை தடுக்கி விழுந்து முழங்கையில் காயமடைந்து, கட்டுப் போட்டுக் கொண்டு பத்து நாள் படாத பாடுபட்டாரே! அது மறந்தா போய்விடும்?'' என்று சுந்தரேசன் கைதட்டிச் சிரித்தான்.

பத்மாவதியும் 'ஆமாம், ஆமாம்' என்று அவனுடன் சேர்ந்து சிரித்தாள். சுந்தரேசனும் பத்மாவதியும் அடிக்கடி இப்படிக் கோபாலனைப் பரிகாசம் பண்ணுவது வழக்கம்தான்.

அதை அவனும் ரசிப்பான். ஆனால் இன்றைக்கு என்னமோ அதை ரசிக்கவில்லை. ஏளனம் செய்வதுபோல் எண்ணினான். உண்மையில் கோபாலன் தைரியத்தில் குறைந்தவன். மெலிந்த தேகமுடையவன். அதனால் தேக பலத்திலும் குறைந்தவனே. அவன் குரங்குக்குப் பயந்து பின்னால் அடியெடுத்துத் தடுக்கி விழுந்து காயமடைந்து விட்டதும் உண்மைதான். ஆனாலும் அதை எல்லாம் இப்போது ராஜாராமனோடு ஒப்பிட்டுப் பேசிப் பரிகாசம் செய்தது தன்னை அவமானப் படுத்துவதுபோல் அவனுக்கு இருந்தது. இருந்தாலும் அதற்காக வருத்தம் காட்டிக் கொள்ளாமல் சிரித்துக்கொண்டே ''அப்படியேதான் இருக்கட்டும். தைரியத்திலும் உடல் வலிமையிலும் ராஜாராமன் என்னைவிடச் சிறந்தவர்தான்'' என்றான். ''தைரியத்திலும் உடல் வலிமையிலும் மட்டுந்தானா? எல்லா விதத்திலும் இவர் உங்களை விடச் சிறந்தவர்தான்'' என்று சொல்லிக் கலகல வென்று சிரித்தாள் பத்மாவதி.

தன்னைவிட ராஜாராமன் எல்லா விதத்திலும் சிறந்தவன் என்று பத்மாவதி சொன்னது கோபாலனுடைய உள்ளத்தைக் கொஞ்சம் உறுத்தி விட்டது. 'தைரியத்திலும் உடல் வலிமையிலும் சிறந்தவன் என்பது போகட்டும். ஆனால் எல்லா விதத்திலும் ராஜாராமன் என்னை விடச் சிறந்தவன் என்றால் என்ன அர்த்தம்?' என்று கோபாலன் எண்ணத் தொடங்கிவிட்டான். பேசாமல் உட்கார்ந்திருந்தான்.

''அத்தான்! என்ன ஆலோசனை செய்கிறீர்கள்? இது வரையிலும் தங்கியிருந்த குளித்தலையைப் பற்றி எண்ணிக் கொண்டிருக்கிறீர்களா?'' என்றான் சுந்தரேசன்.

''அத்தான்! மாமாவையும் அழைத்துக்கொண்டு வந்து விட்டீர்களல்லவா?'' என்றாள் பத்மாவதி.

''மாமாவைப்பற்றி உனக்கென்ன கவலை?'' என்றான் கோபாலன்,

''ஐயோ! அதென்ன அப்படிச் சொல்லுகிறீர்கள்?'' என்றாள் பத்மாவதி.



''நீதான் எங்களை அடியோடு மறந்து விட்டாயே? என் கடிதத்துக்குப் பதில் எழுதக்கூட உனக்கு மனமில்லாமற் போய்விட்டதே!'' என்றான் கோபாலன்.

''ஆமாம். அத்தான். மறந்துதான் விட்டேன். மன்னித்திடுங்கள். இவரோடு (ராஜாராமனைச் சுட்டிக்காட்டி) பேசிக்கொண்டிருந்தாலே எல்லாம் மறந்து போய்விடுகிறது. இவர் என்ன அழகாகக் கதைகள் சொல்லுகிறார் தெரியுமா? எப்போதும் இவரோடு பேசிக்கொண்டும் மகிழ்ச்சியூட்டும் இவருடைய கதைகளைக் கேட்டுக் கொண்டும் இருந்தாலே போதும்போல் தோன்றும்......''

''அது கிடக்கட்டும். என் கடிதத்துக்கு ஏன் பதில் எழுதவில்லை?''

''ஆமாம், போங்கள், நல்ல கடிதம் எழுதினீர்கள். அதற்குப் பதில் வேறே எழுதவேண்டுமாக்கும்'' என்று முனகினாள் பத்மாவதி.

''அதென்ன கடிதம் அக்கா? அதை எனக்குக் காட்டவேயில்லையே!'' என்றான் சுந்தரேசன்.

''அது மற்றவர்களுக்குக் காட்டக்கூடியதாக இல்லை''

''ஓஹோ! அது உங்கள் கல்யாணத்தைப் பற்றிய கடிதமா?'' என்று சிரித்தான் சுந்தரேசன். பத்மாவதியும் அவனோடு சேர்ந்து சிரித்துவிட்டாள்.

தான் எழுதிய கடிதத்தைப் பற்றி அலட்சியமாகப் பேசுவதாக எண்ணிய கோபாலன் பத்மாவதியைப் பார்த்து,

''ஏன் அந்தக் கடிதம் உனக்குப் பிடிக்கவில்லையா?'' என்றான்.

''அத்தான், கோபித்துக்கொள்ள வேண்டாம். அது எனக்குத் துளிகூடப் பிடிக்கவில்லை'' என்றாள் பத்மாவதி.

''பிடிக்கவில்லையா! சரி, பிடிக்கவிட்டால் போகட்டும்'' என்று சொல்லிக்கொண்டே வெகு வேகமாக எழுந்து வெளியே போய்விட்டான்.

## 5

அறையை விட்டு வெளியேறிய கோபாலன் அத்தையைத் தேடிக்கொண்டு பின்கட்டுக்குப் போனான்.

' கோபாலன் பத்மாவதியைக் கண்டு களிக்க ஆசையோடு போயிருக்கிறான். கோபாலனையும் வைத்துக் கொண்டு அவனுக்கு முன்னால் பத்மாவதி அந்த ராஜாராமன் பக்கத்தில் அமர்ந்து அவனுடன் கொஞ்சிக் கொண்டிருந்தால் அதைக் கண்டு கோபாலன் என்ன நினைப்பானோ? கோபாலன் வருகிறான் என்றால் குதிபோட்டுக் கொண்டு ஓடி அவனை வரவேற்று 'அத்தான்' 'அத்தான்' என்ற பரிந்து பரிந்து அவனுக்குப் பணிவிடை செய்து கொண்டிருந்தவள் இந்த ஒன்றரை மாதத்துக்குள் இப்படி மாறிப்போனாளே! கோபாலன் வருகிறான் என்று நான் எச்சரித்தும்கூட 'வரட்டுமே, வந்தாலென்ன, பயமா?' என்று கேட்டுவிட்டாளே! ஆயிரங்காலத்து உறவை அரை நொடியில் அழித்துவிடுவாள் போலிருக்கிறதே! என்றெல்லாம் கவலைப்பட்டுக்கொண்டே காமாட்சியம்மாள் தலையை நட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

''அத்தை! நான் போய் வருகிறேன்'' என்று வெடித்த கோபாலன் குரலைக் கேட்டுத் திடுக்கிட்டு எழுந்தாள், காமாட்சியம்மாள்.

''ஏன் இவ்வளவு சீக்கிரம் போகப் புறப்பட்டுவிட்டாய்? பத்மாவதியைப் பார்க்கவில்லையா?''

''ஆஹா! பார்த்தாச்சு. பத்மாவதியையும் பார்த்தாச்சு, அவளுடைய புது உறவுகளையும் பார்த்தாச்சு?''

''புது உறவா? அது யார்?''



''அவன்தான், அவளுடைய மதிப்பிற் சிறந்த அந்த ராஜாராமன்''.

''ராஜாராமனா? அவன் என்ன செய்தான்?''

''அவன் ஒன்றும் செய்யவில்லை. உங்கள் மகள்தான் அவனோடு கொஞ்சிக்கொண்டிருந்தாள்.''

''அப்படியெல்லாம் நினைக்காதே, கோபாலா. அந்த ராஜாராமன்தான் நம் சுந்தரேசன் உயிரைக் காப்பாற்றியவன். சுந்தரேசன் என்றால் பத்மாவதிக்கு உயிர். அது உனக்குத் தெரிந்ததுதானே! தன் தம்பியை வெகு பாடுபட்டுக் காப்பாற்றியவன் என்பதற்காகப் பத்மாவதி அவன் மேல் பாசமாயிருக்கிறாள். ராஜாராமன் இல்லாதிருந்தால் இப்போது சுந்தரேசன் நமக்கு இருப்பானா?''

''அத்தை உனக்கு ஒன்றும் தெரியாது. நீ வெளுத்ததெல்லாம் பால் என்று எண்ணிக்கொண்டிருக்கிறாய். பத்மாவதியின் நோக்கம் எனக்கு நன்றாகத் தெரிந்து விட்டது.''

''எப்படி?''

''அவள் பேச்சிலிருந்துதான்.''

''என்ன பேசினாள். உங்களுக்குள் நடந்ததென்ன?''

''நான் போகும்போது பத்மாவதி ராஜாராமன் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு முகத்தோடு முகம் ஒட்டிக் கொள்வதுபோல என்னமோ பேசிச் சிரித்துக் கொண்டிருந்தாள். நான் போனதும் ஒப்புக்கு எழுந்து வரவேற்று விட்டு, என் தகப்பனாருடைய சௌக்கியத்தைப் பற்றிக் கூட விசாரிக்காமல் அந்த ராஜாராமனைப் புகழ ஆரம்பித்துவிட்டாள்''

''அதுதான் சொன்னேனே, அந்த ராஜாராமன் சுந்தரேசனைப் பிழைக்கவைத்தவன் என்பதற்காக எப்போதும் அவனைப் புகழ்ந்துகொண்டிருப்பதுதான் அவள் ஆசை...''

''ராஜாராமனைப் புகழட்டும். நான் வேண்டாமென்று சொல்லவில்லை. அதற்காக என்னை ஏன் இகழவேண்டும், அத்தை?''

''உன்னை இகழ்ந்தாளா! என்ன சொன்னாள்?''

''தைரியத்திலும் தேகபலத்திலும் நான் அவனுக்கு ஈடாகமாட்டேனாம். நான் மிக்க பயங்கொள்ளியாம்.''

''அவள் உன்னோடு வழக்கமாகப் பரிகாசம் பேசுகிற முறையில் பேசியிருப்பாள். அதற்காகவா.....''

''தைரியத்திலும் தேக பலத்திலும் நான் ராஜாராமனை விடக் குறைந்தவன் என்று சொன்னதிலும் எனக்கு வருத்தமில்லை. எல்லா விதத்திலும் என்னை விட ராஜாராமன்தான் அவளுக்குச் சிறந்தவனாம்.''

''விளையாட்டுக்கு ஏதாவது அவள் வாய் தவறியும் சொல்லியிருப்பாள். நீ அதை யெல்லாம் வினையாக அர்த்தம் செய்துவிடாதே. உன்னைவிடச் சிறந்தவன் அவளுக்கு யாருமில்லை...''

''விளையாட்டா! என் கடிதத்துக்கு ஏன் பதில் எழுதவில்லையென்று கேட்டேன். அந்தக் கடிதம் அவளுக்குத் துளிகூடப் பிடிக்கவில்லையாம். இதை விளையாட்டாக அவள் சொல்லவில்லை. 'அத்தான் கோபித்துக்கொள்ள வேண்டாம். அது எனக்குத் துளிகூடப் பிடிக்கவில்லை' என்றே அழுத்தம் திருத்தமாகச் சொல்லிவிட்டாள். இன்னுமென்ன வேண்டும்?''

''ஆமாம். அந்தக் கடிதத்தில் என்ன எழுதியிருந்தாய்?''

''என்ன எழுதியிருப்பேன்? அவள்மீது எனக்குள்ள ஆசையைத்தான் எழுதியிருந்தேன். எங்கள் திருமணம் விரைவில் நடக்கவேண்டும் என்றுதான் எழுதியிருந்தேன். அது அவளுக்குத் துளிகூடப் பிடிக்கவில்லையாம். அதற்கென்ன அர்த்தம்? என்னை அவளுக்குப் பிடிக்கவில்லை என்பதைத் தவிர வேறென்ன?''



''அதென்னமோ அப்பா, உங்கள் அர்த்தமெல்லாம் எனக்கு ஒன்றும் புரியவில்லை. இப்படி யெல்லாம் தப்பர்த்தம் செய்து மனத்தைக் குழப்பிக்கொள்ளாதே.....''

''நானொன்றும் தப்பர்த்தம் செய்துகொள்ளவில்லை, அத்தை, இங்கிருந்து எனக்கு ஒரு கடிதம் குளித்தலைக்கு வந்தது. அதில் நான் திடுக்கிடும்படியான செய்திகள் இருந்தன. பத்மாவதி இந்த ராஜாராமனுடன் வெகு நெருக்கமாக இருப்பதாகவும், ஒரு கணம்கூட இருவரும் பிரிவதில்லை யென்றும், இரவு நேரங்களிற்கூட இருவரும் சேர்ந்து சினிமா முதலான வேடிக்கைகளுக்குப் போவதாகவும், கல்லூரிக்கு வரும்போதும் அதைவிட்டுப் போகும் போதும் ஜோடியாகவே வழிநெடுகக் கூச்சமில்லாமல் ஒருவரையொருவர் பரிகாசம் பண்ணிச் சிரித்துக்கொண்டே நடப்பதாகவும் இருந்தது. அதோடுமட்டும் இருந்தாலும் பரவாயில்லையே! அவர்கள் இருவரும் ஒருவரையொருவர் காதலித்துக் கலியாண ஒப்பந்தம் செய்துகொண்டுவிட்டதாகவும் எழுதியிருந்தது. அதைப் படித்தவுடன் என் நெஞ்சு வெடித்துவிடும்போல் இருந்தது. ஆனாலும் அந்தக் கடிதத்தை நான் உடனே நம்பிவிடவில்லை. வெகு பாடுபட்டு என் மனவேதனையை அடக்கிக்கொண்டு அப்போதே பத்மாவதிக்குக் கடிதம் எழுதினேன். அந்தக் கடிதத்தில் எனக்கு இங்கிருந்து வந்த கடிதத்திலுள்ள எதைப் பற்றியும் எழுதாமல் அவள்மீது எனக்குள்ள ஆசைகளை மட்டும் பல படியாக விரித்து எழுதி அவளுடைய பதிலைக் கோரியிருந்தேன். அவளுடைய பதில் எனக்கு வந்த கடிதத்தாலுண்டான என் மனப்புண்ணை ஆற்றிவிடக் கூடிய அருமருந்தாக இருக்குமென்று எதிர்பார்த்தே அதை எழுதினேன். அந்தக் கடிதம்தான் அவளுக்குத் துளிகூடப் பிடிக்காமற் போன கடிதம்.''

உடல் நடுங்க, உள்ளம் வெதும்பக் கண்களில் வழிந்த கண்ணீரை முன்றானையால் துடைத்துக் கொண்டே காமாட்சியம்மாள் கேட்டுக்கொண்டு பிரமித்து நின்றாள்.

கோபாலன் சொன்னது காமாட்சியம்மாளுக்கு ஏற்கனவே இருந்த சந்தேகங்களை உறுதிப்படுத்தி விட்டது. கோபாலன் மேலும் சொன்னான்.

"எனக்குப் பத்மாவதி பதில் எழுதாததையும் பொறுத்துக்கொண்டு எல்லாம் நேரில் அறிந்து கொள்ளலாம் என்றுதான் நாங்கள் இங்குவரத் திட்டமிட்டிருந்ததையும் மாற்றிப் பயணத்தைத் துரிதப்படுத்தி இன்று வந்து சேர்ந்தோம். இன்று காலையில் நாங்கள் வந்து சிறிது நேரத்துக் கெல்லாம் எங்கள் வீட்டுக்குப் பக்கத்து வீட்டுப் பையன் ராமச்சந்திரன் என்னைப் பார்க்க வந்தான். அவன் பத்மாவதியின் வகுப்பில் படிக்கிறவன். அவனோடு பேசிக்கொண்டிருக்கையில் அவனாகவே பத்மாவதி - ராஜாராமனைப் பற்றிய பேச்சை எடுத்தான். அவன், பத்மாவதி - ராஜாராமனைப்பற்றி எனக்கு வந்த கடிதத்திலுள்ளது உண்மைதானென்றும் கல்லூரி முழுவதிலும் பையன்களிடைப் பேச்செல்லாம் பத்மாவதி - ராஜாராமன் ஜோடியைப் பற்றித்தான் என்றும் சொன்னான். நான் அதையும் நம்பாமல் வேறு இரண்டு பையன்களையும் விசாரித்தேன். எனக்குப் பதில் சொல்லாமலேயே அவர்கள் சிரித்த சிரிப்பிலிருந்தே நான் எல்லாவற்றையும் ஊகித்துக் கொள்ள முடிந்தது.

"இதையெல்லாம் கூடப் பொருட்படுத்தாமல் தான் பத்மாவதியைப் பார்க்க ஓடி வந்தேன். இங்கே நான் கண்டதும் கேட்டதும் எனக்கு வந்த கடிதத்திலுள்ள தெல்லாம் உண்மை என்பதைத் தான் காட்டுகின்றன" என்று சொல்லிவிட்டுச் சரேலென்று போய் விட்டான், கோபாலன்.

தலையில் இடி விழுந்தது போல் கதிகலங்கிப்போன காமாட்சியம்மாள் கண்ணீரும் கம்பலையுமாய்க் கணவர் இருந்த அறைக்குள் ஓடினாள்.

"கேட்டீர்களா கதையை?" என்றாள்.



"என்ன கதை? ஏன் அழுகிறாய்?" என்றார் திடுக்கிட்ட ஜானகிராமன்.

"இந்தப் பழிகாரப் பெண் நமக்கு உண்டாக்கியிருக்கிற மானக்கேட்டுக்காக அழாமல் என்ன செய்வது?"

"எந்தப் பழிகாரப் பெண்? என்ன மானக் கேடு?"

"எல்லாம் உங்கள் அருமை மகள் பத்மாவதிதான். அவளுடைய காதல் நாடகந்தான். நாம் இவ்வளவு காலம் கண்ணியமாக வாழ்ந்த வாழ்வைச் சந்தி சிரிக்கச் செய்து விட்டது".

"பத்மாவதியா? அவள் என்ன செய்துவிட்டாள்?"

"அவள் அந்த ராஜாராமனோடு கொஞ்சிக் கொண்டு நம் கோபாலனை அவமானப்படுத்தி அனுப்பிவிட்டாள்." என்று காமாட்சியம்மாள் தேம்பித் தேம்பி அழுதாள்.

"காமாட்சி! அழாதே, என்ன நடந்தது? நிதானமாகச் சொல்லேன். ஏன் அழுகிறாய்?"

"கோபாலன் அவளைப் பார்க்கத்தானே ஆசையாக ஓடிவந்தான்? அவன் வருகிறபோது பத்மாவதி அந்த ராஜாராமனோடு கொஞ்சிக் கொண்டிருப்பது நன்றாயிருக்காது என்று எண்ணி, கோபாலன் தூரத்தில் வருவதைப் பார்த்த நான் ஓடிப்போய்க் கோபாலன் வருவதாகச் சொல்லி எச்சரித்தேன். அவள் அதற்கு 'வரட்டுமே வந்தாலென்ன பயமா?' என்று சொல்லிவிட்டுக் கோபாலனை வரவேற்கக் கூட வராமல் அந்த ராஜாராமனோடு கொஞ்சப் போய் விட்டாள். கோபாலன் நம்மோடு பேசிக்கொண்டிருந்து விட்டுப் பத்மாவதியைப் பார்க்க, அவள் அந்த ராஜாராமனோடு கொஞ்சிக் கொண்டிருந்த சுந்தரேசன் அறைக்குப் போனான். பத்மாவதி கோபாலனை வழக்கம்போல் வரவேற்காமல் கோபாலனை ஏளனமாகப் பேசியிருக்கிறாள்..."

"என்ன ஏளனம்?" என்றார் ஜானகிராமன்.

''ராஜாராமன் கோபாலனைவிடத் தைரியசாலி என்றும் பலசாலியென்றும் சொன்னாளாம்...''

''அதிலென்ன தப்பு? ராஜாராமன் கோபாலனைவிடத் தைரியமும் தேக பலமும் அதிகமுள்ளவன் தானே? இதிலென்ன ஏளனம் இருக்கிறது?''

''முழுக்கக் கேளுங்கள். தைரியத்திலும் தேகபலத்திலும் மட்டுமல்ல. எல்லா விதத்திலும் கோபாலனைவிட ராஜாராமன்தான் அவளுக்குச் சிறந்தவனாம். அதுமட்டுமல்ல. கோபாலன் குளித்தலையிலிருந்து பத்மாவதிக்கு ஒரு ஆசைக் கடிதம் எழுதியிருந்தானாம். அதில் அவளுக்கும் தனக்கும் விரைவில் விவாகம் நடக்க வேண்டுமென்ற விருப்பத்தை எழுதி அதற்குப் பதில் எழுதும்படி கேட்டிருந்தானாம். இவள் அதற்குப் பதிலே எழுதவில்லை...''

''ஆமாம், உனக்குக் கோபாலன் எழுதியிருந்த கடைசி கடிதத்தில் பத்மாவதி அவன் எழுதிய கடிதத்துக்குப் பதில் போடவில்லை என்று எழுதியிருந்ததை நான் கூடப் பார்த்தேன்'' என்றார் ஜானகிராமன்.

''பார்த்தீர்களல்லவா? அந்தக் கடிதத்துக்கு ஏன் பதில் எழுதவில்லை யென்று இப்போது கேட்டானாம். அதற்கு இந்தப் பழிகாரி அந்தப் பேச்சே தனக்குத் துளிகூடப் பிடிக்கவில்லை என்று கண்டிப்பாகச் சொல்லி விட்டாளாம்.''

''எந்தப்பேச்சு?''

''கோபாலனுக்கும் அவளுக்கும் நடக்கவேண்டுமென்ற கல்யாணப் பேச்சுத்தான். அது இவளுக்குத் துளிகூடப் பிடிக்கவில்லை.''

'அப்படியா சொல்லி விட்டாள்?''

''ஆமாம். ஆமாம். அப்படித்தான் சொல்லிவிட்டாளாம். கோபாலன் பொய் சொல்லக் கூடியவனல்ல.''



"கோபாலன் பொய் சொல்லக்கூடியவனல்ல. அது எனக்கும் தெரியும்......" என்று ஜானகிராமன் முனகிக் கொண்டே தலை குனிந்து யோசனையில் ஆழ்ந்து வெகு நேரம் மௌனமாகவே இருந்தார்.

"இது நமக்கு நன்றாக இருக்கிறதா?" என்று அழுது கொண்டே கேட்ட காமாட்சியம்மாளின் குமுறல் அவருடைய மௌனத்தைக் கலைத்தது.

"காமாட்சி! எதற்காக அழுகிறாய்? நிதானமாக நான் சொல்வதைக் கேள். பத்மாவதி ராஜாராமனுடன் குலவிக் கொண்டிருக்கிற மாதிரியையும் இடையிடையே அவர்களுக்குள் நடக்கிற பேச்சுக்களையும் நானும் கூர்ந்து கவனித்துக் கொண்டுதான் இருக்கிறேன். என் கண்ணிற் பட்டதையும் காதில் விழுந்ததையும் இப்போது நீ சொன்னதையும் சேர்த்துப் பார்த்தால் பத்மாவதி ராஜாராமனைத் தான் மணந்துகொள்ள விரும்புவதாகத் தெரிகிறது. அழகிலும் அறிவிலும் ஆற்றலிலும் எல்லா விதத்திலும் கோபாலனை விட ராஜாராமன் சிறந்தவன் என்பதும் உண்மைதானே. அதனால் பத்மாவதி அவனை விரும்புவதும் இயல்புதான். அதற்கு நாமென்ன செய்யலாம்?"

"ஐயையோ! இதென்ன அப்படிச் சொல்லுகிறீர்கள்! பிறந்தநாள் முதல் பத்மாவதிக்குக் கோபாலன்தான் என்று முடிபோட்டு விட்டு, என் தமையன் நாலைந்து பெரிய மனிதர்களோடு வந்து பெண் கேட்டபோது நீங்களும் நிச்சயம் சொல்லி வாக்குறுதி தந்துவிட்டு, இவளும் இத்தனை நாளும் அவனைத்தான் கல்யாணம் செய்து கொள்வதாக ஆசை காட்டிக் கொண்டிருந்துவிட்டு, இப்போது...." என்று மீண்டும் விம்மி விம்மி அழத்தொடங்கி விட்டாள், காமாட்சியம்மாள்.

"காமாட்சி! பத்மாவதிக்குக் கோபாலன்தான் என்று நீ முடிபோட்டு வைத்ததும், அவளைக் கோபாலனுக்கே கொடுப்பதாக நான் வாக்குறுதி செய்திருப்பதும் உண்மைதான்.

நான் என் வாக்குறுதியில் ஒருநாளும் தவறமாட்டேன். கோபாலனை விட்டு ராஜாராமனுக்குத்தான் கொடுக்க வேண்டுமென்பதும் என் கட்சியல்ல. ஆனால் நீயும் நானும் நினைக்கிறபடி எல்லாம் நடந்துவிடுகிறதா? தெய்வ சித்தம் எதுவோ அதுதான் நடக்கும். பத்மாவதி கோபாலனை மணந்துகொள்ள இஷ்டப்படா விட்டால்?. . . ."

"அவளென்ன இஷ்டப்படுவது? நீங்களே இப்படிச் சொன்னால் அவள் இஷ்டமில்லை யென்றும் சொல்லுவாள். அதற்கு மேலும் கூடச் சொல்லுவாள். நீங்களும் நானும் நிச்சயம் சொல்லித் தீர்மானம் ஆனபின் இனிமேல் இது அவளுடைய இஷ்டமோ?"

"காமாட்சி! பத்மாவதி வயது வந்த பெண், படித்தவள், புத்திசாலி. இது வரையிலும் குற்றம் சொல்லும்படி எதிலும் நடந்து கொண்டவளல்ல. நம்முடைய மற்றப் பெண்களைவிட இவள்தான் நல்லவள் என்று நீயே அடிக்கடி சொல்லியிருக்கிறாய். நீயும் நானும் பழங்காலத்துப் பசலிகள். நாம் இருவரும் ஒருவரையொருவர் சரியாகப் பார்க்காமல் கூடக் கல்யாணம் பண்ணிக் கொண்டோமே. அப்படி இந்தக் காலத்தில் எதிர்பார்க்கக் கூடாது. பெண்களுக்கும் சம சுதந்தரம் உண்டு என்று பேசுகின்ற காலம் இது. அதனால் பத்மாவதியின் கருத்தையும் நாம் அனுசரித்துத்தான் ஆக வேண்டும். இதெல்லாம் காதலைப் பற்றியது. காதல் கட்டாயப்படுத்தி உண்டாக்கக் கூடியதல்ல. மேலும். . . ." என்பதற்குள் காமாட்சியம்மாளுடைய அழுகை ஆவேசமாக மாறிவிட்டது.

"காதலாவது கத்திரிக்காயாவது! அதெல்லாம் ஒன்றுமில்லை. அந்த டம்பாச்சாரிப் பயல் ராஜாராமன் வேளைக்கு ஒரு அலங்காரத்துடன் இங்கே வந்து அவளுடன் பசப்பிக் கொண்டிருக்கிறான். அதைக் கண்டு இவளும் மயங்கிப் போய்த் தன்னுடைய நிலைமையை மறந்துவிட்டுத் திரிகிறாள். முதலில் அந்த ராஜாராமனை உடனே இந்த வீட்டை விட்டுத் துரத்துங்கள். இனிமேல் அவன் இந்த வீட்டு வாசலை மிதித்தால் நான் மிகவும் பொல்லாதவளாகி விடுவேன். அவன் தொலைந்தால் உடனே இவளுடைய புத்தி சரியாகிவிடும். ஆமாம், உடனே போய் நீங்கள் அவனிடம் இனிமேல் இங்கு வரக்கூடாது என்று கண்டிப்பாகச் சொல்லி விடுங்கள். நீங்கள் சொல்லாவிட்டால், இதோ, நானே போய்ச் சொல்லி விடுகிறேன்" என்று வெகு படபடப்போடு பேசிவிட்டாள்.



இது வரைக்கும் காமாட்சியம்மாள் கணவனோடு இப்படிப் பேசினதேயில்லை. ஜானகிராமனும் சிறிது திகைத்துவிட்டார். நிதானமாகப் பேசிச் சிறுகச் சிறுகக் காமாட்சியம்மாளையும் தன் வழிக்குக் கொண்டுவந்து, பத்மாவதி ராஜாராமனையே விரும்பினால் அதற்கு மனைவியினுடைய சம்மதத்தையும் பெற்று விடலாம் என்று எண்ணித்தான் தம்முடைய விருப்பத்தை வெளியிடாமல் பத்மாவதியின் சுதந்தரத்தைப் பற்றிப் பேசிக்கொண்டு வந்தார். காமாட்சியம்மாளின் கொதிப்பைக் கண்டதும் அவளைச் சாந்தப்படுத்த எண்ணி,

"காமாட்சி! ஏது உனக்குக்கூட இவ்வளவு பதற்றம்? பொறு. அவசரப்பட்டு ராஜாராமனிடம் உன் கொதிப்பைக் காட்டிவிடாதே. அப்படிச் செய்தால் அதனால் பத்மாவதிக்குக் கோபமுண்டாகி ஏதாவது விபரீதம் நடந்து விடலாம்".

"நானும் பொறுத்துப் பொறுத்துத்தான் பார்த்தேன். இனிமேலும் பொறுத்திருக்க முடியாது. கண்டிக்க வேண்டியதை உடனே கண்டிக்க வேண்டும். இவள் படித்துப் பாஸ் பண்ணி ஆக வேண்டியது ஒன்றுமில்லை பள்ளிக்கூடத்துக்குப் போவதை நிறுத்திவிட்டு நிச்சயம் பேசியிருக்கிற கல்யாணத்தை நாளைக்கே நடத்தி விடுங்கள்".

"ஏன் மறுபடியும் ஆத்திரப்படுகிறாய்? படிப்புக்கும் இதற்கும் என்ன சம்பந்தம்? படிப்பை நிறுத்தினவுடனே எல்லாம் சரியாகி விடுமா?"

"படிக்கிறேன் படிக்கிறேன் என்று காலேஜுக்குப் போகும்போது வரும்போதும் அந்தப் பயலோடு சேர்ந்தே

சிங்கார நடை போட்டுத்தானே இந்தச் சீரழிவு வந்திருக்கிறது? போதும். படிப்பை நிறுத்துங்கள். கல்யாணத்தை முடியுங்கள். எல்லாம் சரியாகிவிடும்".

"காமாட்சி! இதென்ன இப்படி யெல்லாம் நிதானம் கெட்டுப் பேசுகிறாய்? பத்மாவதியைப் படிக்க வேண்டாம் என்று சொல்வதும் ராஜாராமனை இங்கே வரவேண்டாம் என்று சொல்லுவதும் இரண்டும் ஒன்றுதான். இதில் எதைச் செய்தாலும் இப்போது சந்தி சிரிப்பதாக நீ சொன்ன நம்முடைய மானம் ஊரே சிரிக்கும்படியாகி விடும். கல்யாணத்தை நாளைக்கே நடத்திவிடச் சொல்லுகிறாயே! இதென்ன மரப்பாச்சிக் கல்யாணமா? பத்மாவதியும் கோபாலனும் வெறும் பொம்மைகளா? பத்மாவதி கோபாலனை மணந்துகொள்ளச் சம்மதித்தாலும் உன் தமையனார் குமாரன் கோபாலன் 'வேறொருவன் மீது ஆசை கொண்டு என்னை அவமதித்துவிட்ட பெண் இனிமேல் எனக்கு வேண்டாம்' என்று சொல்லி விட்டால் என்ன செய்வாய்? அவனை இழுத்து உட்கார வைத்துத் தாலி கட்டச் செய்ய முடியுமா?"

"கோபாலன் அப்படி ஒன்றும் சொல்லமாட்டான்" என்று முனகினாள் காமாட்சியம்மாள்.

"ஏன் சொல்லமாட்டான்? சொல்லாவிட்டால் நல்லதுதான். ஆனால் சொல்லக்கூடிய நியாயம் இருக்கிறது. சொல்லிவிட்டால் என்ன செய்வது என்பதை யோசித்துப் பார்."

ஜானகிராமன் இதைச் சொன்னவுடனே காமாட்சியம்மாளுடைய ஆவேசம் மறைந்துவிட்டது; அச்சம் புகுந்துவிட்டது; குமுறல் தணிந்துவிட்டது; குரல் பணிந்து விட்டது.

"பின் இதற்கு என்னதான் செய்வது? சொல்லுங்கள். நீங்களும் நானும் நிச்சயம் பேசிக் கொடுத்திருக்கிற வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டாமா?"



"நிறைவேற்ற வேண்டாமென்றா சொல்லுவேன்? நீ மட்டும் அவசரப்பட்டு ராஜாராமனையோ பத்மாவையோ எதுவும் கடுமையாகப் பேசிவிடாமல் பொறுத்திரு. பத்மாவதியுடன் நான் பேசுகிறேன்."

"நான் இதைப்பற்றி யாரிடமும் வாயே திறக்கவில்லை. நீங்களே அவளுக்குச் சொல்லவேண்டியதைச் சொல்லிப் புத்திவரச் செய்யுங்கள். இல்லாவிட்டால் நம்முடைய குடும்பத்துக்கு மிகப் பெரிய பழி வந்துவிடும். பத்மாவதி பிறந்த நாளிலிருந்து, அவளைத் தம்முடைய முதல் மருமகளாகவே பாராட்டிச் சீராட்டி வந்திருக்கிற எங்கள் அண்ணாவின் மனம் நொந்து போகக்கூடாது. அவர் மனம் நொந்தால் நம்முடைய நல்வாழ்வு கெட்டுப்போகும். அவர் நமக்குச் செய்திருக்கிற ஈடுசெய்ய முடியாத பல உதவிகளையும் எண்ணிப் பார்க்க வேண்டும். நாம் அவருக்குக் கொடுத்துள்ள வாக்குறுதி தவறினால் அது அவருக்குத் துரோகம் செய்ததாகிவிடும். அப்படி நேராதபடி பத்மாவதிக்குச் சொல்ல வேண்டியதை மிகவும் கண்டிப்பாகச் சொல்லிவிடுங்கள். 'பெண்கள் சுதந்தரம்' என்ற பேச்சுக்கே இதில் இடம் இல்லை. நாம் இத்தனை நாளும் சொல்லி வந்த ஏற்பாட்டின் படி பத்மாவதி கோபாலனை மணந்து கொள்ளாவிட்டால் என் உயிர் உடலில் தங்காது. என்னால் பொறுக்கவே முடியாது. அப்புறம் நான்... நான்..." என்று மறுபடியும் விம்மி விம்மி அழுதுகொண்டே காமாட்சியம்மாள் போய்விட்டாள்.

ஜானகிராமனுக்கு மிகப் பெரிய தர்மசங்கடம் உண்டாகிவிட்டது. அவருடைய விருப்பம் தம் மகள் ராஜாராமனை மணந்துகொள்ள நேரிட்டால் அதுதான் நல்லது என்பது. அதைத் தாமாகச் சொல்ல முடியாது. ஏனென்றால் பத்மாவதியைக் கோபாலனுக்கே கொடுப்பதாக வாக்களித்து நிச்சயம் பேசியிருக்கிறார். ஆனால் பத்மாவதியே தான் ராஜாராமனைத்தான் விரும்புவதாகச் சொல்லி விட்டால் தாம் வாக்குறுதி தவறி விட்டதாக யாரும் குறைகூற

முடியாதல்லவா? அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலைக்காகத்தான் ஜானகிராமன் காத்திருந்தார்.

இப்போது காமாட்சியம்மாள் சொன்னபடி பத்மாவதிக்கும் கோபாலனுக்கும் நடந்த பேச்சுகளிலிருந்து கோபாலனைவிட ராஜாராமன்தான் எல்லா விதத்திலும் சிறந்தவனென்றும் கோபாலன் தனக்கெழுதிய காதல் கடிதம் துளிகூடத் தனக்குப் பிடிக்கவில்லையென்றும் பத்மாவதியே கோபாலனிடம் நேரிற் சொல்லிவிட்டதாகத் தெரிகிறது. அது பத்மாவதி ராஜாராமனைத்தான் காதலிக்கிறாள் என்பதைக் காட்டுகிறது. அதனால் தாம் விரும்பிய சூழ்நிலை தெய்வாதீனமாக உண்டாகிவிட்டதை எண்ணி உள்ளம் பூரித்தார்.

ஆனால் காமாட்சியம்மாளுடைய கவலையைப் போக்குவது எப்படி? பத்மாவதி கோபாலனைத் தவிர வேறு யாரையும் மணந்து கொள்ளக் காமாட்சியம்மாள் சம்மதிக்க மாட்டாள். அண்ணன் வீட்டு உறவு அற்றுப்போவதை அவளால் சகிக்க முடியாது பெண்களுக்குப் பிறந்த வீட்டுப் பாசம் மிகப் பெரியதுதான். அதற்கென்ன செய்வது? பத்மாவதியே கோபாலனைவிட ராஜாராமன் தான் எல்லா விதத்திலும் தனக்குச் சிறந்தவன் என்று சொன்னது மட்டும் அல்லாமல் கோபாலனுடைய காதல் பேச்சு தனக்குத் துளிகூடப் பிடிக்கவில்லை யென்றும் சொல்லி விட்ட பின் அவளைக் கட்டாயப் படுத்திக் கோபாலனை மணந்து கொள்ளச் செய்வது சரியா? அப்படிச் செய்வது அவளுடைய வாழ்வைக் கெடுப்பதாகிவிடும். அதனால் பத்மாவதியின் விருப்பம்போல் அவள் ராஜாராமனையே மணந்துகொள்ளச் செய்வதுதான் சரி. காமாட்சியம்மாள் இப்போது அதை ஒப்புக் கொள்ளாவிட்டாலும் சிறுகச் சிறுக எல்லாம் சரிப்பட்டுப் போகும். என்றெல்லாம் எண்ணி ஜானகிராமன் மனத்தைச் சமாதானப் படுத்திக்கொண்டார்.



ஆதியிலிருந்து ஜானகிராமன் ராஜாராமனைத்தான் மருமகனாக்கிக்கொள்ள விரும்பியவர், இடையில் அந்த எண்ணத்தை விட்டுவிட வேண்டியதாகி விட்டது. இப்போது அந்த விருப்பம் கைகூடிவிடத் தக்க வாய்ப்பு தானாக வந்திருக்கிறது. அதை விட்டுவிட மனம் வருமா? அதனால் அவர் தம்முடைய மனைவி காமாட்சியம்மாள் கேட்டுக்கொண்டபடி பத்மாவதிக்குப் புத்தி சொல்லி அவளுடைய மனத்தை மாற்ற வேண்டுமென்ற முயற்சிகளை மேற்கொள்ளவில்லை.

# 6

பத்மாவதியும் ராஜாராமனும் சுந்தரேசனும் கதை பேசிக்கொண்டிருந்த அறைக்குப் பத்மாவதியைப் பார்க்கக் கோபாலன் வந்தானல்லவா? அப்போது சுந்தரேசனும் பத்மாவதியும் கோபாலனைப் பயங்கொள்ளி என்று பரிகாசம் பண்ணியதையும், பத்மாவதி கோபாலனைவிட ராஜாராமன் எல்லாவிதத்திலும் சிறந்தவன் என்றதையும் கோபாலன் எழுதிய கடிதம் தனக்குத் துளிகூடப் பிடிக்கவில்லையென்று பத்மாவதி கோபாலனிடம் சொன்னதையும் உடனே கோபாலன் கோபித்துக் கொண்டுபோய் விட்டதையும் கண்டபின் ராஜாராமனுக்குப் பத்மாவதியின் மீதிருந்த காதல் உச்சநிலையடைந்து விட்டது. பத்மாவதியே சொல்லுகிற வரையிலும் பொறுத்திருக்க வேண்டுமென்று முன்னே எண்ணிய ராஜாராமன், இப்போது தானே தன் காதலைச் சொல்லிக் கல்யாணத்தை நிச்சயம் செய்துவிட வேண்டுமென்று துடிக்கலானான். அதற்காகப் பத்மாவதியுடன் ஏகாந்தமாகப் பேசக்கூடிய சமயம் வாய்க்காதா என்று பார்த்துக்கொண்டிருந்தான்.

கணவன் சொன்னபடியே காமாட்சியம்மாள் பத்மாவதியிடமோ ராஜாராமனிடமோ எவ்வித அருவருப்பும் காட்டிக்கொள்ளாமல் வழக்கம் போல் அவர்களுடன்

இனிமையாகவே நடந்துகொண்டாள். ஆனாலும் முன்னைவிட அதிகமாக அவர்கள் இருக்குமிடத்துக்கு வருவதும் மறைந்திருந்து அவர்கள் பேசுவதை ஒட்டுக்கேட்பதுமாக இருந்தாள். ராஜாராமன் வருகிறானா என்று பார்த்துக் கொண்டேயிருந்து அவன் வந்தவுடன் அவனை வரவேற்பது போல் அவன் கூடவே போய் அவனும் பத்மாவதியும் பேசுகின்ற இடத்தில் தானும் உட்கார்ந்துகொள்வாள்.

பத்மாவதிக்கோ ராஜாராமனுக்கோ காமாட்சி அம்மாள் தங்களைக் கண்காணித்து வருவதும் தாங்கள் பேசுவதை ஒட்டுக்கேட்பதும் தெரியாது. அவர்கள் எப்போதும் போலவே குதூகலத்துடன் குலவிக்கொண்டிருந்தார்கள்.

பத்மாவதியிடம் தன் காதலைச் சொல்லி, கலியாணத்தை நிச்சயப் படுத்திக்கொள்ளத் துடித்துக் கொண்டிருந்த ராஜாராமன் ஒரு நாள் காலையில் சுந்தரேசன் இல்லாத சமயத்தில், "பத்மா! உன்னுடன் தனியே கொஞ்சம் பேசவேண்டும்" என்றான்.

"கொஞ்சம் என்ன! எவ்வளவு வேண்டுமானாலும் பேசலாம். இப்போதே பேச வேண்டுமானாலும் சரி. இங்கே நாம் இருவர்மட்டுந்தானே இருக்கிறோம். தம்பி சுந்தரேசன் குளிக்கப் போயிருக்கிறான். அவன் வருவதற்கு இன்னும் அரைமணிநேரம் ஆனாலும் ஆகும்" என்றாள் பத்மாவதி.

"இப்போது வேண்டாம். சுந்தரேசன் வர நேரமானாலும் உன் தாயார் வந்துவிடுவார்கள்."

"ஆம், அது உண்மைதான். அப்படியானால் இன்று மாலை நான்கு மணிக்கு மாடியிலுள்ள என் படிப்பறையில் பேசலாம். சுந்தரேசன் பந்தாடப் போய்விடுவான். அம்மாளும் மாடிக்கு வரமாட்டாள்" என்றாள் பத்மாவதி.

"ஆம், அதுதான் சரி" என்றான் ராஜாராமன்.

இந்த சம்பாஷணையை ஒட்டுக் கேட்டுக் கொண்டிருந்த காமாட்சியம்மாள் உடனே வீட்டுக்குள் போய்விட்டாள்.



அந்த வீட்டின் மேல்மாடியில் நான்கு அறைகளும் ஒரு கூடமும் உண்டு. அந்த நான்கு அறைகளில் ஒரு அறை பத்மாவதி படிப்பதற்கென்றே பயன்படுத்தப்பட்டது. அதில் அவளுடைய புத்தகங்கள், ஆடைகள், அலங்காரப் பொருள்கள் முதலிய அவளுடைய உபயோகத்துக்கானவை மட்டுந்தான் இருந்தன. அந்த அறையின் திறவுகோல் எப்போதும் அவளிடத்தில்தான் இருக்கும்.

இந்த அறைக்கு அடுத்த அறை ஒரு உக்கிராணம் போன்றது. தினசரிப் புழக்கத்தில் இல்லாத பல விலை உயர்ந்த பொருள்கள் அடங்கியது. நகைகள், வெள்ளிப்பாத்திரங்கள், பட்டுப் புடவைகள் முதலியவைகள் அடங்கிய பல இரும்புப் பெட்டிகளும் கண்ணாடி பீரோக்களும் உள்ளது. விசேட காலங்களில் மட்டும் உபயோகப்படுத்தப்படும் மிகப் பெரிய ரத்தினக் கம்பள விரிப்புகளும் சுருள் பாய்களும், பட்டு மெத்தைகளும், நவராத்திரி காலத்தில் கொலுவில் வைப்பதற்கான பெரிய பெரிய பொம்மைகளும் அந்த அறையில் இருந்தன.

அந்த அறை பெரும்பாலும் பூட்டியே கிடக்கும். அந்த அறையிலுள்ள பொருள்களின் கணக்கு வழக்கெல்லாம் காமாட்சியம்மாளுடையது. அதன் திறவுகோல் காமாட்சியம்மாளிடம்தான். அந்த அறையிலுள்ள எந்தப் பொருள் யாருக்கு வேண்டுமானாலும் காமாட்சியம்மாளே வந்துதான் அறையைத் திறந்து எடுத்துக் கொடுக்கவேண்டும். அந்த அறையிலுள்ள சாளரங்கள் எல்லாம் எப்போதும் மூடப்பட்டு, அறையைத் திறக்கும்போது அது ஒரு இருட்டறையாகத்தான் இருக்கும். அங்குள்ள எதையும் எடுக்கவேண்டிய அப்போதைக்கு மட்டும் வெளிச்சத்துக்காகச் சாளரங்களிலும் இரண்டொன்று திறக்கப்பட்டுக் காரியம் ஆனவுடன் சாளரங்களை மூடிவிட்டுத்தான் அறை பூட்டப்படும்.

இந்த உக்கிராண அறைக்கும் பத்மாவதியின் படிப்பறைக்கும் இடையில் ஒரே ஒரு சுவர்தான். அந்தச் சுவரில் ஒரு சாளரம் உண்டு. அந்தச் சாளரத்தைத் திறக்க வேண்டுமானாலும் மூடவேண்டுமானாலும் உக்கிராண அறைக்குள் இருந்துதான் செய்ய முடியும். அந்தச் சாளரம் திறந்திருந்தாலும் பத்மாவதியின் படிப்பறையிலிருந்து பார்க்கிறவர்களுக்கு ஒரே இருட்டுத்தான் கண்ணிற்படும். பத்மாவதி படிக்க உபயோகப்படும் மேஜை இந்தச் சாளரத்தின் அருகில்தான் சுவரோடு ஒட்டிக்கொண்டிருந்தது. மேஜையைச் சுற்றி மூன்று பக்கங்களிலும் மூன்று நாற்காலிகள் இருந்தன.

உக்கிராண அறையில் அந்தச் சாளரத்தின் அருகில் நின்றுகொண்டால், சாளரத்தின் கதவுகளைத் திறக்காமலேயே பத்மாவதியின் படிப்பறையில் பேசப்படுவதைத் தெளிவாகக் கேட்க முடியும். சாளரத்தின் நான்கு கதவுகளில் கீழேயுள்ள ஒரு கதவை மட்டும் சிறிது திறந்து வைத்துக்கொண்டால் பத்மாவதி அறையில் உள்ள எதையும் பார்க்கலாம்.

இந்த வசதிகளைப் பயன்படுத்திக்கொண்டு மாலை நான்கு மணிக்குமேல் பத்மாவதியும் ராஜாராமனும் பேசப்போகிறது என்னவென்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்று காமாட்சியம்மாள் தீர்மானித்தாள்.

தான் உக்கிராண அறைக்குள் இருக்கும்போது தன்னைத்தேடி யாரும் அங்கு வந்துவிடாதிருக்கும்படி, தான் மூன்று மணிக்குமேல் அடுத்த தெருவிலுள்ள ஒரு நண்பர் வீட்டுக்குப் போய் வரப்போவதாகவும் யாராவது தன்னைத் தேடினாலும் வெளியே போயிருப்பதாகச் சொல்லும்படியும் வேலைக்காரரிடத்தும் சமையற்காரியிடத்தும் காமாட்சியம்மாள் சொல்லி வைத்தாள்.

மூன்றரை மணிக்கே காமாட்சியம்மாள் யாருக்கும் தெரியாமல் உக்கிராண அறைக்குள் புகுந்து கதவைத் தாழிட்டுக்கொண்டாள். சாளரத்தின் கீழ்க்கதவுகளில் ஒன்றைச் சிறிதளவு திறந்துவைத்து, அது பத்மாவதி அறையிலிருந்து வரக்கூடிய காற்று பட்டு அதிகமாகத் திறந்துகொள்ளாத படியும் முட்டுகள் வைத்துவிட்டுக் காத்துக் கொண்டிருந்தாள்.



குறித்தபடி நான்கு மணிக்குப் பத்மாவதியின் படிப்பறையின் கதவு திறக்கப்படுகிற ஓசை கேட்டது. கலகலத்த சிரிப்போடு பேசிக்கொண்டே பத்மாவதியும் ராஜாராமனும் அறைக்குள் வந்தார்கள். ராஜாராமனை அங்கே இருக்கச் சொல்லிவிட்டு, பத்மாவதி கீழே போய்ச்சிறிது நேரத்தில் சிற்றுண்டிகளும் காப்பியும் கொண்டு வந்தாள். இருவருவம் மேஜைக்கருகிலுள்ள நாற்காலிகளில் அமர்ந்து அருந்தினார்கள்.

அதன் பிறகு அவர்களுடைய கல்லூரியில் நடந்த ஏதோ ஒரு நிகழ்ச்சியைப் பற்றி ராஜாராமன் பேச்செடுத்தான்.

“அது கிடக்கட்டும். நீங்கள் என்னோடு தனியே என்னவோ பேசவேண்டும் என்றீர்களே, அது என்ன?” என்றாள் பத்மாவதி.

ராஜாராமன் பதில் சொல்லாமல் பத்மாவதியைப் பார்த்துச் சிரித்தான். அவளும் சிரித்தாள். அவளும் சிரித்துக் கொண்டே,

“என்ன? அதைச் சொல்லுங்கள்” என்றாள்.

“பத்மா! நான் உன்னோடு தனியே பேச விரும்பக்கூடியது என்னவென்பது உனக்கே தெரியுமே.”

“எனக்குத் தெரியவில்லையே. நீங்கள் சொல்லுங்கள்.”

“உனக்குத் தெரியவில்லையா?”

“தெரியவில்லையே.”

“உனக்குத் தெரியும். ஆனால் கூச்சப்படுகிறாய்.”

“வேறு யாரிடத்தில் நான் கூச்சப்பட்டாலும் உங்களிடத்தில் எனக்குத் துளிகூடக் கூச்சமுண்டாவதில்லை. விஷயம் என்ன? அதைச் சொல்லுங்கள்”

"அதைப்பற்றி நீயே சொல்லுவாய் என்றுதான் எதிர்பார்த்தேன்."

"எதைப்பற்றி?"

"எதைப்பற்றியா? நம் திருமணத்தைப் பற்றித்தான்"

"நம்முடைய திருமணமா! எனக்கு விளங்கவில்லையே!"

"பத்மா! உன் மீது நான் அளவுகடந்த காதல் கொண்டுவிட்டேன். நீயும் என்னைக் காதலிக்கிறாய் என்றுதான் நம்புகிறேன். நீ என்னை மணந்துகொள்ளத் தயவு செய்யவேண்டும்."

"ஐயோ! அண்ணா! நான் உங்களை என் அருமைத்தம்பி சுந்தரேசனுடைய உயிரைக் காத்த தெய்வமென்றல்லவா வணங்கி வருகிறேன்! உங்களிடத்தில் எனக்கு வேறு எந்த விதமான எண்ணமும் உதித்ததில்லையே. எனக்கும் சுந்தரேசனுக்கும் மூத்த சொந்த உடன்பிறப்பாகத்தான் உங்களை நான் கொண்டாடி வருகிறேன். மிகவும் அபூர்வமாகிய உங்கள் அழகும் அறிவும் ஆற்றலும் நற்குணங்களும் நல்லொழுக்கமும் உங்களிடத்தில் எனக்கு ஒரு விதமான தெய்வ பக்தியைத்தான் உண்டாக்கினவேயன்றி வேறு எந்த விதமான எண்ணத்தையும் உண்டாக்கவில்லை. மேலும் நான் ஏற்கனவே என்னுடைய அத்தானுக்கு (கோபாலனுக்கு) வாழ்க்கைப்பட்டு விட்டது போன்ற நிலைமையில் இருக்கிறேன். நானும் என் அத்தானும் குழந்தைப் பருவத்திலிருந்து இந்த வீட்டில் சேர்ந்து விளையாடிக் கொண்டே வளர்ந்தவர்கள். சிறுவயதிலிருந்தே ஒருவரையொருவர் மிகவும் நேசித்து வந்தோம். அந்த நேசம் எங்களுக்குப் பருவம் வந்தபின் காதலாக முதிர்ந்து நாங்களே எங்களுக்குள் திருமண ஒப்பந்தச் சத்தியம் செய்து கொண்டோம். அதற்கு முன்னாலேயே எங்கள் பெற்றோர்கள் எங்களை மணமக்களாக்கப் பேசிக் கொண்டிருந்தார்கள். கடைசியாக எங்களுடைய பெற்றோர்கள் முறைப்படி நிச்சயம் பேசி எங்கள்



பரீட்சைகள் முடிந்ததும் திருமணம் நடத்திவிடத் தீர்மானித்திருக்கிறார்கள். எங்கள் பெற்றோர்களின் தீர்மானம் இல்லாமலும் நானே என் மனமார என் அத்தானை வரித்துவிட்டதால் நான் திருமணம் ஆகிவிட்ட நிலையில்தானே இருக்கிறேன். பெண்களுக்குப் பெருமையெல்லாம் அவர்களுடைய கற்புத்தானே? ஆதலால், அண்ணா! மனமுவந்து என்னை உங்களுடைய தங்கையாக மதித்துக் கருணை புரியுங்கள். என்மீது தங்களுக்கு இப்படிப்பட்ட எண்ணம் உண்டாகும்படி நான் ஏதேனும் தவறு செய்திருந்தால் மன்னித்துவிடுங்கள்." என்று கண்கலங்கிக் கைகூப்பி வணங்கினாள் பத்மாவதி.

தான் எண்ணிக்கொண்டிருந்ததற்கு முற்றிலும் எதிர்மறையான இந்தப் பேச்சைக் கேட்டு ராஜாராமன் தன் தலையில் ஏககாலத்தில் ஆயிரம் இடிகள் விழுந்து விட்டது போலக் கதிகலங்கித் திணறிவிட்டான். உலகமே இருண்டு விட்டதுபோல் இருந்தது. இதயம் வெடித்து விடும்போல் கனத்தது. மூச்சு நின்று விடும்போல் நெஞ்சடைத்தது.

பதில் பேச வாய் வராமல் வெகு நேரம் பத்மாவதியையே வெறிக்க வெறிக்கப் பார்த்துக்கொண்டிருந்தான்.

புத்தி கூர்மையும் மனோதிடமும் நல்லொழுக்கமும் உள்ளவன் ஆனதால் அதிர்ச்சியை சமாளித்துக்கொண்டு விரைவில் நிதானமடைந்து தன்னுடைய நிலைமையை உணரலானான். அதன் பிறகு ஏமாற்ற மடைந்துவிட்ட ஏக்கத்தைவிட அவமானம் அடைந்துவிட்ட உணர்ச்சியே அதிகப்பட்டது. கண்ணீர் துளிக்கக் கைகூப்பி நின்ற பத்மாவதியைப் பார்த்து, "பத்மா! நான் உன்னை மன்னிக்கும்படி ஒரு பிழையும் நீ செய்யவில்லை. அளவிட முடியாத அன்போடு நீ எப்போதும் என்னுடன் பேசிய பேச்சுகளையும் அபரிதமான அக்கறையோடும் ஆர்வத்தோடும் நீ எனக்குப் பிரத்தியேகமாகச் செய்யும் உபசரிப்புகளையும் நான் என்னுடைய ஆசைக்குத் தக்கபடித் தவறான அர்த்தம்

செய்துகொண்டு உன்னை இந்தச் சங்கடத்துக்கு உள்ளாக்கிய பிழை புரிந்துவிட்ட என்னைத்தான் நீ மன்னிக்க வேண்டும்...''

''ஐயோ! அப்படிச் சொல்ல வேண்டாம். பிழையெல்லாம் என்னுடையது. நீங்கள்தான் மன்னிக்க வேண்டும்.''

''இல்லை. இல்லை. நான் சொல்லுவதை நிதானமாகக் கேள். நீ அன்றொரு நாள் உன் அத்தான் கோபாலனுக்கு நிச்சயதார்த்தம் செய்யவென்று வாங்கி வைக்கப்பட்டிருந்த பட்டு வேட்டிகளை எனக்கு மாற்றுடையாகக் கொடுத்தாயல்லவா...''

''ஆமாம். அதை நானாகக் கொடுக்கவில்லை. உங்களுக்கு நல்ல மாற்றுடை வேண்டுமென்று என் அப்பாவிடம் சொன்னபோது அப்பா தான் அந்தப் பட்டு வேட்டிகளை எடுத்துக் கொடுத்து அவற்றை உங்களுக்கே தந்து விடும்படி கட்டளையிட்டார். ஆனால் நீங்கள் அவற்றைத் திருப்பித்தர வந்தபோது அவைகள் யாருடையன என்று நீங்கள் கேட்டதற்கு நான் ஒரு தப்பு...''

''அதெல்லாம் ஒன்றுமில்லை. அவை எதற்காக வாங்கப்பட்டன என்பதை அறிந்தபின்பு, அவற்றை எனக்கே தந்ததற்கு ஒரு காரணம் நானாகவே கற்பித்துக் கொண்டது பிழையல்லவா? அத்துடன் அதற்கு முன்னும் பின்னும் நடந்த பல நிகழ்ச்சிகள் என்னைத் தவறான அர்த்தங்கள் செய்து கொள்ளத் தூண்டி விட்டன. குறிப்பாகக் கோபாலன் கடைசியாக இங்கே வந்தபோது கோபாலனை விட நான் தான் எல்லாவிதத்திலும் சிறந்தவன் என்று நீ சொன்னதையும்...''

''ஏன் அது, என் மனப்பூர்வமாகச் சொன்ன ஒரு உண்மைதான். அன்றைக்கும் இன்றைக்கும் இனி என்றைக்கும் நீங்கள் அவரை விடச் சிறந்தவர் தான் ஆனால்...''

அது சரி. பத்மா! நீ என்னவோ களங்கமில்லாமல் தான் சொன்னாய். ஆனால் அப்போது கோபாலன் அவன் எழுதிய



கடிதத்துக்கு ஏன் பதில் எழுதவில்லை என்று உன்னைக் கேட்டபோது நீ அது உனக்குத் துளிகூடப் பிடிக்கவில்லை யென்று மறுத்துப் பேசினதையும் சேர்த்து...''

''அது எனக்குத் துளிக்கூட பிடிக்கவில்லை என்று நான் எதைக் குறித்துச் சொன்னேன் என்பதையும் இப்போதே சொல்லி விடுகிறேன்...''

''சொல்லு''

''அவர் எங்களுக்குள் வழக்க மில்லாத முறையில் ஒரு காதல் கடிதம் எழுதினார். திடீரென்று அப்படிப் பட்ட கடிதம் ஏன் எழுதினார் என்று எனக்குப் புரியவேயில்லை. அந்தக் கடிதத்தில் மிகவும் கொச்சையானக் காமப் பேச்சுக்களைக் கொட்டியிருந்தார். படிப்பதற்கே வெகு அருவருவப்பாக இருந்தது. அந்தக் கொச்சைப் பேச்சுக்கள் தாம் போகட்டும் என்றாலும் மிகவும் கண்டிக்கத் தகுந்த இன்னொரு விஷயத்தை வற்புறுத்தியிருந்தார். அது என்னவென்றால், எங்கள் திருமணம் உடனே நடந்தாக வேண்டும் என்றும், திருமணத்தை வழக்கப்படி நடத்த எங்கள் பெற்றோர்கள் தாமதப்படுத்தினாலும் உடனே நானும் அவரும் கச்சேரிக்குப் போய்ப் பதிவுத் திருமணம் செய்து விடவேண்டும் என்றும் அதற்கு என்னுடைய சம்மதத்தை உடனே தெரியப்படுத்த வேண்டும் என்றும் எழுதியிருந்தார். எங்களுடைய குழந்தைப் பருவத்திலிருந்து எங்கள் திருமணம் பேசப்பட்டு வந்து, நாங்களும் எங்களுக்குள் காதல் முதிர்ந்து திருமணச் சத்தியம் செய்து கொண்டிருக்கையில் நாங்கள் பெற்றோரையும் மதிக்காமல் கச்சேரிக்குப் போய்ப் பதிவுத் திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்ற பைத்தியக்காரத்தனம் எதற்கு என்று எனக்குக் கடுங் கோபம் உண்டாகிவிட்டது. அன்றைக்கு நான் 'எனக்குத் துளிகூடப் பிடிக்கவில்லை' யென்று சொன்னது இதைத்தான். அப்போது நீங்கள் அங்கே இல்லாதிருந்தால் நான் அவரை இன்னும் கடுமையாகக் கண்டித்திருப்பேன். இதனால் எனக்குண்டாயிருந்த வருத்தத்தைக் காட்டிவிடத்தான்

அவர் வருவதாக என் தாயார் வந்து சொன்னபோது நான் வழக்கம் போல் அவரை எதிர் கொள்ளப் போகவில்லை.''

''பத்மாவதி! நான் சுந்தரேசனைக் கிணற்றிலிருந்து எடுத்துக் காப்பாற்றிய நாளிலிருந்து நீ என்னிடம் பேசிய ஒவ்வொரு சொல்லும் எனக்காகப் பரிந்து பரிந்து நீ செய்த ஒவ்வொரு செயலும் நீயும் என்னைக் காதலிக்கிறாய் என்றே நினைக்கச் செய்து விட்டன; கடைசியாக நீ கோபாலனைக் கடிந்து பேசினதும் அவன் உடனே கோபத்துடன் எழுந்து போனதும் அவன் அப்படிப் போனதை நீ பொருட்படுத்தாமல் இருந்து விட்டதும் என்னுடைய நினைப்புகளை நிச்சயப்படுத்தி விட்டன. அதனால் நான் மதிமயங்கிப் போனேன். இப்போது அந்த மயக்கம் நீங்கிவிட்டது, என் மதியீனத்துக்காக மிகவும் வருந்துகிறேன். மன்மாற என்னை மன்னித்து விடு. இனிமேல் நான் உன்னை என் தங்கை போலவே கருதுவேன்.''

''ஆம். அதுவே என் பிரார்த்தனை. நீங்கள் என்னைத் தங்கையாகக் கருத நான் உங்களைத் தெய்வமாகவே வணங்குவேன்''. என்றாள் பத்மாவதி.

''போதும், பத்மா. இந்தப் பேச்சை இத்தோடு நிறுத்திக் கொள்வோம். வா, கீழே போகலாம்.''

அறையைப் பூட்டிக் கொண்டு இருவரும் போய் விட்டார்கள். மூச்சைப் பிடித்துக்கொண்டு இருட்டறையில் மறைந்திருந்து இந்த சம்பாஷணையைக் கேட்டுக் கொண்டிருந்த காமாட்சியம்மாளுக்கு உண்டான வியப்பையும் மகிழ்ச்சியையும் விரித்துரைக்கவும் முடியுமா?

மூன்று மாதங்களுக்குப் பிறகு ராஜாராமனுடைய அன்னை சரஸ்வதியம்மாளுடைய பெருமுயற்சியால் ராஜாராமனுடைய தந்தைக்கும் சரஸ்வதியம்மாளுடைய தம்பிக்கும் இருந்த மனஸ்தாபங்கள் நீங்கி ராஜாராமனுக்கும் சரஸ்வதியம்மாளின் தம்பி மகள் சீதாலக்ஷ்மிக்கும் திருமணம் நடந்தது.

* * *

# காதல் திருமணம்

''சுதந்தரம் சுதந்தரம்'' என்று மட்டும் எல்லாரும் சொல்லுகிறார்களே ஒழிய அவனவனுடைய சுதந்தரத்தை அவனவனுக்கே விட்டுவிட வேண்டுமென்கிற அறிவுமட்டும் யாருக்கும் இல்லை'' என்று சொல்லிக்கொண்டு பரமசிவன் நாற்காலியில் அமர்ந்தான். எதிரில் மேஜையின் மீதிருந்த மின்சாரக் குத்துவிளக்கின் ஒளிக்கூண்டை உற்றுப்பார்த்துக் கொண்டே வெகுநேரம் உட்கார்ந்திருந்தான். அவனுடைய உடல் அசைவற்றிருந்தாலும் உள்ளம் பொங்கிப் பொருமிக் கொண்டிருந்தது. அவனுடைய எண்ணமெல்லாம் வனஜா என்ற பெண்ணின் வடிவத்தைச் சுற்றிச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருந்தது. தன்னைப்பற்றியும் வனஜாவைப்பற்றியும் தன்னுடைய தாய் தந்தையரைப்பற்றியும் மாறி மாறி நினைத்தான். தன்னைப் பற்றி எண்ணும்போது, தான் பள்ளிக்கூடத்தில் வாங்கின பல பரிசுகளையும் பி.ஏ. பரீட்சையில் முதல் வகுப்பில் தேறிய சிறப்பையும் அந்தப் பரீட்சையில் விஞ்ஞானப் பாடங்களில் வெகு விசேஷ மார்க்குகள் வாங்கி, தான் பெற்ற வெற்றியையும், அதற்காகத் தன்னை அணுசக்தி ஆராய்ச்சிக்காகச் சர்க்கார் தேர்ந்தெடுப்பதாக வந்துள்ள சந்தோஷச் செய்தியையும், நினைத்துப் பெருமிதமடைவான். வனஜாவைப்பற்றி நினைக்கும்போது அவளுடைய அபூர்வ அழகையும் வெகு நவீனமான அவளுடைய உடை, நடை, ஒய்யாரங்களையும் கல்லூரியில் அவளுடன் படிக்கிற காலத்தில் அவள் தன்னிடம் நடந்துகொண்ட நயங்களையும் எண்ணி யெண்ணி இன்புற்று ஏங்குவான். உடனே அவளுக்குக் கடிதம் எழுதவேண்டுமென்று நினைப்பான். அப்படி நினைத்து முடிப்பதற்குள் தன் தாயாரின் பரிதாபமான உருவமும் தந்தையின் பயமுறுத்தும் தோற்றமும் மனத்தில் உதிக்கும். தந்தையின் நினைப்பு வந்த உடனே மற்ற

எல்லாம் மறைந்து மனத்தில் ஒரே எரிச்சலும் புகைச்சலும் நிறைந்து புழுங்குவான். தந்தையின் உருவெளித் தோற்றத்தோடு வாதாடுவதுபோல வாய்க்குள்ளேயே பேசிக்கொண்டான்.

இப்படியாகப் பரமசிவன் குழம்பிக்கொண்டிருக்கும் போது அவன் இன்னும் சாப்பிடவில்லை யென்பதை அறிந்த அவனுடைய தாயார் அலமேலு அம்மாள் அவனைத் தேடிக் கொண்டு அவனிருந்த அறைக்குள் வந்தாள். அன்னை வந்ததை அவன் கவனிக்க முடியவில்லை.

அலமேலு அம்மாள் தன் மகன் உட்கார்ந்திருந்த மாதிரியைப் பார்த்தாள். மெய்மறந்து அவன் முனகிக் கொண்டிருந்த ஓசையைக் கேட்டாள். ''அது முடியாது யார் சொன்னாலும் கேட்கமாட்டேன். இது என்னுடைய சுதந்தர உரிமையைச் சேர்ந்த விஷயம்'' என்று பரமசிவன் கடைசியாகச் சொன்னது அவள் காதில் விழுந்தது.

பரமசிவன் எதைப்பற்றி அவ்வளவு விசாரத்தோடு உட்கார்ந்து கொண்டு பிதற்றுகிறான் என்பது அலமேலு அம்மாளுக்குத் தெரியும். இருந்தாலும் அதைப்பற்றி ஒன்றும் சொல்லாமல் ''மணி பத்துக்குமேல் ஆச்சேயப்பா. நீ இன்னும் சாப்பிடாமலிருக்கிறாயே, வா'' என்றாள் அலமேலு அம்மாள். அதைக் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்த பரமசிவம், ''அம்மா! அது முடியவே முடியாது. யார் சொன்னாலும் நான் கேட்கப் போவதில்லை. இது என் சுதந்தரத்தைச் சேர்ந்த விஷயம். நீங்கள் இதில் தலையிடக்கூடாது'' என்று சொல்லிக்கொண்டே நாற்காலியை விட்டெழுந்து தாயாருக்கு எதிரில் வந்து நின்றான்.

''எது உன் சுதந்தரத்தைச் சேர்ந்தது? உன் சுதந்தரத்தில் யார் என்ன தலையிட்டு விட்டார்கள்?'' என்றாள் அன்னை.

''என் கல்யாண விஷயம் என் இஷ்டத்தைப் பொறுத்தது. அதில் நீங்களும் ஐயாவும் தலையிடுவது சரியல்ல. அது என் சுதந்தரத்தைச் சேர்ந்தது'' என்றான் பரமசிவன்.



''கல்யாண விஷயம் ஒன்றுதானா உன் சுதந்தரத்தைச் சேர்ந்தது? நீ பிறந்தது, வளர்ந்தது, பெரியவன் ஆனது, படித்தது, பாஸ் செய்தது எல்லாம் உன் சுதந்தரத்தைச் சேரவில்லையா?''

''என்னை நீங்கள் பெற்றதற்கும் வளர்த்ததற்கும் இதற்கும் என்னம்மா சம்மந்தம்? எனக்கு இஷ்டமான பெண்ணை நான் கல்யாணம் செய்து கொள்வதும் எனக்கு விருப்பமில்லாத பெண்ணை வேண்டாமென்பதும் என் சுதந்தரத்தைச் சேர்ந்ததல்லவா?''

''ஆமாம், அது உன் சுதந்தரத்தைச் சேர்ந்ததுதான். ஆனால் உன்னுடைய சுதந்தரம் ஒன்றை மட்டும் கவனித்தால் போதுமா? நீ சுதந்தரம் என்று எண்ணிக்கொண்டு செய்கிற காரியம் சரியா தப்பா என்று கவனித்து உனக்கு நன்மை நாடவேண்டிய கடமை எங்கள் சுதந்தரத்தைச் சேர்ந்ததல்லவா?''

''நான் என்ன தப்பு செய்துவிட்டேன்?'' என்று இரைந்தான் பரமசிவம்.

''நீ உன் தகப்பனார் பேச்சைக் கேட்க மறுப்பது தப்பு. அவர் காளியம்மாளை உனக்கே கல்யாணம் செய்து வைப்பதாகச் சரஸ்வதிக்குச் சத்தியம் கொடுத்திருக்கிறார். அதை நீ அவமதிக்கலாமா?''

''அவர் சத்தியம் செய்ததற்கு நானா புனை? இதுதான் கடமையா? இதுதான் சுதந்தரமா? அவர் சத்தியம் செய்து விட்டதற்காக நான் ஒரு காளியம்மாளையும் மூளியம்மாளையும் கல்யாணம் செய்துகொண்டு காலமெல்லாம் கஷ்டப்பட வேண்டுமா? அம்மா, கண்டிப்பாகச் சொல்லுகிறேன், அது முடியவே முடியாது. பேரைப்பார்...... காளியம்மாள் ...... அந்த பேரைக் கேட்டாலே போதும்....''

'பேரில் என்னடாப்பா இருக்கிறது? பெயரைப் போலவே மற்றதெல்லாம் அமைந்துவிடுமா? ராஜா என்ற பெயருள்ள பிச்சைக்காரர்களும் லக்ஷ்மி என்ற பெயருள்ள

மூதேவிகளும் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். காளியம்மாள் மூளியுமல்ல மூக்கரையும் அல்ல. அவளைப் போன்ற அழகும் குணமும் அமைந்த பெண் கிடைப்பது அருமை. அவள் உன் அத்தை மகள் தானே. . . . .'' என்று சொல்லி முடிப்பதற்குள்.

''அம்மா, அத்தை மகள் என்பதற்காகவும் அம்மான் மகள் என்பதற்காகவும் உறவு என்பதற்காகவும் கல்யாணம் செய்து கொள்கிற காலம் மலையேறி விட்டது. இந்த மாதிரிப் பேச்செல்லாம் காசி யாத்திரைக்குக் கட்டை வண்டியில் பயணம் செய்த காலத்தைச் சேர்ந்தது. இந்தக் காலத்துக்கு. . . .''

''ஆமாமாம், எங்கள் காலத்துப் பேச்செல்லாம் காசிக்குக் கட்டை வண்டியில் போகிற மாதிரிதான். இந்தக் காலத்துப் பேச்செல்லாம் ஆகாய விமானத்தில் அந்தரத்துக்குப் போகிற பேச்சுக்கள்தான். அதிலென்ன சந்தேகம்?''

''அம்மா, இந்த விவகாரமெல்லாம் எதற்கு? என் கல்யாணம் என்னுடைய சுதந்தரத்தைச் சேர்ந்தது. எனக்கு இஷ்டமான பெண்ணைத்தான் நான் கல்யாணம் செய்து கொள்வேன். நீங்கள் யாரும் இதில். . . . .''

இந்தச் சமயத்தில் பரமசிவனுடைய தகப்பனார் முத்தையாவும் அவருடைய தங்கையின் கணவன் ஆறுமுகமும் அங்கே வந்தார்கள். அவர்கள் இருவரும் அறைக்குள் வருவதற்கு முன்னாலேயே வெளியே நின்று தாய்க்கும் மகனுக்கும் நடந்த தர்க்கத்தின் பிற்பகுதியைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். முத்தையாவுக்குப் பொறுக்க முடியாத வருத்தம் வந்து வேகமாக அறைக்குள் புகுந்தார். தந்தையைக் கண்டதும் பரமசிவனுடைய பதட்டம் பதுங்கி விட்டது. தாயாருடன் வாதிப்பதுபோல் தந்தையிடம் வாதிப்பது பரமசிவனுக்கு வழக்கமில்லை. தலைகுனிந்து நின்ற மகனைப் பார்த்துப், ''பரமசிவம்! நீ படித்துப் பட்டம் பெற்றவன். இவ்வளவு பொறுப்பற்றவனாகப் போவாயென்று நான் நினைக்கவேயில்லை. என்னமோ 'சுதந்தரம்' 'சுதந்தரம்' என்று



துடிக்கிறாயே! மனம் போன போக்கெல்லாம் போவது தான் சுதந்தரமா? பொறுப்புணர்ச்சி இல்லாத சுதந்தரம் பேசுகிறவன் அடிமைத்தனத்துக்கு அடி கோலுகிறவன். உண்மையான சுதந்தர உணர்ச்சிக்கு ஒரு ஒழுங்குண்டு, கடமைகள் உண்டு, கட்டுப்பாடு உண்டு. இத்தனை நாளும் காளியம்மாளை மணந்துகொள்ளச் சம்மதித்திருந்த நீ திடீரென்று சுதந்தரத்தைக் கண்டு விட்டாய். நான் காளியம்மாளை உனக்கே கல்யாணம் செய்து வைப்பதாகச் சத்தியம் செய்து கொடுத்திருக்கிறேன் என்பதும் நீ அறியாததல்ல. அதை உன்னிடம் பலமுறை சொல்லியிருக்கிறேன்''. . . என்று சொல்லி முடிப்பதற்குள் பரமசிவம் ''நீங்கள் சத்தியம் செய்துவிட்டால். . . .'' என்று முனகி நிறுத்திவிட்டான். அதைக் கேட்ட அவனுடைய தந்தை ''ஆமாம். நான் சத்தியம் செய்துவிட்டால் உனக்கென்ன? என் மானம் போனால் உனக்கென்ன? உன் சுதந்தரந்தான் உனக்கு வேண்டும் அல்லவா?'' என்றார். ''உங்கள் மானம் கெட வேண்டுமென்பதா என் விருப்பம்? அவளை மணந்து கொள்ள எனக்கும் பிரியமிருக்க வேண்டாமா?'' என்றான் பரமசிவன்.

''உனக்கெப்படி இனிமேல் பிரியமிருக்கும்? என் மேலும் உன்னைப் பெற்ற இவள் மேலும் பிரியம் இருக்கிற வரைக்கும் காளியம்மாளை மணந்துகொள்ள உனக்குப் பிரியம் இருந்தது. எங்கள்மேல் உனக்கிருந்த பிரியம் தான் வேறு எங்கேயோ போய்விட்டதே! இனி எப்படி நாங்கள் சொல்லுவதில் பிரியப்படுவாய்?. . . . . சரி, உன்னோடு சண்டையிட்டுக் கொண்டிருப்பது சரியல்ல. நான் சொல்லவேண்டியதைச் சுருக்கமாகச் சொல்லி விடுகிறேன். நீயும் உன் பதிலைச் சுருக்கமாகச் சொல்லி விடு. நான் சாகக்கிடந்த என் தங்கைக்குச் சத்தியம் செய்து கொடுத்து காளியம்மாளை உனக்கே மண முடித்துக் கொள்ளுவதாகச் சொல்லிவிட்டேன். அதற்கு நீயும் இது வரையிலும் சம்மதப்பட்டவன் போல் இருந்தவன். விவாகத்தை நடத்திவிட வேண்டுமென்று இதோ உன் அத்தை புருஷன் அதற்காக வந்து காத்துக்கொண்டிருக்கிறார். நீ என் வாக்கைப் பரிபாலனம் செய்வதானால் சந்தோஷம். இல்லை,

உன் சுதந்தரம்தான் உனக்குப் பெரிதென்றாலும் சொல்லிவிடு. ஆறுமுகம் நாளைக்கே ஊருக்குப் போக வேண்டுமாம். காளியம்மாள் அழகிலோ, அறிவிலோ, படிப்பிலோ, உனக்குக் குறைந்தவளல்ல. அவளைப்பற்றி நீ அறியாததால் இப்படி யெல்லாம் பேசுகின்றாய். நானும் உன் தாயாரும் அவள் பெருமைகளை நன்றாக அறிவோம். நாங்கள் சொல்வதைக் கேள். என் சத்தியமும் நிலைக்கும். உன்னுடைய சற்குணமும் பலிக்கும். என்ன சொல்லுகிறாய்?'' என்றார் முத்தையா.

பரமசிவன் பதில் ஒன்றும் சொல்லாமல் தலைகுனிந்து நின்றான். இதுவரையிலும் பேசாமலிருந்த ஆறுமுகம் தன்னுடைய மைத்துனர் முத்தையாவின் பேச்சுக்குப் பக்கபலமாக ''காளியம்மாள் பரமசிவனிடம் ரொம்பவும் பிரியம் வைத்திருக்கிறாள். அவள் ஏமாந்து போகும்படி செய்துவிடக்கூடாது. காளியம்மாளைக் கல்யாணம் செய்து கொள்ளப் பரமசிவன் சம்மதிக்கவில்லை யென்பதை அனுமானித்துக் கொண்டுதான் இதுவரையிலும் கேட்காதவர்களெல்லாம் இப்போது என்னிடம் பெண் கேட்க வருகிறார்கள். அவர்களுக்குள் நடராஜன் என்கிற எம்.ஏ. பாஸ் செய்த இளைஞன் காளியம்மாளை எப்படியாவது கல்யாணம் செய்துகொள்ள வேண்டுமென்று துடிக்கிறான். அவனும் நமக்குச் சொந்தக்காரப் பையன்தான். எனக்கு என்னமோ பரமசிவனைத் தவிர வேறு யாரையும் எண்ண மனம் வரவில்லை. எப்படியும் இந்தச் சித்திரை மாதத்துக்குள் காளியம்மாளின் திருமணத்தை நடத்திவிட்டு நான் வியாபார விஷயமாக வெளிநாடுகளுக்குப் போகவேண்டும்'' என்றார்.

''கேட்டாயா. பரமசிவம் மாமா சொல்லுவதைச் சிந்தித்துப் பார். உனக்கு ஏற்பட்டுவிட்ட புது மனப்பான்மை நம்முடைய கண்ணியத்துக்கு மிகவும் குறைவானது. உடனே உன் சம்மதத்தைச் சொல்லு. மாமா ஊருக்குப் போய் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யட்டும்'' என்றார் முத்தையா.



பரமசிவன் பதிலே பேசாமல் தலையைக் கவிழ்த்துக் கொண்டு நிலத்தைப் பார்த்துக்கொண்டே நின்றான். அவன் நின்ற நிலையைப் பார்த்து, ஆறுமுகம் சொன்னதை அவன் அனுதாபத்தோடு ஆலோசனை செய்வதாக நினைத்து அப்போதே அவனுடைய சம்மதத்திற்காகக் கசக்கக் கூடாதென்று தீர்மானித்த முத்தையா, ''நன்றாக ஆலோசனை செய்து பார்த்துச் சொல்லு. என்னுடைய சத்தியத்தைக் காப்பதற்கு மட்டுமல்ல. உன்னுடைய நன்மைக்கும் இதுதான் உகந்தது'' என்று சொல்லிவிட்டு அறையை விட்டு அகன்றார். ஆறுமுகமும் அலமேலு அம்மாளும் முத்தையாவைப் பின் தொடர்ந்தார்கள்.

## 2

முத்தையா சென்னையில் ஒரு பிரபல வியாபாரி. பெருத்த சீமான். அவருடன் பிறந்த ஒரே தங்கை மரகதம். வேறு உடன்பிறப்புகளில்லை. மரகதம் வெகு நல்ல குணவதி. கல்வியிலும் கலைகளிலும் சிறு வயதிலேயே மிக்க சிறப்படைந்தவள். முத்தையாவும் மரகதமும் ஒருவருக் கொருவர் மிகவும் அபூர்வமான நேசமுள்ளவர்கள். முத்தையா ஆண்கள் பள்ளிக்கூடத்துக்கும் மரகதம் பெண்கள் பள்ளிக்கூடத்துக்கும் போக வேண்டிய காரணத்துக்காகப் பிரிந்திருக்கிற நேரங்களைத் தவிர மற்ற சமயங்களில் ஒருவரை விட்டு ஒருவரைத் தனியாகப் பார்க்க முடியாது. எங்கே போனாலும் இரண்டு பேரும் சேர்ந்தே போவார்கள். அக்கம் பக்கத்தாரெல்லாம் அவர்களுடைய பரஸ்பர அன்பைக் கண்டு அதிசயப்படுவார்கள். மரகதம் எஸ்.எஸ்.எல்.ஸி. பரீட்சையில் தேறிய சமயத்தில் அவர்களுடைய தந்தை இறந்துபோனார். அத்துடன் அவர்கள் படிப்பும் நின்றுவிட்டது. தந்தை நடத்தி வந்த வியாபாரத்தையும் குடும்பத்தையும் முத்தையா கவனிக்கவேண்டியவனாகிவிட்டதால் பி.ஏ. ஆரம்ப வகுப்பில் படித்துக்கொண்டிருந்த முத்தையாவும் படிப்பை நிறுத்திவிடவேண்டியதாயிற்று. முத்தையாவின் திறமையினால் வியாபாரம் பலமடைந்து செலவும் அதிகரித்தது.

மரகதத்தின் அழகுக்காகவும் குண நலத்துக்காகவும் அவளை மணம் புரிந்துகொள்ளப் பல பேர் ஆசைப்பட்டார்கள். அவர்களிற் சிலர் கோடீஸ்வரர்கள். ஆனாலும் பணத்தைக் கருதாமல் முத்தையா தன்னுடைய பள்ளித் தோழனும் தூர பந்துவுமாகிய ஆறுமுகத்துக்கு மரகதத்தை மணம் செய்துவைக்க விரும்பினான்.

ஆறுமுகமும் மரகதமும் கல்யாணத்துக்கு முன்னால் ஒருவரை யொருவர் காதலித்தவர்களல்ல. ஆறுமுகம் முத்தையாவை நாடிவந்த பல சமயங்களில் ஒருவரையொருவர் பார்க்க நேர்ந்ததைத் தவிர நெருங்கிப் பழகினதும் இல்லை. ஆறுமுகம் அழகான இளைஞன் அல்லாவிட்டாலும் அவலட்சணம் ஒன்றுமில்லாதவன். நற்குணமும் நல்லொழுக்கமும் உள்ளவன். அதை மரகதம் அறிந்திருந்தாள். ஆறுமுகத்தை மணந்துகொள்ள மரகதம் ஆசைப்படுவாளோ மாட்டாளோ என்ற சந்தேகத்தால் முத்தையா தன்னுடைய விருப்பத்தை மரகதத்திடம் நேராகச் சொல்லக் கூசினாள்.

ஒரு நாள் சில உறவினர்களும் நண்பர்களும் ஒரு பணக்கார இளைஞனுக்கு மரகதத்தை மணம் பேச முத்தையா வீட்டுக்கு வந்திருந்தார்கள். அவர்களை உபசரிக்கவேண்டிய முறையில் உபசரித்து மரகதத்தை அவர்கள் குறிப்பிட்ட வாலிபனுக்குக் கொடுப்பதைப்பற்றி ஆலோசனை செய்து பின்னால் சொல்வதாக அவர்களை அனுப்பிவிட்டான். வந்தவர்கள் போன பிற்பாடு அவர்கள் குறிப்பிட்ட மணமகன் மிகவும் முரடன் என்றும் ஒழுக்கமற்றவன் என்றும் அறிய வந்தபோது பல பேச்சுகளுக்கிடையில் முத்தையா, ''இப்படிப்பட்ட பணக்காரப் பதர்களுக்குக் கொடுப்பதைவிட ஆறுமுகத்தைப் போன்ற மிகவும் யோக்கியமான ஒரு ஏழைக்குக் கொடுப்பது மேல்'' என்றான்,

தன்னுடைய கல்யாணத்தைப் பற்றிப் பேசுகிறார்கள் என்பதனால் மறைவிலிருந்து கவனித்துக்கொண்டிருந்த மரகதம் அதைக் கேட்டுத் தன் அண்ணனுடைய விருப்பத்தை அனுமானித்தாள். அதன் பிறகு ஒரு நாள் மரகதம் தானாகவே



தமையனுடன் பேச்சுக் கொடுத்து, குணமில்லாத பணக்காரனைவிடப் பணமில்லாத குணக்காரனே மேல் என்பதே தனக்கும் விருப்பம் என்பதைச் சொல்லி ஆறுமுகத்தை மணந்து கொள்வதில் ஆட்சேபமில்லை யென்பதை அறியப்படுத்தினாள்.

ஆறுமுகத்துக்கும் மரகதத்துக்கும் பெண் வீட்டுச் செலவிலேயே வெகு விமரிசையாக விவாகம் நடந்தது. அதன் பிறகு சுமார் இரண்டு வருஷம் ஆறுமுகம் முத்தையாவுக்கு உதவியாக வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தான். முத்தையாவின் தந்தை மலாயாநாட்டில் பல இடங்களில் வியாபாரத் தொடர்புகள் உள்ளவர். அதற்காகச் சிங்கப்பூரில் ஒரு காரியாலயமும் வைத்திருந்தார். அந்தக் கடை மிகவும் விருத்தியடைந்து அதன் பலனாக மலாயாவில் ஒரு பெரிய ரப்பர் தோட்டத்தை அவர் விலைக்கு வாங்க நேர்ந்தது. அதைக் காரியஸ்தர்களைக் கொண்டு கவனிக்கச் செய்திருந்தார். வருஷம் ஒன்றுக்கு ஐம்பதினாயிரம் ரூபாய்க்குக் குறையாமல் அதிலிருந்து வரும்படி வந்து கொண்டிருந்தது. முத்தையாவின் தந்தை இறந்தபின் அந்த ரப்பர் தோட்டத்தைக் கவனிக்க வென்று இங்கிருந்து அனுப்பப்பட்ட காரியஸ்தன் தோட்ட வருமானத்தைத் துர் விநியோகம் செய்துகொண்டு பொய்க் கணக்குகளை அனுப்பிக் கொண்டிருந்தான். அதனால் சிங்கப்பூர் காரியாலயத்துக்கு ஒரு நல்ல காரியஸ்தரை நியமிக்க வேண்டிய கட்டாயம் நேர்ந்தது. அதற்காக முத்தையா ஆறுமுகத்தைச் சிங்கப்பூருக்கு அனுப்ப விரும்பினான். ஆறுமுகத்துக்கும் அங்கே போகப் பிரியம் இருந்தது. முதல் தடவையில் ஆறுமுகம் சிங்கப்பூர் சென்று அங்குள்ள நிலைமைகளை அறிந்து கொண்டு இருபது நாளில் திரும்பி வந்தார். இரண்டாவது பயணத்தில் இரண்டு மாதம் அங்கே தங்கிவந்தார். சிங்கப்பூர் தனக்கும் மிகவும் பிடித்தமான இடமாக இருப்பதைக் கண்டு அங்கேயே மரகதத்துடன் குடும்பம் நடத்த ஆசை கொண்டார். மரகதத்தைத் தூர தேசத்துக்கு அனுப்ப முத்தையாவுக்கு மனம் வரவில்லை. இருந்தாலும் கணவனை விட்டு அடிக்கடி மாதக் கணக்கில் பிரிந்திருப்பதில் அவளுக்குப் பிரியமில்லாததைக் கண்டு

அவளையும் அனுப்ப வேண்டியதாயிற்று. மேலும் தங்களுடைய குடும்பம் ஒன்று அங்கேயே தங்கி ரப்பர் தோட்டத்தைக் கவனித்தால் மிக நல்ல வருவாய்க்கு இடமிருப்பதை அறிந்த முத்தையா மரகதத்தையும் சிங்கப்பூருக்கு அனுப்பச் சம்மதித்தான். பிறகு ஒரு நல்ல நாளில் முத்தையாவும் ஆறுமுகமும் சிங்கப்பூருக்குச் சென்றார்கள். தங்கைக்கு வேண்டிய வசதிகளையெல்லாம் செய்து கொடுத்து விட்டுப் பத்து நாள் இருந்துவிட்டு முத்தையா சென்னைக்குத் திரும்பி விட்டார். பிறகு அடிக்கடி தங்கையைப் பார்த்துவர முத்தையா சிங்கப்பூருக்குப் போவதுண்டு.

பிறகு முத்தையாவின் திருமணம் நடந்தது. அதற்கு ஆறுமுகமும் மரகதமும் வந்து போனார்கள். அடுத்த வருஷம் முத்தையாவின் முதற் குழந்தை பரமசிவன் பிறந்தான். அதற்கும் மரகதம் கணவனுடன் வந்து போனாள். அதற்குப் பின் இரண்டு ஆண்டுகள் சென்றபின் மரகதம் கர்ப்பிணியானாள். பிரவசத்துக்கு அவளைச் சென்னைக்கு அழைத்துவர ஏற்பாடாகியிருந்தது. புறப்படுவதற்குக் குறித்திருந்த நாளில் மரகதம் மிகவும் அசௌக்யம் அடைந்து விட்டபடியால் சிங்கப்பூரிலேயே தங்கிவிட நேர்ந்தது. அங்கே காளியம்மாள் பிறந்தாள்; ஆறுமுகத்தின் குடும்பத்தாருக்குக் காளி குலதெய்வம். அதனால் ஆறுமுகம் அந்தப் பெயரைத் தன் மகளுக்குச் சூட்டினார்.

காளியம்மாளைப் பெற்றதிலிருந்து மரகதத்தின் உடல் நலம் மிகவும் ஊனமடைந்தது. அடிக்கடி அபாயமான நிலைமை ஏற்பட்டு முத்தையாவும் அடிக்கடி சிங்கப்பூருக்கு வந்து தங்க வேண்டியதாயிற்று. முத்தையா மரகதத்தைச் சென்னைக்குக் கொண்டு வந்து சிகிச்சை செய்ய விரும்பினார். ஆனால் சிங்கப்பூர் டாக்டர் பிரயாணத்துக்கு அனுமதியளிக்க மறுத்துவிட்டார். கொஞ்சங் கொஞ்சமாக வியாதி அதிகப்பட்டுச் சுமார் ஒன்றரை வருஷ காலம் மரகதம் படுத்த படுக்கையாகவே கிடந்தாள். முத்தையாவும் பிரயாணத்துக்குத் தகுதியாகும்படி கொஞ்சம் சௌக்கியமானவுடன்



சென்னைக்குக் கூட்டிக் கொண்டு வந்துவிடலா மென்று காத்துக் கொண்டிருந்தார். பயனில்லாமற் போய்விட்டது.

இனி தான் பிழைக்க முடியாதென்று உணர்ந்து விட்ட மரகதம் தன் படுக்கையின் அருகிலேயே அமர்ந்திருந்த அண்ணன் முத்தையாவின் கரங்களைப் பிடித்துத் தன் மடி மீது வைத்துக் கொண்டு,மெல்லிய குரலில், ''அண்ணா! நான் இனி பிழைக்க மாட்டேன். உங்களை விட்டுப் பிரிந்து போக முடியாமல் என் உயிர் தவிக்கிறது. நான் கொடுத்து வைத்தது இவ்வளவு தான்; நீங்கள் எனக்கு ஒரு வரம் தரவேண்டும். என்னை ஆதரித்தது போலவே என் கணவரையும் குழந்தையையும் ஆதரித்து என் மகளை உங்கள் மகன் பரமசிவனுக்கே மணம் செய்து கொள்ள வேண்டும்'' என்றாள். முத்தையாவுக்கு அடக்க முடியாத துக்கம் வந்து தேம்பித் தேம்பி அழுதுவிட்டுத் தன்னுடைய முகத்தை தங்கையின் முகத்தோடு அணைத்து ''மரகதம்! நீ பிழைத்துக் கொள்வாய். பயப்படவேண்டாம். காளியம்மாளைப் பரமசிவனுக்கே கல்யாணம் செய்து வைப்போம். இது சத்தியம்'' என்றார். ஆறுமுகம் பக்கத்தில் அழுது கொண்டே நின்றார்.

அதற்குப் பின் ஏழுநாள் மரகதம் உயிரோடிருந்தாள். குணமாகிவிடும்போல் சில குறிகள் தோன்றிப் பின் திடீரென்று மாறி மரகதம் மாண்டு போனாள். இது நடந்தது சுமார் பதினெட்டு ஆண்டுகளுக்கு முன்னால்.

மனைவி இறந்துபோன வருத்தத்தில் ஆறுமுகம் வெகு நாள் அவதிப்பட்டார். பிறகு சிறுகச் சிறுக மனந்தேறி மனைவியின் ஞாபகார்த்தமாகச் சிங்கப்பூரில் ஒரு கல்வி நிலையம் கட்டி அதில் மரகதத்தின் சிலை ஒன்றை வைத்து, தான் மறுமணம் செய்துகொள்வதில்லை யென்று விரதம் பூண்டு, காளியம்மாளின் நலமும் கல்வி நிலையத்தின் வளர்ச்சியுமே கண்ணும் கருத்துமாகச் சிங்கப்பூரிலேயே தங்கிவிட்டார். முத்தையா பலமுறை அழைத்தும் அவர் சென்னைக்கு வரவில்லை.

பரமசிவனுக்கு இதெல்லாம் தெரியும். அவனுடைய சிறு பிராயத்திலிருந்தே சிங்கப்பூரில் தன் அத்தை மகள் வளர்ந்து வருவதும் அவளைத் தனக்கு மணமுடிக்கத் தன் பெற்றோர்கள் பிரியப்படுவதும், அடிக்கடி காதில் விழுந்து வந்த விஷயங்கள்தாம். அவன் பி.ஏ. வகுப்புக்கு வருகிற வரைக்கும் கல்யாணப் பேச்சு வெறும் வேடிக்கைப் பேச்சாக இருந்தது. அதன் பிறகு கல்யாணத்தின் உண்மையான உணர்ச்சிகள் அவனுக்கு உதித்தன. பருவத்துக்கு இயல்பான பற்றுகள் தோன்றி அந்தக் களிப்பினால் காளியம்மாளைத் தான் கல்யாணம் செய்து கொள்வதாகவே கருதி ஒரு காதல் கடிதமும் எழுதிவிட்டான். அப்போது காளியம்மாளும் 'இன்டர்' வகுப்புக்குச் சமதையான வகுப்பில் ஒரு ஆங்கிலேய மிஷன் பள்ளிக்கூடத்தில் படித்துக் கொண்டிருந்தாள். காளியம்மாளும் பரமசிவனுக்குப் பதில் எழுத விரும்பினாள். ஆனால் அவள் ஒரு 'கான்வென்ட்' பள்ளிக்கூடத்தில் படித்துக் கொண்டிருந்ததால் அங்குள்ள மாணவிகள் 'ஹாஸ்டல்' அதிகாரியின் அனுமதியில்லாமல் யாருக்கும் கடிதம் எழுதக்கூடாது. அதுவும் ஆண்பிள்ளைகளுக்கு எழுதுவதில் வெகு கண்டிப்பான கண்காணிப்பு. அப்படியிருக்க அவளெப்படி காதல் கடிதம் எழுத முடியும்? அதனால் அவள் பதில் எழுதவில்லை.

பரமசிவன் பி.ஏ. வகுப்பில் சேர்ந்தபோது வனஜா என்னும் ஒரு பெண்ணும் அதே வகுப்பில் இருந்தாள். அந்தப் பெண் சீமைக்குப் போய்ப் படித்து பட்டம் பெற்ற ஒரு 'பார் - அட் - லா' வின் மகள். நவநாகரிக நடையுடைகளில் கண்ணைக் கவரும் கட்டழகுள்ளவள் அவள். சிறு வயதிலிருந்து 'டென்னிஸ்' பந்தாட்டத்தில் தேர்ந்தவள். பரமசிவனும் 'டென்னிஸ்' விளையாட்டில் மிக்க பாசமுள்ளவன். கல்லூரியைச் சேர்ந்த 'டென்னிஸ் கிளப்'பில் இருவரும் அங்கத்தினர்கள். அடிக்கடி எதிரெதிராகவும் ஒரே கட்சியிலும் பந்தாடுவார்கள். இரண்டு பேரும் நல்ல பந்தாட்டத் திறமையுள்ளவர்களானதால் ஒருவருடைய ஆட்டத்தை ஒருவர் மெச்சி அதனால் பரிச்சயம் அதிகப்பட்டு வந்தது. அகில



இந்திய டென்னிஸ் பந்தய ஆட்டத்தில் வனஜாவும் பரமசிவனும் ஒரு கட்சியிலும் ஒரு ஆங்கிலேய வாலிபனும் ஒரு வங்காளிப் பெண்ணும் இன்னொரு கட்சியிலும் ஆடின ஆட்டத்தில் பரமசிவனும் வனஜாவும் வெகு நன்றாக விளையாடி வெற்றிபெற்றார்கள். அந்த ஆட்டத்தை லக்ஷக்கணக்கான ஜனங்கள் வேடிக்கை பார்த்து இவர்களுடைய வெற்றியைப் பாராட்டினார்கள். பத்திரிகைகளிலும் இவர்கள் ஆடின ஆட்டம் மிகவும் புகழ்ந்தெழுதப்பட்டது. அது முதல் வனஜாவும் பரமசிவனும் முன்னிலும் அதிகமாக நெருங்கிப் பழகினார்கள்.

அந்தப் பழக்கம் பரமசிவனுடைய பருவ உணர்ச்சிகளைக் கிண்டிவிட அவன் வனஜாவின் மேல் தனக்குக் காதல் பிறந்துவிட்டதாகக் கருதலானான். தெருவில் போகும்போதும், தேர் திருவிழாக் கூட்டங்களிலும், ரயில் வண்டி நெருக்கடியிலும் அகஸ்மாத்தாகச் சந்திக்கிறதை யெல்லாம் 'கண்டதும் காதல்' என்று கதைகள் பரப்புகின்ற இந்தக் காலத்தில் பரமசிவன் வனஜாவிடம் அவ்வளவு நெருங்கிப் பழக நேரிட்ட காரணத்தால் அவள் அவனிடம் காதல் கொண்டுவிட்டது சகஜம்தான். தான் அவளைக் காதலிப்பதாகத் தீர்மானம் செய்து கொண்டதனால் வனஜா வழக்கமாக அவனிடம் காட்டி வந்த அன்பினால் பேசுகின்ற ஒவ்வொரு இன்சொல்லையும் ஒவ்வொரு புன்சிரிப்பையும் அவளும் தன்னிடத்தில் காதல் கொண்டு விட்டதால் நடக்கிற காரியங்களாகவே கருதலானான். ஆண்மக்களின் காமக்குறும்பின் சுபாவமே அதுதான். தன் காதலை வெளியிட்டுத் தன்னைக் கல்யாணம் செய்து கொள்ளும்படி வனஜாவைக் கேட்டுவிடத் தகுந்த வாய்ப்புக் கிடைக்கவேண்டு மென்று பரமசிவன் துடித்துக் கொண்டிருந்தான். அந்தச் சமயத்தில்தான் ஆறுமுகம் காளியம்மாளுடைய கல்யாணத்தை விரைவில் நடத்திவிட்டுத் தானும் மகளும் சென்னைக்கே வந்துவிட வேண்டுமென்ற கருத்துடன் முத்தையாவை நாடினது.

முன் அத்தியாயத்தில் சொல்லப்பட்ட சம்பாஷணைக்குப் பின் பரமசிவன் காளியம்மாளை மணந்து கொள்ளச் சம்மதித்து விடுவான் என்றே முத்தையாவும் அலமேலுவும் ஆறுமுகமும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் மறுநாள் காலையில் பரமசிவன் தன் தந்தைக்கு ஒரு வணக்கமான கடிதம் எழுதி அதில் காளியம்மாளின் மேல் தனக்குக் காதல் பிறக்கவில்லை யென்று தெரிவித்துவிட்டான். அதைப் பார்த்து முத்தையாவுக்கு அடக்க முடியாத கோபம் வந்துவிட்டது. அலமேலு அம்மாள் அழத் தொடங்கி விட்டாள். ஆறுமுகம் வெகு வருத்தத்துடன் விடைபெற்றுக் கொண்டு தன் மகளை நடராஜனுக்கே கொடுத்துவிடப் போவதாக முத்தையாவின் சம்மதத்தையும் பெற்றுக்கொண்டு சிங்கப்பூருக்குப் புறப்பட்டு விட்டார்.

## 3

வனஜாவிடம் தன் காதலைச் சொல்லிக் கல்யாணத்தைப் பற்றிப் பேசப் பரமசிவனுக்குச் சரியான சந்தர்ப்பம் வாய்க்காமல் தவித்துக்கொண்டிருந்தான். வனஜாவுடன் எப்போதும் யாராவது இருந்துகொண்டே இருந்தார்கள். 'டென்னிஸ்' ஆடுவதற்காக அவளைக் கூட்டிக்கொண்டு கிளப்புக்குப் போக அடிக்கடி பரமசிவம் வனஜாவின் வீட்டுக்குப் போவான். அகில இந்திய 'டென்னிஸ்' பந்தயத்தில் வனஜாவும் பரமசிவனும் ஆடிய வெகு திறமை வாய்ந்த ஆட்டத்தை வனஜாவின் பெற்றோர்களும் பார்த்து மகிழ்ந்து பெருமை யடைந்தார்கள். அது முதல் வனஜாவின் வீட்டில் பரமசிவனுக்கு மிக்க மதிப்புண்டு. அடிக்கடி அங்கே போவான். பலநாள் அங்கேயே சாப்பாடும் சிற்றுண்டியும் உண்பான். வனஜாவே பரிமாறுவாள். வனஜாவுக்கு நான்கு சகோதரர்களும் மூன்று சகோதரிகளும் உண்டு. அவர்களில்



சிலராவது எப்போதும் வனஜாவுடன் இருப்பார்கள். வனஜாவின் தாயாரும் பரமசிவனுடன் உட்கார்ந்துகொண்டு பேசிக்கொண்டு இருப்பாள். அதனால் அங்கே அவனுக்கு வனஜாவுடன் தன் காதலைப் பேச ஏகாந்தம் கிடைப்பதில்லை. டென்னிஸ் கிளப்புக்குப் போகும்போதும் வனஜாவுடன் அவளுடைய தந்தையோ, தாயாரோ, தமையனோ, தம்பியோ யாராவது கூடவே வருவார்கள். அதனால் அந்த சமயங்களிலும் அவளோடு தனித்துப் பேசச் சந்தர்ப்பம் கிடைப்பதில்லை. ஆனாலும் பரமசிவனிடத்தில் வனஜாவுக்கிருந்த மதிப்பும் மரியாதையும் நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டே வந்தது. அதனால் பரமசிவன் மனதிலுண்டான 'காதல்' பித்தும் வளர்ந்துகொண்டே வந்தது. அதனால் பரமசிவன் மனத்திலுண்டான 'காதல்' பித்தும் வளர்ந்து கொண்டே வந்தது.

அவர்கள் இருவரும் ஒரே வருஷத்தில் பி.ஏ. பாஸ் செய்து விட்டதால் இருவரும் வனஜாவின் தந்தையும் தாயும் அங்கத்தினர்களாக இருந்த 'சிடி கிளப்பில்' 'டென்னிஸ்' ஆட்டத்திற்காகச் சேர்ந்தார்கள். அந்த கிளப்பில் பிரபலமான 'டென்னிஸ் சாம்பியன்கள்' வந்து ஆடுவது வழக்கம். அந்தக் கழகத்தில் ஹேமாவதி என்ற ஒரு பெரிய பணக்காரர் வீட்டுப் பெண் புது அங்கத்தினராகச் சேர்ந்தாள். செல்வச் சிறப்பினால் அவள் 'சிடி கிளப்' அங்கத்தினர்களுக் கெல்லாம் ஒரு விமரிசையான விருந்தளித்தாள். அந்த விருந்து நாளில் நல்ல ஆட்டக் காரர்கள் 'டென்னிஸ்' ஆடிக் காட்சியளிக்க ஏற்பாடாயிற்று. அதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜோடிகளில் வனஜாவும் பரமசிவனும் ஒரு ஜோடி

பந்தாட்டத்துக்கு முன்னால் விருந்து நடந்தது. விருந்து ஆரம்பிப்பதற்கு வெகு நேரத்துக்கு முன்னாலேயே வனஜாவும் அவளுடைய பெற்றோர்களும், சகோதர சகோதரிகளும் பரமசிவமும் கழகத்துக்கு வந்து விட்டார்கள். விருந்து ஆரம்பிக்க ஐந்து நிமிஷம் இருக்கும்போது ஹேமாவதி ஒரு அழகான மோட்டாரில் வந்து இறங்கினாள். அவளுடன் ஒரு தோழியும் வேலைக்காரனும் மட்டும் இருந்தார்கள். வேறு

ஆடவர்கள் யாருமில்லை. கழகத்தின் காரியதரிசி ஹேமாவதியை வரவேற்று அங்கிருந்த முக்கியஸ்தர்களை அவளுக்கு அறிமுகப்படுத்தினர். அந்த முறையில் வனஜாவும் பரமசிவனும் அறிமுகப்படுத்தப்பட்டார்கள். 'வனஜா - பரமசிவன்' என்ற இரண்டு பேர்களையும் சொன்ன உடனேயே ஹேமாவதி, ''ஓ! இவர்கள் தானே மாணவர்களின் அகில இந்திய 'டென்னிஸ் டூர்ணமெண்டில்' டிக்சனையும் பிரபாவையும் 'டபிள்சில்' தோற்கடித்தவர்கள்?'' என்றாள். அதைக் கேட்டு அங்கிருந்த எல்லாரும் ஹேமாவதியின் விஷய ஞானத்தை வியந்தார்கள். பரமசிவம் பரவசமடைந்து விட்டான். வனஜா புன்னகை புரிந்தாள்.

விருந்து நடந்தது. ஹேமாவதி தானும் விருந்துண்ண உட்காராமல் நாலாபக்கமும் சென்று விருந்தினரின் தேவைகளைக் கவனித்துக் கொண்டிருந்தாள். ஹேமாவதி இருபது வயதுக்கும் குறைவான தோற்றமுள்ள இளமங்கை. அவள் அங்குமிங்கும் நடந்து போனது காற்றில் அசைந்தாடும் பூங்கொடி போல் காணப்பட்டது. அவளுடைய உடை மிகவும் புதுமையான நாகரீகத் தோற்றமளித்தது. தமிழ், இங்கிலீஷ், ஹிந்துஸ்தானி மூன்று பாஷைகளிலும் வெகு சரளமாகப் பேசினாள். பரமசிவம் விருந்தை மறந்தவன்போல அவளையே திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டிருந்தான். அப்போது அவன் பக்கத்தில் வனஜா இல்லை. அவள் தன்னுடைய பெற்றோருடன் வேறு இடத்தில் விருந்துண்டு கொண்டிருந்தாள்.

விருந்து முடிந்து 'டென்னிஸ்' பந்தாட்டம் ஆரம்பமாயிற்று. முதல் 'செட்'டில் வனஜாவும் பரமசிவனும் ஒரு பக்கமும் வேறு இரண்டு பேர்கள் இன்னொரு பக்கமுமாக ஆடினார்கள். வழக்கம் போல் பரமசிவனும் வனஜாவும் வெகு நன்றாக ஆடினார்கள். பரமசிவனுடைய 'கட்'டுகளும் 'ட்ரைவ்'களும் அன்றைக்கு வெகு அருமையாக அமைந்தன.

அவனும் வனஜாவும் கையாண்ட திறமைகளை அப்போதைக்கப்போது 'பலே,' 'வெரிகுட்,' 'ப்யூட்டிபுல்' என்ற



வார்த்தைகளுடன் ஹேமாவதி பாராட்டிக் கொண்டேயிருந்தாள். எதிர்பார்த்தபடியே பரமசிவனும் வனஜாவும் வெற்றி பெற்றார்கள். ஹேமாவதி பரமசிவனையும் - வனஜாவையும் மிகவும் புகழ்ந்து ''உங்கள் ஆட்டத்தைப் பார்க்க வேண்டுமென்றுதான் இந்த விருந்தே ஏற்பாடானது போல் இருக்கிறது'' என்றாள்.

பந்தாட்டங்கள் முடிந்து, விருந்தினர்கள் கலைந்தார்கள். வனஜா தன்னுடைய குடும்பத்தாருடன் போய்விட்டாள். ஹேமாவதி விருந்துச் செலவின் கணக்குகளைத் தீர்க்க, காரியதரிசியுடன் பேசக் கட்டடத்துக்குள் போனாள். போகும் போது மரியாதைக்காகப் பரமசிவனிடம் ''கொஞ்சம் காரியதரிசியுடன் பேசிவிட்டு வருகிறேன்'' என்று விடை பெற்றுக்கொண்டாள். அவள் உள்ளே போன பிற்பாடு பரமசிவன் அவள் தன்னை இருக்கச் சொன்னது போல் எண்ணிக்கொண்டு அங்கேயே உட்கார்ந்து அவளுக்காகக் காத்திருந்தான். காரியதரிசியோடு பேச வேண்டியதை முடித்துக்கொண்டு திரும்பி வந்த ஹேமாவதி பரமசிவன் இன்னும் அங்கேயே இருப்பதைக் கண்டு ''ஓ! இன்னும் இங்கேதான் இருக்கிறீர்களா? மன்னிக்க வேண்டும். தங்களைக் காக்க வைத்துவிட்டேன்.'' என்று சொல்லிக்கொண்டே சற்று அருகில் இருந்த ஒரு நாற்காலியில் அமர்ந்தாள்.

''மன்னிக்க வேண்டியது ஒன்றுமில்லை. அப்படி ஒன்றும் அதிக நேரம் நான் காத்துவிடவில்லை'' என்றான் பரமசிவன்.

''ரொம்பவும் சந்தோஷம். எனக்கு 'டென்னிஸ்' விளையாட்டில் வெகு பைத்தியம். உங்களுடைய 'ஸ்டைல்' அழகான 'ஸ்டைல்'' என்றாள் ஹேமாவதி.

''நீங்கள் 'டென்னிஸ்' ஆடுவீர்களா?'' என்றான் பரமசிவன்.

''கொஞ்சம் ஆடுவேன். ஆனால் உங்களுடைய திறமை எனக்கெல்லாம் வருமா?'' என்றாள்.

"ஏன் வராது? என்னைவிடக்கூட நன்றாக நீங்கள் ஆடலாம். சரியானபடி பழகினால் வராமற் போகுமா?" என்றான்.

"எனக்குக் கொஞ்சம் சொல்லிக் கொடுக்கிறீர்களா? உங்களுடைய 'ட்ரைவிங்' மாதிரி நான் பார்த்ததேயில்லை" என்றாள்.

"அதற்கென்ன தடை? உங்களுக்குப் பயிற்சி கொடுப்பதைப் பெரும் பாக்கியமாகக் கருதுவேன். காலை நேரங்களில் இங்கே கூட்டமிருக்காது. பயிற்சி பெறுவதற்கு அதுதான் ஏற்ற காலம். தினந்தினம் காலையில் வர அவகாச முண்டானால் பயிற்சி கொடுக்க நான் காத்திருக்கிறேன்." என்றான் பரமசிவன். "ரொம்ப வந்தனம், எனக்குக் காலையோ மாலையோ எப்போதும் அவகாசந்தான். காலையில் வருவதில் கஷ்டமொன்றுமில்லை. அப்படியே வருகிறேன். எனக்குப் பயிற்சி கொடுங்கள். மே மாதத்தில் ஆரம்பிக்கப் போகிற மாகாண 'டூர்ணமெண்ட்' டில் ஆட வேண்டுமென்பது என் ஆசை" என்றாள். "ஓ! அதற்குள் நீங்கள் வெகு நல்ல பயிற்சி பெற்று விடலாம். இன்னும் நான்கு மாதங்கள் அவகாசமிருக்கிறதே!"

"அப்படியானால் நாளைக் காலையிலிருந்தே ஆரம்பிக்கலாமா!" எனறாள் ஹேமாவதி.

உடனே ஒத்துக்கொண்டான் பரமசிவன். ஹேமாவதி கழகத்தின் காரியதரிசியைக் கூப்பிடச் செய்து அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யும்படி கேட்டுக்கொண்டாள். மறுநாள் காலை ஆறு மணிக்கு அங்கே வந்து விடுவதாகச் சொல்லிவிட்டு ஹேமாவதி விடைபெற்றுக் கொண்டாள்.

மறுநாள் ஐந்தரை மணிக்கே பரமசிவன் பந்தாடும் இடத்துக்குப் போய்விட்டான் ஹேமாவதியும் வந்தாள். இருவரும் எதிரெதிராக ஒரு 'செட்' ஆடினார்கள். ஹேமாவதியின் ஆட்டம் வெகு பாடுபட்டுப் பயிற்சி செய்தால்தான் டூர்ணமெண்டில் சேருவதற்கே தகுதியாகலாம்,



என்பதைப் பரமசிவன் அறிந்தான். இருந்தாலும் அதைச் சொல்லி உத்ஸாகத்தைக் கெடுத்துவிடக் கூடாதென்று அவளுடைய ஆட்டத்தை மெச்சிப் பேசினான். இப்படி தினந்தினம் அவர்களிருவரும் அங்கே வந்து பந்தாடிவிட்டு அங்கேயே காலை ஆகாரம் அருந்திவிட்டுப் பிரிவார்கள். இப்படிப் பத்து நாள் பழகுவதற்குள் அவர்கள் ஒருவரை யொருவர் மிகவும் நேசிக்க ஆரம்பித்துவிட்டார்கள். ஹேமாவதியின் வெகு உல்லாசமான சுபாவமும் உத்ஸாகமான பேச்சுகளும் மிகவும் நூதனமான அவளுடைய உடையலங்காரமும் பரமசிவனைப் பைத்தியக்காரனாக்கி விட்டன. வனஜாவின் சகவாசத்தைக் காட்டிலும் ஹேமாவதியின் உறவு அதிக இன்பமாகத் தோன்றி விட்டது. கொஞ்சங் கொஞ்சமாகப் பரமசிவனுக்கு வனஜாவின்மேல் இருந்த 'காதல்' கலகலத்துவிட்டது.

ஹேமாவதிக்குப் பரமசிவன் பந்தாட்டப் பயிற்சி தொடங்கிய பதினோராவது நாள் பரமசிவனை ஹேமாவதி தன்னுடைய பங்களாவுக்கு விருந்துக்கு அழைத்தாள். சொந்த அறிவுகளையும் சுதந்தர உணர்ச்சிகளையும் முற்றிலும் இழந்துவிட்ட பரமசிவன் ஹேமாவதி எதைச் சொன்னாலும் இன்பமாகச் செய்யக் காத்திருந்தான். காலையில் பந்தாட்டம் முடிந்தவுடன் இருவரும் ஹேமாவதியின் மோட்டார் காரிலேயே அடையாற்றுக்கு அருகிலிருந்த அவளுடைய பங்களாவுக்குப் போனார்கள். அந்தப் பங்களாவும் அதிலிருந்த அலங்காரப் பொருள்களும் ஹேமாவதி மிக்க பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்தவள் என்பதைத் தெரிவித்தன. அந்த வீட்டின் முகப்பில் ஒரு வயதான பெரியவர் மட்டும் உட்கார்ந்திருந்தார். சமையற்காரர்களும், பணிப் பெண்களும்தான் காணப்பட்டார்கள். ஹேமாவதியின் தந்தையோ, தாயோ உடன் பிறப்போ யாருமில்லை. மாடியிலுள்ள ஒரு வெகு அலங்காரமான அறைக்குப் பரமசிவனை ஹேமாவதி அழைத்துக்கொண்டு போய் அங்குள்ள தன்னுடைய புத்தக பீரோக்களைக் காட்டி அவற்றின் பூட்டுகளையும் தானே திறந்துவிட்டு அவற்றிலுள்ள

புத்தகங்களைப் பார்த்துக்கொண்டிருக்கச் செய்துவிட்டுத் தன் உடைகளை மாற்றிக்கொண்டு வரக் கீழே போய்விட்டாள்.

பரமசிவன் சில புத்தகங்களை எடுத்து ஏடுகளைப் புரட்டினான். அவன் மனம் புத்தகங்களில் படியவில்லை. அங்குள்ள ஒரு சோபாவில் உட்கார்ந்தான். அந்த அறையை நாற்புறமும் பார்த்து அங்குள்ள ஏகாந்தத்தை வியந்து சோபாவில் சாய்ந்து என்னென்னவோ எண்ணிக் கொண்டிருந்தான். பரமசிவன் கண்டவர் விரும்பத்தகுந்த கட்டுமஸ்தான உடலமைப்புள்ளவன். இனிய முகமும் இன்சொல்லும் உடையவன். வனஜாவிடம் கொண்ட ஆசையினால் வந்த அலுப்புகளும் காளியம்மாளை மணந்து கொள்ள மறுத்ததினால் பெற்றோர்களிடத்தில் ஏற்பட்ட மனஸ்தாபம் அவனுடைய உள்ளத்தை உறுத்திக் கொண்டிருந்தன. ஹேமாவதியின் நட்பு அவைகளுக்கு ஒரு ஆறுதல் போல இன்பமளித்தது. அந்த எண்ணத்தோடு அப்படியே கண்ணயர்ந்து போனான். மீண்டும் மாடிக்கு வந்த ஹேமாவதி அவன் உறங்குவதைப் பார்த்துவிட்டுப் போய்விட்டாள். பனிரண்டு மணி வரையிலும் தூங்கிப் பின் பரமசிவன் விழித்தெழுந்து உட்கார்ந்தான். சிறிது நேரத்தில் ஒரு வேலைக்காரன் வந்து எட்டிப் பார்த்து விட்டுப் போய்விட்டான். பிறகு ஹேமாவதி வந்து ஸ்நானத்துக்கு அழைத்தாள்.

குளித்துவிட்டு ஹேமாவதியுடன் மேஜையின் மீது பரிமாறப்பட்டிருந்த விருந்துண்டான். சாப்பாடு மிகவும் உயர்ந்த ரகமாக இருந்தது. உணவருந்தியபின் ஹேமாவதி பரமசிவனைப் பார்த்து ''கொஞ்சம் படுத்து ஓய்வு கொள்ளுங்கள். சாயந்திரம் நாமிருவரும் கிளப்புக்குப் போவோம். அங்கிருந்து தாங்கள் வீட்டுக்குப் போய் விடலாம்'' என்றாள். பரமசிவன் சம்மதித்தான். மேல் மாடியிலேயே வேறொரு அறையில் ஒரு அழகான கட்டிலின் மேல் அவனுக்குப் படுக்கை தயார் செய்யப்பட்டிருந்தது. மாலை நான்கு மணி வரையிலும் பரமசிவன் பலவித பகற் கனவுகள் கண்டுகொண்டு தூங்கியும் தூங்காமலும் படுத்திருந்தான்.



ஹேமாவதி வந்து எட்டிப் பார்த்தாள். பரமசிவன் எழுந்து அவள் முன் வந்து நின்றான். இருவரும் அடுத்த அறைக்குச் சென்றார்கள். அங்கே மேஜையின் மீது சிற்றுண்டிகளும் காப்பியும் வைக்கப்பட்டிருந்தன. இருவரும் 'டென்னிஸ் டூர்ணமெண்ட்' விஷயமாகப் பேசிக் கொண்டே அருந்தினார்கள். காப்பியைக் குடித்த பின் திடீரென்று ஹேமாவதி பரமசிவனைப் பார்த்து "உங்களுக்கு விவாகம் ஆகிவிட்டதா?'' என்றாள். அந்தக் கேள்வி பரமசிவனைத் திடுக்கிடச் செய்தது. என்றாலும் அவனுக்கு அது வெகு இன்பமுண்டாக்கிற்று.

''இல்லை. எனக்கு இன்னும் விவாகமாகவில்லை. எனக்கு இஷ்டமில்லாத ஒரு பெண்ணை என் பெற்றோர்கள் மணமுடிக்க விரும்பினார்கள். நான் அதற்குச் சம்மதிக்கவில்லை" என்றான். "பேஷ்! நல்ல காரியம் செய்தீர்கள் நானும் அப்படித்தான். எனக்குப் பிடிக்காத ஒருவரை மணந்துகொள்ளச் சொல்லி என் தந்தை வற்புறுத்தினார். நான் மறுத்துவிட்டேன். வேறு மணமகனை எண்ணித் தான் தந்தை இப்போது வெளியூருக்குப் போயிருக்கிறார். நான் அவர் பார்க்கிற யாரையும் மணந்துகொள்ளப் போவதில்லை. நான் காதலிக்கிற ஒருவரைத்தான் நான் மணந்துகொள்ளப் போகிறேன்'' என்றாள் ஹேமாவதி. அதைக் கேட்ட பரமசிவனுடைய தலை கிறுகிறுத்து விட்டது. அவள் தன்னைத்தான் காதலிக்கிறாளாக்கும் என்று நினைத்து கிடைத்த சந்தர்ப்பத்தை விட்டுவிடக் கூடாது என்ற ஆத்திரத்தில் "நாமிருவரும் மணந்து கொள்ளலாமா?'' என்று கேட்டுவிட்டான். அதைக் கேட்ட ஹேமாவதிக்கு வியப்போ வருத்தமோ வந்து பரக்க விழித்துப் பரமசிவனைப் பார்த்து "என்ன திடீரென்று இப்படிக் கேட்டுவிட்டீர்களே! உங்கள் பந்தாட்டத் திறமையைக் கண்டு நான் உங்களிடத்தில் அன்பு காட்டினதனாலேயே நீங்கள் இப்படி நிச்சயித்து விடலாமா? நீங்கள் என்னை மணம் பேசத் தகுதியில்லாதவர் என்று நான் சொல்லவில்லை. இருந்தாலும் உங்களை நான்

மணந்துகொள்ள இந்தப் பத்து நாள் பழக்கம் போதுமா? உங்களைப்பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது. என்னைப் பற்றியும் உங்களுக்கு ஒன்றும் தெரியாது. அப்படியிருக்க இப்படி அவசரப்பட்டது சரியா?" என்றாள்.

"மன்னித்து விடுங்கள். நான் அவசரப்பட்டுத்தான் கேட்டுவிட்டேன்" என்று பரமசிவன் நாணமடைந்தான்.

"அதற்காகத் தாங்கள் வருத்தப்படவேண்டியதில்லை. தங்களை நான் மிகவும் மதிக்கிறேன். நான் விசாரித்தறிய வேண்டிய விஷயங்களை அறிந்து, நான் திருப்தியடைந்தால் தங்களையே மணந்துகொள்ளத் தடையில்லை. உண்மையான காதல் திடீரென்று உதிப்பதல்ல" என்று பேச்சை முடித்து எழுந்து விட்டாள்.

## 4

பின்னும் பதினைந்து நாள் பந்தாட்டப் பயிற்சி நடந்தது. ஹேமாவதி கொஞ்சங்கூட மாறுதலில்லாமலேயே பரமசிவனிடம் அன்பும் மரியாதையுமாக நடந்து கொண்டாள். ஆனால், பரமசிவனுக்குச் சிறிது அச்சம் வந்து விட்டது. அவள் தன்னைப் பற்றி விசாரித்தறிய வேண்டும் என்ற சொன்னதினால் தன்னுடைய தாய் தந்தையரை அவள் சந்திப்பாளோ என்ற அச்சம். அதனால் அவன் அவளிடத்தில் நடந்து கொண்ட மாதிரியில் சற்று மாறுதலுண்டாகிக் கூச்சமுற்றான்.

பதினைந்து நாட்களுக்குப் பின் மற்றொரு நாள் காலைவேளை டென்னிஸ் பயிற்சி ஆனபின் ஹேமாவதி, "உங்களுடன் கொஞ்சம் தனித்துப்பேச விரும்புகிறேன். பங்களாவிற்குப் போகலாம்" என்றாள். அவள் தன்னைப் பற்றி விசாரித்து முடித்து விட்டாளோ என்று நினைத்து மனம் ஊசலாடிக்கொண்டே பரமசிவன் ஹேமாவதியின் பங்களாவிற்கு அவளுடன் போனான்.

முன்போலவே சாப்பாடு முடிந்து பரமசிவன் படுத்துப் புரண்டு எழுந்தபின் சிற்றுண்டி பரிமாறப்பட்டது. அதை



உண்டபின் ஹேமாவதி, "நாம் கொஞ்சம் மனம் விட்டுப் பேசலாமா?" என்றாள். ஆஹா! பேசலாம்" என்றான்.'

"எப்படியோ உங்கள்மீது எனக்குப் பாசம் உதித்து விட்டது. ஆனால் கல்யாணம் செய்துகொள்ள உங்கள் மீது சில சந்தேகங்கள் உண்டாகியிருக்கின்றன. அவற்றைப் பற்றி என்னிடம் தாங்கள் ஒளிக்காமல் பேசினால் உங்களை மணந்து கொள்வதைப் பற்றித் தீர்மானிப்பேன்" என்றாள்.

"என்ன சந்தேகம்?" என்றான்.

"நீங்கள் இப்படி கல்யாணம் செய்து கொள்வதாகப் பொய்க் காதல் காட்டி, பல் பெண்களை ஏமாற்றுவதாகத் தெரிகிறது. உண்மைதானா?" என்றாள்.

"அப்படி ஒன்றுமில்லை. அது பொய்" என்றான்.

"சரி நீங்கள் வனஜாவைக் கல்யாணம் செய்து கொள்ள முயற்சி செய்து கொண்டிருப்பதாகச் சொல்லுகிறார்களே, அதென்ன?" என்றாள்.

அதைக் கேட்டவுடன் பரமசிவன் முகம் இருளடைந்தது. உடனே பதில் சொல்ல வாய்வரவில்லை. தட்டுக் கெட்டுத் தடுமாறி "நானும் வனஜாவும் வெகு நேசமாக இருப்பதைக் கண்டும் எங்கள் 'டென்னிஸ்' வெற்றியைக் கண்டும் பொறாமைப் படுகிறவர்கள் அப்படிச் சொன்னால் அதற்கு நானென்ன செய்வது?" என்றான்.

"சரி. அது போனாற் போகட்டும். சிங்கப்பூரிலிருக்கிற உங்கள் அத்தை மகள் காளியம்மாளை உங்களுக்கே மணமுடித்துக் கொள்வதாக உங்கள் தந்தை நெடுநாளைக்கு முன்னாலேயே சத்தியம் செய்து கொடுத்திருந்தாராமே. அந்தப் பெண்ணை ஏன் கைவிட்டீர்கள்" என்றாள்.

"எந்தக் காலத்திலேயோ என் தகப்பனார் சத்தியம் செய்தார் என்பதற்கு நானா குற்றவாளி?" என்றான்.

''காளியம்மாளைக் கல்யாணம் செய்து கொள்ள நீங்களும் சம்மதித்துதான் இருந்தீர்களாமே?'' என்றாள் ஹேமாவதி.

''நான் ஒன்றும் சம்மதிக்க வில்லை'' என்றான் பரமசிவன்.

''நீங்கள் சம்மதிக்க வில்லையா? உண்மையைச் சொல்லுங்கள்'' என்று இரைந்து கேட்டாள்.

''இல்லை. என் தகப்பனாரும் தாயாரும் அடிக்கடி சொல்லிக்கொண்டே யிருந்தார்கள். நான் அவர்களைத் தட்டிப் பேசாமல் இருந்தேன் என்பதைத் தவிர நான் சம்மதம் ஒன்றும் சொன்னதில்லை'' என்றான் பரமசிவன்.

''சம்மதிக்கவேயில்லையா? பொய் சொல்லுகிறீர்களே'' என்று ஹேமாவதி உடனே எழுந்துபோய் அங்கிருந்த ஒரு கைப்பெட்டியைத் திறந்து ஒரு கடிதத்தை எடுத்துக் கொண்டு வந்து அதைப் பரமசிவத்திடம் நீட்டி ''இது யார் எழுதிய கடிதம்? பார்த்துச் சொல்லுங்கள்'' என்றாள்.

அந்தக் கடிதம் முன் பரமசிவன் சிங்கப்பூரில் படித்துக் கொண்டிருந்த காளியம்மாளுக்கு எழுதிய காதல் கடிதம். தன்னுடைய கையால் எழுதித் தன் கையெழுத்திட்ட அந்தக் கடிதத்தைப் பார்த்துப் பரமசிவனுடைய பஞ்சேந்திரியங்களும் ஒடுங்கிவிட்டன. அந்தக் கடிதம் எழுதினதை அவனே முற்றிலும் மறந்துவிட்டான். இப்போது கடிதத்தைப் பார்த்த பிறகு தான் ஞாபகம் வந்தது. அந்தக் கடிதத்தை மறுக்க முடியவில்லை.

''ஆம். இது நான் எழுதினதுதான். இது எப்படி உங்களுக்கு வந்தது?'' என்று நாக் குளறக் கேட்டான் பரமசிவன்.

''எப்படி வந்தால் என்ன? உங்களைப் பற்றி விசாரித்ததில் இந்த உண்மை வெளியாயிற்று. இந்தக் கடிதத்தில் இவ்வளவு காதல் பேசி அந்தப் பெண்ணுக்கு உறுதி கூறி விட்டு அவளைக் கைவிட்டுவிட்ட உங்களை நான் கல்யாணம் செய்து கொண்டால் என் கதி என்ன ஆகும்?'' என்றாள்.



''முன் என்னமோ அவசரப்பட்டுத் தெரியாத்தனமாகக் காளியம்மாளுக்குக் கடிதம் எழுதி அதை மறந்து கூடப் போய் விட்டேன். உங்கள் விஷயத்தில் நான் அப்படி நடந்து கொள்ளமாட்டேன். இது சத்தியம் நம்புங்கள்'' என்று குளறினான்.

''உங்களை நான் நம்பமாட்டேன். நான் விசாரித்தறிந்த உண்மைகளிலிருந்து நீங்கள் காளியம்மாளைக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டியது தான் கடமையும் நியாயமும் ஆகும். ஹேமாவதியை நீங்கள் மணந்து கொள்ள முடியாது'' என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டு கலகலவென்று சிரித்தாள்.

அந்தச் சமயத்தில் பரமசிவனுடைய அத்தை புருஷனான ஆறுமுகம் அறைக்குள் தலையை நீட்டினார். அவரைக் கண்டதும் பரமசிவன் பதைத்தெழுந்து ''மாமா! இங்கே நான் வந்திருப்பது உங்களுக்கு எப்படித் தெரிந்தது?'' என்றான்.

''நானும் காளியம்மாளும் இரண்டு மாதமாக இந்த பங்களாவில்தான் இருக்கிறோம்'' என்றார் ஆறுமுகம். ''நீங்களும் காளியம்மாளுமா!'' என்று திகைத்து விழித்துத் திரும்பி ஹேமாவதியைப் பார்த்தான் பரமசிவன். ஹேமாவதி பின்னும் பலமாகச் சிரித்தாள். பரமசிவன் மேலும் தடுமாறித் தவித்தான். அவனிடத்தில் இரக்கங் கொண்டு ஆறுமுகம், ''இந்த ஹேமாவதிதான் என் காளியம்மாள்'' என்றார்.

பரமசிவன் மற்றதையெல்லாம் உடனே மறந்துவிட்டு அடக்க முடியாத ஆனந்தம் மேலிட்டு, ''ஹேமாவதி! உன் தீர்ப்பை ஒப்புக்கொள்ளுகிறேன். நான் காளியம்மாளுக்குச் செய்துவிட்ட குற்றத்தைப் பொறுத்துக்கொள். நீ சொன்னபடி காளியம்மாளையே கல்யாணம் செய்து கொள்கிறேன்'' என்றான். ''ரொம்ப சந்தோஷம். ஹேமாவதி வந்த வேலை முடிந்தது. இனி காளியம்மாளும் தாங்களும் சுகமாக வாழுங்கள்'' என்றாள் ஹேமாவதியாக நடித்த காளியம்மாள்.

''காளியம்மா! என்ன அபூர்வமான நாடகம் நடித்து விட்டாய். உன்னை மாமா நடராஜனுக்குக் கொடுத்திருப்பார் என்றல்லவோ எண்ணிக் கொண்டிருந்தேன்''. என்றான். ''அப்படியா நினைத்தீர்கள்! எங்கள் ஐயா என்னை யாருக்கு வேணுமானாலும் கொடுத்துவிட நினைக்கலாம். ஆனால் நான் சம்மதிப்பேனா? ஆண் பிள்ளைகள் தினம் ஒரு பெண்ணைக் காதலித்துப் பொய்க் கடிதங்கள் எழுதுவார்கள். ஆனால் பெண்களுடைய காதல் அப்படி மாறுவதல்ல. அவர்கள் காதலித்தால் காதலித்ததுதான். உங்கள் கடிதம் வருமுன்னாலேயே என் தந்தை சொன்னவற்றிலிருந்து உங்களை மணந்து கொள்ளச் சம்மதித்திருந்தேன். உங்கள் கடிதம் வந்த அன்றே உங்களைக் காதலித்து விட்டேன். அதன் பின் என் தந்தை உங்களைப் பார்த்துவிட்டு வந்து என் காதலை மாற்றிவிட முயன்றார். நான் சம்மதிக்கவில்லை. என் காதலும் கற்பும் என் சுதந்தரம்'' என்றாள் ஹேமாவதியாக நடித்த காளியம்மாள்.



# காதல் திருமணம்

நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம்